# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

பக்கங்கள் - 28

விலை - 30ரூபா

சுடர் 34 கதிர் 331 ஐப்பசி 09 ஆம் நாள் சனிக்கிழமை 26 ஒக்ரோபர் 2019 வள்ளுவர் ஆண்டு 2050


## கிளிநொச்சியில் தேர்தல் விதிமுறை மீறல்கள் 12 பதிவு

கிளிநொச்சி, ஒக். 26

கிளிநொச்சி மாவட்டத்தில் இதுவரை 12 தேர்தல் விதிமுறை

23

# ஒற்றையாட்சி, பௌத்தத்துக்கு முதலிடம் புதிய அரசமைப்பில் விட்டுக்கொடுக்கோம்

### கோத்தாவின் தேர்தல் அறிக்கையில் தெரிவிப்பு



**கொழும்பு, ஒக்ரோபர் 26**

**சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி ஆட்சிக்கு வந்த பின்னர் உருவாக்கும் புதிய அரசமைப்பில், ஒற்றையாட்சியையும், பௌத்தத்துக்கான முதலிடத்தையும் விட்டுக் கொடுக்காது என்று, அந்தக் கட்சியின் அரச தலைவர் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்சவின் தேர்தல் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

23

## உள் விவகாரங்களில் வெளிநாட்டவர் தலையிட இடமளிக்கவே முடியாது

### தேர்தல் அறிக்கையை வெளியிட்டு கோத்தபாய ராஜபக்ச சூளுரை

கொழும்பு, ஒக். 26

ஒற்றையாட்சி முறையைக் கொண்ட இலங்கையை பிளவுபடுத்தவும், நாட்டின் உள்ளக இறையாண்மையில் வெளிநாட்டு அமைப்புக்கள் தலையிடுவதற்கும் இடமளிக்க முடியாது. இவ்வாறு பொதுமக்கள் முன்னணியின் அரச தலைவர் வேட்பாளர் கோத்தபாய ராஜ

03

## அரச தலைவர் தேர்தல் சூட்டுடன் பொதுத் தேர்தல்

### மகிந்த ராஜபக்ச உறுதி



கொழும்பு, ஒக். 26

அரச தலைவர் தேர்தலை தொடர்ந்து பொதுத்தேர்தலை நடத்தி புதிய

06

## வாக்காளர் அட்டைகள் தபால் திணைக்களத்திடம் நேற்று ஒப்படைப்பு

கொழும்பு, ஒக். 26

எதிர்வரும் நவம்பர் மாதம் 16 ஆம் திகதி இடம்பெறவுள்ள அரச தலைவர் தேர்தலுக்கான வாக்காளர் அட்டைகள் நேற்று தபால் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டது. தபால் திணைக்களத்தால் வாக்காளர் அட்டைகள் நவம்பர் மாதம் 9 ஆம் திகதிக்குள் அனைத்து

03

## சொத்து விவரங்களை வெளியிடாத வேட்பாளர்கள்

கொழும்பு, ஒக். 26

அரச தலைவர் தேர்தலில் போட்டியிடும், 35 வேட்பாளர்களில் ஆறு வேட்பாளர்கள் தமது சொத்துக்கள் தொடர்பான விவரங்களை இன்னமும் சமர்ப்பிக்கவில்லை என்று தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

03

### இந்தியாவில் தடுத்துவைக்கப்பட்ட

## இலங்கைமீனவர்கள் 18 பேரும் விடுவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 26

இந்தியாவில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இலங்கை மீனவர்கள் 18பேரும் தீபாவளியைக் கருத்தில்கொண்டு

05

## தமிழ் பாடசாலைகளுக்கு திங்கட் கிழமை விடுமுறை

### கல்வி அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, ஒக். 26

முஸ்லிம் பாடசாலைகள் தவிர அனைத்து தமிழ் பாடசாலைகளுக்கும் நாளைமறுதினம் திங்கட்கிழமை விடுமுறை வழங்கப்பட்டுள்

05

## 5 கட்சிகளின் கூட்டத் திகதியில் திடீர் மாற்றம்

*பல்கலை. மாணவர் தலையீடு*

யாழ்ப்பாணம், ஒக். 26

5 கட்சிகளின் கூட்டம் எதிர்வரும் 30ஆம் திகதி நடைபெறும் என்று தீர்மானிக்கப்பட்டிருந்த நிலை

03

### கோத்தாவின் தேர்தல் அறிக்கையில்

## தமிழர்களின் வாக்குகளை கவர 17 வாக்குறுதிகள்

கொழும்பு, ஒக். 26

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் அரச தலைவர் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ச நேற்று வெளியிட்டுள்ள தேர்தல் அறிக்கையில் தமிழ் பேசும் மக்களின் வாக்குகளைக் கவர்வதற்கு 17 வாக்குறுதிகள் வழங்கப்பட்டுள்ளன. அதனை விட, தேசிய ஒற்றுமைக்கு வழிகூறும் ஜனநாயக ஆட்சி என்ற தலைப்பின் கீழும் சில வாக்குறுதிகளை

23

### கொழும்பில் 11 பேர் கடத்தல் வழக்கு:

## விசாரணையில் நிறைவேற்று அதிகாரத்தினர் தலையீடு

### நீதிமன்றில் அம்பலப்படுத்தியது சி.ஐ.டி.

கொழும்பு, ஒக். 26

கொழும்பு மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் 5 மாணவர்கள் உள்ளிட்ட 11 பேரை கடத்திச் சென்று கப்பம் பெற்றுக் கொண்டு காணாமல் ஆக்கிய சம்பவம் தொடர்பில் ஆரம்பம் முதலே விசாரணையாளர்களுக்கும் சாட்சியாளர்களுக்கும் நிறைவேற்று அதிகாரம் படைத்தோர் உள்ளிட்டோரால் பல்வேறு இடையூறுகள் ஏற்படுத்தப்பட்டதாக குற்றப் புலனாய்வுப் பிரிவு (சி.ஐ.டி) கோட்டை நீதிவான் ரங்க திஸாநாயக்கவுக்கு தெரி

03

### ஐந்து கட்சிகளின்

## கலந்துரையாடலில் பங்கேற்க விக்னேஸ்வரன் நிபந்தனை

### பல்கலைக்கழக மாணவர்கள் கலந்து கொள்ளவேண்டுமாம்

யாழ்ப்பாணம், ஒக். 26

ஐந்து கட்சிகளும் மீண்டும் கூடி நடத்தும் பேச்சில் எமது கட்சி கலந்து கொள்ள வேண்டுமாக இருந்தால், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் சிவில் சமூகத்தினர் பங்கேற்க வேண்டும் என்று வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும், தமிழ் மக்கள்

05

## மகிந்தவின் கூட்டமேடைக்கு அருகில் நடமாடிய முஸ்லிம் பெண்கள் கைது!

கொழும்பு, ஒக்.26


சாய்ந்தமருதில் எதிர்க்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்சவின் கூட்டம் நடக்கும் இடத்தில் சந்தேகத்துக்கு இடமாக நடமாடியதாகத் தெரிவித்து இரண்டு முஸ்லிம் பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். சாய்ந்தமருதில் நேற்று மாலை கூட்டம் நடைபெறும் மேடைக்கு அருகில் நடமாடினார்கள் என்று இரண்டு பெண்களும் கைதானார்கள். பர்தா அணிந்து நடமாடியதால் அவர்கள் சந்தேகத்தின் பேரில்

06

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேசும் படம்





# வில்லியாக களமிறங்கிய சமந்தா

'ஓ பேபி' படத்தை அடுத்து சமந்தா நடிப்பில் தற்போது '96' படத்தின் தெலுங்கு மறுதயாரிப்பு உருவாகியுள்ளது. இதில் சர்வானந்துக்கு ஜோடியாக நடித்து வருகிறார். இந்தப் படத்தின் வேலைகள் முடிந்து இறுதிக்கட்டப் பணிகள் நடைபெற்று வருகிறது.

இதை அடுத்து பல கதைகளைக் கேட்ட அவர், இன்னும் எந்த புதிய படத்திலும் கையெழுத்திடவில்லை. ஆனால், மனோஜ் பாஜ்பாய் நடித்த 'எ பேமிலி மேன்' என்ற இணைய தொடரில் நடிக்க ஒப்பந்தமாகி இருக்கிறார்.


இந்தத் தொடரின் முதல் பாகம் அண்மையில் வெளியானது. இந்தத் தொடரின் இரண்டாவது சீசனில் சமந்தா முக்கிய வேடத்தில் நடிக்கிறார். ஆனால் அவர் வில்லி வேடத்தில் நடிப்பதாகத் தற்போது தகவல் வெளியாகி உள்ளது.

நாங்கெல்லாம் அந்த காலத்துல தீபாவளிக்கு ஒரு மாசத்துக்கு முன்னே...




முறுக்கு, அதிரசம்லாம் சுட்டு வச்சு தின்னுட்டு திரிவோம்..😁😁😊

டேய் நீ எங்கடா இருக்க..😳😳😳



அன்புடன் கதிர்™

மனித மனங்களில் உள்ள வன்மம் அவர்களின் நிழல்களில் இருப்பதில்லை!

கோழியின் கிறுக்கல்!!@Kozhiyaar

என்னைப் பற்றிய உங்களின் தீர்ப்புக்கெல்லாம், நான் தண்டனை அனுபவிக்க முடியாது!!!

# பொறுமையாக கையாண்டால் சண்டைக்கு வாய்ப்பே இல்லை

புகழ்பெற்ற ஓவியர் மைக்கேல் ஏஞ்சலோ ஒருமுறை தன்னுடைய சிற்பக் கூடத்தில் மிகவும் கஷ்டப்பட்டு ஓர் ஓவியத்தை அழகாக செதுக்கி கொண்டிருந்தார். பல நாள்களாகப் பார்த்து பார்த்து எந்த குறையுமின்றி அந்தச் சிற்பத்தை செதுக்கி கொண்டிருந்தார்.

அப்போது அவருடைய ஓய்வுக் கூடத்துக்கு நண்பர்கள் மூவர் வந்தனர், அங்கிருந்த சிற்பங்களை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர்.

தன்னை மறந்து சிற்பங்களை செதுக்கி கொண்டிருந்த ஏஞ்சலோவிடம், இந்த சிலையின் மூக்கு சரியில்லை, கோணலாக உள்ளது, இதை கொஞ்சம் சரிபண்ணுங்க என்றனர்.

அந்த சிற்பத்தைத் திரும்பவும் பார்த்தார், பிறகு சுத்தியலை எடுத்துக் கொண்டு மேலே ஏறி சரி பண்ணினார்.

இப்பொழுது அந்தச் சிலையை பார்த்த நண்பர்கள் "ஆஹா பிரமாதம்!" என்றனர்.

[illegible] எனக்குத்தேவை. குறைகளைச் சொல்வதன் மூலம் என்னால் சரி செய்யமுடிகிறது என்று தெரிவித்தார்.

உண்மையில் நடந்தது என்ன தெரியுமா? அந்தச் சிலையில் எந்த குறையும் இல்லை என்பது ஏஞ்சலோவுக்கு நன்றாகத் தெரியும். எனவே சுத்தியலையும், உளியையும் வைத்துக் கொண்டு சரிசெய்வது போல் நடித்துக் கொண்டிருந்தார்.

உளியின் சத்தத்துக்கு ஏற்ப சலவைக் கற்களைக் கீழே போட்டார். அதைக் கண்ட நண்பர்கள் உண்மையிலேயே மூக்கை சரி பண்ணியதாக நினைத்துக் கொண்டனர்.

புகழின் உச்சியில் இருந்த மைக்கேல் ஏஞ்சலோ நினைத்திருந்தால், என்னுடைய சிலையில் குறையா? என்று கேட்டிருக்கலாம்.

ஆனால் அப்படிக் கேட்டு நண்பர்களின் மனதை புண்படுத்தாமல் நடந்து கொண்டார்.


எந்த விடயத்தையும் பொறுமையாக கையாண்டால் சண்டைக்கு வாய்ப்பே இல்லை.


ஏன் இவ்ளோ லேட்? சாரிங்க.. புடவை செலக்ட் பண்ற ஆர்வத்தில வாட்ச்ல டைமையே பாக்கலைங்க..




சரி...பக்கத்தில இருந்த காலண்டரையுமா பார்க்கல... நீ கடைக்கு போய் 3 நாள் ஆச்சுடி.....😍😍😍🤣🤣🤣

## சிந்திக்க வைக்கும் சித்திரங்கள்









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5 கட்சிகளின்...

யில் திடீரென அது நாளை மறுதினம் திங்கட் கிழமைக்கு மாற்றப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது. இந்த மாற்றத்தை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினரே மேற்கொண்டுள்ளதாக அறியமுடிகின்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் தமிழ்த் தேசியக் கட்சிகளை இணைத்து பொது இணக்கப்பாட்டை ஏற்படுத்தும் முயற்சி முன்னெடுக்கப்பட்டிருந்தது. 5 கட்சிகள் இணைந்து பொது ஆவணத்தையும் தயாரித்திருந்தன. 5 கட்சிகளும் பிரதான வேட்பாளர்களைச் சந்தித்துப் பேசுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் கடந்த புதன் கிழமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் கூட்டம் இடம்பெற்றிருந்தது. அதில் அரச தலைவர் தேர்தல் தொடர்பில் ஆராயப்பட்டது.

இதன் பின்னர், 5 கட்சிகளின் கூட்டத்தை கொழும்பில் நேற்றுமுன்தினம் நடத்த தீர்மானிக்கப்பட்டது. இந்தக் கூட்டத்தில் ஈ.பி.ஆர்.எல்.எவ். மற்றும் தமிழ் மக்கள் கூட்டணி என்பன கலந்து கொள்ளவில்லை. கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் மூன்றுமே கலந்து கொண்டிருந்தன. இதனையடுத்து எதிர்வரும் 30ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் 5 கட்சிகளின் தலைவர்களும் சந்தித்துப் பேச முடிவு செய்யப்பட்டிருந்தது.

இந்த நிலையில் திடீரென யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் நேற்றைய தினம், சந்திப்புக்களில் கலந்து கொண்ட கட்சிகளின் பிரதிநிதிகளைத் தொடர்பு கொண்டு நாளை மறுதினம் 28ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் சந்திப்புக்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் வெளிநாடு சென்றுள்ள நிலையில், அவர் எதிர்வரும் 29ஆம் திகதியே நாடு திரும்புவார் என்று தெரிவிக்கப்படுகின்றது. அதற்கிடையில் இந்தச் சந்திப்புக்கான திகதி தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(ஒ.5,105)

## உள்...

பக்ச தெரிவித்தார்.

தனது தேர்தல் அறிக்கையை வெளியிட்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மக்களால் மக்களுக்கு உருவாக்கிக் கொள்ளப்பட்ட தேர்தல் அறிக்கையாகவே இதனைக் கருத வேண்டும். 25 ஆயிரம் கிராமங்களில் வாழும் மக்களின் கருத்துக்களும் கொள்கைத் திட்டத்தில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளது. நிச்சயம் இந்தத் திட்டம் வெற்றிப் பெறும்.

இலங்கை ஒற்றையாட்சி முறையைக் கொண்ட நாடு. நாட்டைப் பிளவுப்படுத்துவதற்கும், இறையாண்மை விவகாரங்களில் தலையிடுவதும் சாத்தியமற்ற விடயமாகும். தேசிய பாதுகாப்புக்கும், தேசிய பொருளாதாரத்துக்குமே எமது அரசில் முன்னுரிமை கொடுக்கப்படும்.

'உறுதியான நோக்கம்' தொழில் புரியும் நாடு என்ற தொனிப்பொருளை மையப்படுத்திய கொள்கைகள் அரசியலுக்கு அப்பாற்பட்டு துறைசார் நிபுணர்களால் உருவாக்கப்பட்டுள்ளது. தேசிய பொருளாதாரத்தை மேம்படுத்தும் திட்டங்கள் கொள்கை அறிக்கையில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

நாட்டில் ஒரு சட்டத்தையே அனைவரும் பின்பற்ற வேண்டும். பல்லின சமூகம் வாழும் நாட்டில் பல்வேறு சட்டங்கள் செயற்பாட்டில் காணப்படும் போது அங்கு தேசிய நல்லிணக்கம் காணப்படாது. ஒரே நாடு, ஒரே சட்டம் என்பதே எமது கொள்கை. நீதித்துறையின் சுயாதீனத்தன்மை தொடர்ந்து பேணப்படும். நீதிமன்றங்களில் இன்றும் நிலுவையில் உள்ள வழக்குகள் துரிதமான முறையில் தீர்க்கப்படும். அரசின் வரிச்சுமையால் நாட்டு மக்கள் பொருளாதார நெருக்கடிகளுக்கு உள்ளாகியுள்ளார்கள். பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி வழங்குதவற்கான வழிமுறைகள் முதல் காலாண்டுக்குள் முன்னெடுக்கப்படும். தேசிய வியாபாரத்தை ஊக்குவிப்பதற்கு பெறுமதி சேர் வரி 8 சதவீதமாக குறைக்கப்படும். அத்துடன் அரச மற்றும் தனியார் துறை ஊழியர்களுக்கு முறையற்ற விதத்தில் விதிக்கப்பட்டுள்ள வரி நீக்கப்படும்.

பாரம்பரிய கல்வி முறையில் மாற்றம் ஏற்படுத்தப்படுதல் அவசியம். பொருளாதாரத்துக்கு வலுச் சேர்க்கும் கல்வி முறைமையை இளம் தலைமுறையினர் மத்தியில் அரசு கொண்டு செல்லும். உயர்தர பரீட்சை தோற்றும் அனைவருக்கும் பல்கலைக்கழகம் செல்லுவதற்கான கொள்கை திட்டம் கல்வி துறையில் ஏற்படுத்தப்படும்.

எமது அரசில் தேசிய நிதி மோசடிக்கு ஒரு போதும் இடம் கிடையாது. மோசடியாளர்கள் எவ்வித பாரபட்சமும் இன்றி தண்டிக்கப்படுவார்கள். நாட்டு மக்கள் மத்தியில் அரசியல் மற்றும் மொழி, இன, மத வேறுபாடு காணப்படுகின்றது. அது அவரவர் தனிப்பட்ட விருப்பமாகும். ஆனால் நாட்டு மக்கள் என்ற அடிப்படையில் இலங்கையர் என்ற தேசப்பற்றுடன் வாழ வேண்டும்.

30ஆண்டு காலப் போரை முடிப்பேன் என்று வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றினேன். தற்போது தேர்தல் அறிக்கை ஊடாக வழங்கியுள்ள வாக்குறுதிகள் அனைத்தையும் நிறைவேற்றுவேன். மத கோட்பாடுகளில் குறிப்பிடப்பட்டுள்ள அரச நிர்வாக செயலொழுங்கு முறையாகச் செயற்படுத்தப்படும் - என்றார்.

(ஒ.5)

## விசாரணையில்...

வித்தது.

ஐந்து மாணவர் உள்ளிட்ட 11 பேர் கடத்திக் காணாமல் ஆக்கப்பட்ட விவகாரம் தொடர்பிலான வழக்கு விசாரணைகளின் போது நீதிமன்றில் பாதிக்கப்பட்ட தரப்பு சட்டத்தரணி அச்சலா செனவிரத்ன முன்வைத்த வாதங்களுக்கு பதிலளிக்கும் போதே, விசாரணை அதிகாரியான நிசாந்த சில்வா இதனை தெரிவித்தார்.

இது குறித்த வழக்கு விசாரணைகள் நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்ட போது, சட்ட மா அதிபர் சார்பில் 16 ஆவது சந்தேக நபரான வசந்த கரன்னாகொடவை நீதிமன்றுக்கு வருமாறு அழைப்பாணை விடுப்பது தொடர்பில் விளக்கமளிக்கப்படும் என்று எதிர்ப்பார்க்கப்பட்ட போதும், அந்தத் திணைக்களத்தின் சார்பில் எவரும் மன்றில் முன்னிலையாகவில்லை. பாதிக்கப்பட்ட தரப்பின் சட்டத்தரணி அச்சலா செனவிரத்ன திறந்த நீதிமன்றில் தனது வாதங்களை முன்வைத்தார்.

'16ஆவது சந்தேகநபர் வசந்த கரன்னாகொடவைக் கைது செய்ய கீழ் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்த நிலையில், கரன்னகொட தன்னை கைது செய்வதை தடுக்குமாறு உயர் நீதிமன்றை அணுகினார். அப்போது உரிய விடயங்களை உயர் நீதிமன்றுக்கு அறிவித்து கரன்னாகொடவைக் கைது செய்யும் நடவடிக்கையை முன்னெடுக்காது சட்ட மா அதிபர் திணைக்களம், தற்போது சி.ஐ.டி. அதிகாரிகளுக்கு நீதிமன்றம் ஊடாக அழைப்பாணை கோரி கரன்னகொடவை மன்றுக்கு அழைக்குமாறு கூறுகின்றனர்.

சாதாரண மனிதன் மீது கொலை குற்றச்சாட்டு சுமத்தப்பட்டால், அவருக்கு பிணை கூட கிடைக்காது. இங்கு கரன்னகொடவுக்கு மேல் நீதிமன்றில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யும் வரை கைது செய்யக் கூட முடியாது. இதன்பிறகு கொலை குற்றச்சாட்டுக்கு உள்ளாகும் ஒருவருக்கு, குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்படும் வரை மேலும் ஓரிரு கொலைகளைச் செய்துகொண்டு வீட்டில் இருக்கலாம். சட்ட மா அதிபர் திணைக்களம் சி.ஐ.டி. அதிகாரிகளையே இவ்வாறான கோரிக்கைகள் ஊடாக அசௌகரியப்படுத்துகிறது. தேவையான போது ஒரே நிலைப்பாட்டில் இருக்காமல் பின்னர் தமது குறைகளை மறைத்துக்கொள்ள இவ்வாறு செயற்படுகின்றனர்' என அச்சலா சட்டத்தரணி அச்சலா செனவிரத்ன வாதிட்டார்.

திறந்த மன்றில் பேசிய நீதிவான் ரங்க திசாநாயக்க, இது பந்தை மாற்றும் ஒரு நடவடிக்கை. உயர் நீதிமன்றை மீறி தீர்மானம் எடுக்க என்னால் முடியாது. நான் ஒரு போதும் சட்ட விரோத உத்தரவுகளை பிறப்பிக்க மாட்டேன். தேவையான போது தேவையான நிலைப்பாட்டை எடுக்காது ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஒவ்வொரு நிலைப்பாட்டில் இருந்தால் இவ்வாறான நிலைதான் ஏற்படும். சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு இம்மன்றுக்கு வந்து கோரிக்கை முன்வைக்க முடியும். அப்போது நான் அது தொடர்பில் ஆராயலாம்' என தெரிவித்தார்.

இதனையடுத்து சட்டத்தரணி அச்சலா செனவிரத்ன தொடர்ந்து தனது நிலைப்பாட்டை தெளிவுபடுத்த ஆரம்பித்தார்.

'இல்லை. இத்தனைக்கும் சட்ட மா அதிபர் சார்பில் எவரும் அவ்வாறான கோரிக்கையுடன் மன்றுக்கு வரப்போவதில்லை. அவர்களுக்கு இந்த முறைப்பாடு மீது அவ்வளவு அக்கறை இல்லை. சந்தேக நபர் ஒருவரை இந்த விவகாரத்தில் கைது செய்ய முற்படும் போதும் அல்லது இந்த விவகாரத்தில் பாதிக்கப்பட்டவர்களை கருத்தில் கொண்டும் அவர்கள் ஒரு போதும் செயற்பட்டதில்லை. முறைப்பாட்டாளர் தரப்புக்கு உரித்தான விடயம் ஒன்றின் தெளிவைப் பெற அறிவித்தல் விடுத்தே அவர்களை நீதிமன்றுக்கு அழைக்க வேண்டியிருந்தது.

இந்த வழக்கில் தற்போது இரு சாட்சியாளர்கள் உயிரிழந்தும் காணாமல் போயும் உள்ளனர். ஒருவரின் உயிரிழப்புக்கு காரணம் நீரில் மூழ்கலாகும். கடற்படை வீரர் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்தார் என்பதை சாதாரணமாக எப்படி எடுத்துக்கொள்வது. இவ்வழக்கில் விஜயகாந்தன் எனும் சாட்சியாளர் தற்போது காணாமல் போயுள்ளார். அந்த சாட்சியாளர் இம்மன்றுக்கு அழைத்து வரப்பட்டு அவரது சாட்சியம் மாற்றப்பட்டே கைதானோர் பிணையைப் பெற்றுக்கொன்டனர். இன்று அவர் காணாமல் போயுள்ளார். இது தான் சாட்சியாளர்களை வேட்டையாடுவது. அதனால் இதனை உங்கள் கவனத்துக்கு கொண்டுவருகின்ரேன். உரிய நடவடிக்கைகளை எடுங்கள்' என்றார்.

இதனையடுத்து சட்டத்தரணி அச்சலா சென்விரத்ன முன்வைத்த விடயங்களுக்கு விசாரணை அதிகாரி பொலிஸ் பரிசோதகர் நிசாந்த சில்வா பதிலளிக்கும் விதமாக தெளிவுபடுத்தினார்.

'உயிரிழந்துள்ள செனவிரத்ன எனும் சாட்சியாளர் இவ்வழக்கில் மிக முக்கியமான சாட்சியாளர். அவரது உயிரிழப்புத் தொடர்பில் நாம் தேடிப் பார்த்தோம். அது சந்தேகத்துக்கு இடமான உயிரிழப்பு அல்ல. அவரது மனைவியின் வாக்கு மூலம், அரச சட்ட மருத்துவ அதிகாரியின் சாட்சியம் ஊடாக அதனை நாம் உறுதி செய்தோம். எனினும் செனவிரத்ன, சி.ஐ.டி.க்கு வாக்கு மூலம் வழங்கிய பின்னர் இவ்வழக்கின் 2ஆவது சந்தேக நபரான அப்போதைய கன்சைட் சித்திரவதைக் கூட பொறுப்பாளர் கொமாண்டர் ரணசிங்க தொலைபேசியில் குறித்த சாட்சியாளரை அச்சுறுத்தியுள்ளார். அவரையும் அவர் குடும்பத்தையும் கொலை செய்வதாக மிரட்டியுள்ளார். இது தொடர்பில் செனவிரத்னவின் மனைவி எமக்கு வாக்கு மூலம் அளித்துள்ளார்.

உண்மையில் பாதிக்கப்பட்டுள்ள இந்த அப்பாவி பெற்றோர்களின் பொறுமை காரணமாகவே இம்மன்றில் எந்த பிரச்சினையும் ஏற்படாமல் விசாரணைகள் இவ்வளவு வருடங்களாகவும் நடக்கின்றன. இதுவே இம்மன்றின் சட்டத்தரணி ஒருவரின் பிள்ளைக்கோ வேறு ஒருவரின் பிள்ளைக்கோ இந்த கொடுமை நேர்ந்திருந்தால் நிலைமை மாற்றமாக இருந்திருக்கும்.

வயிறுகளை வெட்டி, குடல்களை வெளியே எடுத்து கடலுக்குள் சடலங்களை மூழ்கடித்து கொல்வதென்பது இலகுவான குற்றமாக எடுத்துக்கொள்ள முடியாதது. எமக்கு இந்த விசாரணைகளை ஆரம்பித்தது முதல் நிறைவேற்று அதிகாரம் உள்ளவர்கள் இடையூறு செய்தனர். தற்போதும் இடையூறு ஏற்படுத்துகின்றனர். சந்தேக நபர்களுக்கு வரப்பிரசாதம், பதவி உயர்வு கொடுக்கும் நிலையில், விசாரணையாளர்களான எம்மையும் சாட்சியாளர்களையும் அச்சுறுத்துகின்றனர்.

கடத்தப்பட்டவர்களில் அடங்கும் ஜோன் ரீட்டை கடத்தும் போது சேர்த்து எடுத்து செல்லப்பட்டிருந்த வாகனத்தையும் கடற்படையினர் பயன்படுத்திய நிலையில் மீட்டு அதனையும் இம்மன்றில் ஒப்படைக்கின்றோம்' என்று தெரிவித்தார்.

இதனையடுத்து சாட்சியாளர்கள் தொடர்பில் சிறப்புக் கவனமெடுத்த நீதிவான், அனைத்து சாட்சியாளர்கள் தொடர்பிலும் அவதானமாக இருங்கள். அவர்களுக்கு ஏதும் ஒரு அச்சுறுத்தல், அழுத்தம் ஏற்படுமாக இருப்பின் அது தொடர்பில் உடனடியாக நீதிமன்றுக்கு அறிவித்து தேவையான நடவடிக்கையை உடன் எடுங்கள், என்று சி.ஐ.டி.க்கு உத்தரவிட்டார். வழக்கை எதிர்வரும் நவம்பர் 6 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

(ஒ.5)

## வாக்காளர்...

வாக்காளர்களுக்கும் விநியோகிக்கப்படும். குறித்த திகதிக்குள் வாக்காளர் அட்டைகள் கிடைக்காதவர்கள் சம்பந்தப்பட்ட தபால் திணைக்களங்களுக்கு சென்று தமது அடையாளத்தை உறுதிப்படுத்தி வாக்காளர் அட்டைகளை பெற்றுக் கொள்ளலாம்.

(ஒ.5)

## சொத்து...

தேர்தல்கள் சட்டத்தின்படி, வேட்பாளர்கள், தமது சொத்துக்களின் விவரங்களைச் சமர்ப்பிக்க வேண்டும். எனினும், இம்முறை போட்டியிடும் 35 வேட்பாளர்களில் 6 பேர் சொத்து விவரங்களை வெளியிடவில்லை.

சொத்து விவரங்களை வெளியிடாத வேட்பாளர்களில் ஐவர், சுயேச்சைகள், ஒருவர் அரசியல் கட்சியின் வேட்பாளர். சொத்துக்களின் விவரங்களை வெளிப்படுத்தாத வேட்பாளர்களுக்கு எதிராக தேர்தல்கள் ஆணைக்குழுவால் வழக்குத் தொடரமுடியும்' -என்றார்.

(ஒ.5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 20ஆம் ஆண்டு நினைவஞ்சலி

**அமரர் சுவாமிநாதர் சிறிபாஸ்கரன்**




பிறப்பு 07.01.1932 இறப்பு 26.10.1999

அன்னாரின் அஞ்சலி நிகழ்வு இன்று (26.10.2019) சனிக்கிழமை சிறிபாஸ்கரன் ஞாபகார்த்த மண்டபத்தில் (R.D.S மண்டபம்) பிற்பகல் 4 மணிக்கு நடைபெறும்.

M.R.D.S, **திருமதி பாலாம்பிகை சிறிபாஸ்கரன் (மனைவி)**

## ஈரவிழிகளுடன் ஓராண்டு நினைவஞ்சலி



**மாணிக்கம் மகேந்திரம்**

திதி: அபரபக்க சதுர்த்தசி

நம் குடும்பக் கோவிலிலே
விடி வெள்ளியாய் உதித்த
கோமானே!
உங்கள் ஞாபகத்துளிகளை
நெஞ்சில் நிறைத்து வைத்து
வாடுகின்றோம்...
நம்மை பிரித்து வைத்த
விதியை
சபித்துக் கொண்டே
வாழுகின்றோம்....

தாய் மடியில் 08.08.1954 இறைவனடியில் 06.11.2019

தம்பாலை, அச்சுவேலி **குடும்பத்தினர்**

## காணி விற்பனைக்கு

செல்வச்சந்நிதி ஆலயத்திலிருந்து காங்கேசன்துறைக்குச் செல்லும் காப்பெற் வீதியில் 1½ Km தூரத்திலும் யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்திலிருந்து 3½ Km தூரத்தில் இடைக்காட்டில் 40 பரப்புக் கொண்ட இக்காணி கடலோரத்தில் அமைந்துள்ளது. இக்காணிக்கு சொந்தமான தனிப்பட்ட பாதை உண்டு. பார்வையிடும் நேரம் 8 - 4 மணி வரை. (32786)

**0776540935**

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
### பேராசிரியர் அழகையா துரைராசா தங்கப்பதக்கம்

பேராசிரியர் அழகையா துரைராசா தங்கப்பதக்கத்தினை வழங்கும் பொருட்டு கல்வியாண்டு 2015/2016 இல் பட்டப்படிப்பில் முதலாம் வகுப்பில் அல்லது இரண்டாம் வகுப்பு மேற்பிரிவில் சித்தியெய்தி எதிர்வரும் பட்டமளிப்பு (பகுதி-II) வைபவத்தில் இளமாணி பட்டம் அளிக்கப்படவிருக்கும் பின்வரும் பீடங்களைச் சேர்ந்த மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

I. கலைப்பீடம்
II. விஞ்ஞான பீடம்
III. முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடம்
IV. மருத்துவ பீடம்

விண்ணப்பப்படிவங்களை கீழ்காணும் முகவரியிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

01. உதவிப் பதிவாளர். கல்வி விவகாரங்கள் மற்றும் வெளியீட்டுக் கிளை.யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
02. www.jfn.ac.lk இணையத்தளம்.

விருதுகள்:- பல்கலைக்கழக மட்டத்தில் சகலதுறைகளிலும் சிறப்பாக செயற்பட்டமைக்காக ஒரு பதக்கமும். பீட மட்டத்தில் சகல துறைகளிலும் சிறப்பாகச் செயற்பட்டமைக்காக ஒவ்வொரு பதக்கமும் வழங்கப்படும்.

**முடிவுத் திகதி: 11.11.2019 (திங்கட்கிழமை)**

சரியான பொருத்தமான தகவல்களை உள்ளடக்காததும் தெளிவற்றதும் பூரணப்படுத்தப்படாததும் மற்றும் முடிவுத் திகதிக்குப் பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் கருத்திற் கொள்ளப்படமாட்டாது.

**பதிவாளர்.**

## கார் விற்பனைக்கு

Maruthi Suzuki Alto 800 LXI Sports CAJXXXX (2015) Maruthi Suzuki Wagon Rvxi HX XXXX (2004)

**தொடர்புகளுக்கு:- 077 4242 327**

## தென்னம்பிள்ளை விற்பனைக்கு

நல்லின தென்னம் நாற்றுக்களும், குறுகிய காலத்தில் பயன்தரக் கூடிய நாற்றுக்களும் விற்பனைக்குண்டு. (00717)

**0776592044**

## வகுப்புகள்


வணிகக்கல்வி A/L 2020, A/L 2021க்கான பிரத்தியேக வகுப்புகள் தனியாகவும், குழுவாகவும் கற்பித்து தரப்படும். (28930)

**0762903600**

## ES Printers

357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
esprintersjaffna@gmail.com
021 492 7471, 021 492 7472

## இப்பொழுது திரையில்



வடக்கு மற்றும் கிழக்கு திரையரங்குகளில்

| | |
|---|---|
| MAJESTIC Jaffna | RAJA Ja |
| CHELVA Jaffna | SARU Point Petro |
| VIJAYA Batticaloa | KIVESH Mankadu |
| SARASWATHI Trinco | NELSON Trinco |
| SHANTHI Batticaloa | BALA Chavakacheri |
| SELLAM Chenkalady | WELINGTON Kantale |
| VASANTHI Vavuniya | GK CINEMA Kalmunai |
| ARCHANA Akkraipattu | NAGAMS Chunnagam |

மற்றும் நாடெங்கிலும் உள்ள ஏனைய திரையரங்குகளிலும்

Distributed by: Cinema Entertainments (Pvt) Ltd (CEL)

## சிறிநதியா வாடிக்கையாளர்களுக்கு விசேட செய்தி

**NSR திருமண மண்டபம் மற்றும் நடராஜா பரமேஸ்வரி**

ஆகிய திருமண மண்டபங்களில் நிகழ்வுகளை நடாத்த விசேட விலைக்கழிவுகள் வழங்க நிர்வாகம் தீர்மானித்துள்ளது என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.



### NSR WEDDING HALL & ROOMS


No. 01, Stanley Road Junction, Jaffna. Tel: 021 222 4452 / 021 221 7786




**இல.01, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.**
**தொ.பே - 021 222 4452 | 021 221 1332, 021 221 7786 | 021 222 2709**

## நடராஜா பரமேஸ்வரி
### திருமண மண்டபம்







**465/26, பருத்தித்துறை வீதி, நல்லூர், (மனோன்மணி அம்மன் ஆலயம் அருகாமையில்)**
**தொ.பே - 021 222 1662 | 021 222 2709**

எமது வாடிக்கையாளர்களே!
2020 ஆம் ஆண்டுக்கான முற்பதிவுகள் ஆரம்பமாகியுள்ளதால். உடன் உங்கள் முற்பதிவுகளை மேற்கொண்டு விசேட விலைக் கழிவுகளையும். சலுகைகளையும் பெற்றுக்கொள்ளுங்கள்.

**முற்பதிவுகளுக்கு முந்துங்கள்**
விவரங்களுக்கு:
**077 6417 679**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலையாள்கள் தேவை

யாழ் நகரில் புதிதாக ஆரம்பிக்க உள்ள Hotel and Restaurant க்கு பின்வரும் பதவிகளுக்கு வேலையாளர்கள் தேவை.

1. **ரொட்டி தயாரிப்பாளர்**
2. **சமையலாளர்**
3. **உணவு பரிமாறுபவர்**
4. **துப்புரவு தொழிலாளி**

தங்குமிட வசதி உண்டு.

**077457 6401, 077 330 1980**

## வீட்டுடன் காணி விற்பனைக்கு

யாழ். வலி வடக்கு பிரதேசசபைக்கு உட்பட்ட மல்லாகம் பங்களா ஒழுங்கையில் வீட்டுடன் சேர்ந்த காணி விற்பனைக்கு உண்டு. மொத்தம் 9 பரப்புக்காணி வீட்டுடன் உடனடி விற்பனைக்கு **Hotel/ office/ Building Construction** இற்கு உகந்தது. தரகர் தேவையில்லை.
தொடர்புகளுக்கு
**கொழும்பு - 077 230 6642 , மல்லாகம் - 076 495 6480**
நேரடியாகவந்து பார்வையிடலாம்.

விளம்பர தொடர்புகளுக்கு
உதயன் advt@uthayan.com, 021493 1111


# புதுக்குடியிருப்பு பிரதேசசபை, புதுக்குடியிருப்பு.
# மீள்கேள்வி அறிவித்தல்-2020

கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்ட நிலையங்களை 01.01.2020 இலிருந்து 31.12.2020 வரையான காலப்பகுதிக்கு நடாத்துவதற்காக குத்தகைக் கேள்விகள் கீழ் காட்டப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைய கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம்வழங்கும் காலம் :- 28.10.2019 முற்பகல் 9.00 மணிதொடக்கம் 05.11.2019 மு.ப 12.00 மணிவரை
(அலுவலக நாள்களில் மட்டும்)

கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி :- 2019.11.06 மு.ப 11.00 மணிவரை

கேள்வி திறக்கப்படும் திகதி :- 2019.11.06 மு.ப. 11.30 மணிக்கு

| இல | குத்தகை வகை | மீளளிக்க முடியாத கேள்விப்படிவ கட்டணம் (NBT,VAT நீங்கலாக) | மீளளிக்க கூடிய கேள்வி வைப்புப்பணம் (NBT,VAT நீங்கலாக) | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த கேள்வித் தொகை (NBT,VAT நீங்கலாக) |
|---|---|---|---|---|
| | புதுக்குடியிருப்பு உப அலுவலகம். | | | |
| 1 | புதுக்குடியிருப்பு பொதுச்சந்தையும் துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையமும் (விற்பனை நிலையங்கள் நீங்கலாக) | *1,000.00* | 54,500.00 | 5,446,084.00 |
| 2 | புதுக்குடியிருப்பு பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | *1,000.00* | 15,000.00 | 1,487,900.00 |
| 3 | புதுக்குடியிருப்பு பொதுச்சந்தை கோழிறைச்சிக்கடை | *1,000.00* | 20,000.00 | 1,942,000.00 |
| 4 | உடையார்கட்டு பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | *1,000.00* | 5,500.00 | 513,225.00 |
| 5 | உடையார்கட்டு பொதுச்சந்தை கோழியிறைச்சிக்கடை | *1,000.00* | 2,000.00 | 167,000.00 |
| 6 | விசுவமடு பொதுச்சந்தை (விற்பனை நிலையங்கள் நீங்கலாக) | *1,000.00* | 14,500.00 | 1,400,000.00 |
| 7 | விசுவமடு பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | *1,000.00* | 6,000.00 | 575,000.00 |
| 8 | விசுவமடு பொதுச்சந்தை கோழியிறைச்சிக்கடை | *1,000.00* | 7,000.00 | 665,000.00 |
| 9 | இரணைப்பாலை மாட்டிறைச்சிக்கடை | *1,000.00* | 3,000.00 | 270,000.00 |
| 10 | மந்துவில் பொதுச்சந்தை | *1,000.00* | 1,500.00 | 101,101.00 |
| 11 | மந்துவில் மாட்டிறைச்சிக்கடை (மட்டுப்படுத்தப்பட்டுள்ளது) | *1,000.00* | 1,000.00 | 24,250.00 |
| 12 | மந்துவில் கோழியிறைச்சிக்கடை (மட்டுப்படுத்தப்பட்டுள்ளது) | *1,000.00* | 1,000.00 | 25,100.00 |
| | ஒட்டுசுட்டான் உப அலுவலகம். | | | |
| 1 | கற்சிலைமடுபொதுச்சந்தை (விற்பனை நிலையங்கள் நீங்கலாக) | *1,000.00* | 1,500.00 | 91,170.00 |
| 2 | கற்சிலைமடு பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | *1,000.00* | 1,500.00 | 100,350.00 |
| 3 | முத்துஐயன்கட்டு இடதுகரை பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | *1,000.00* | 1,000.00 | 50,850.00 |
| 4 | ஒட்டுசுட்டான் பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | *1,000.00* | 2,000.00 | 153,000.00 |
| 5 | ஒட்டுசுட்டான் பொதுச்சந்தை கோழியிறைச்சிக்கடை | *1,000.00* | 4,500.00 | 422,500.00 |
| 6 | கற்சிலைமடு கோழியிறைச்சிக்கடை | *1,000.00* | 3,000.00 | 255,500.00 |
| 7 | ஒட்டுசுட்டான் ஆட்டிறைச்சிக்கடை | *1,000.00* | 1,000.00 | 21,375.00 |
| 8 | ஒட்டுசுட்டான் கருவாட்டுக்கடை | *1,000.00* | 1,000.00 | 5,643.00 |
| | ஒலுமடு உப அலுவலகம். | | | |
| 1 | திருமுறிகண்டி கட்டண கழிப்பறை | *1,000.00* | 1,000.00 | 86,000.00 |
| 2 | மாங்குளம் மாட்டிறைச்சிகடை | *1,000.00* | 1,000.00 | 55,791.00 |
| 3 | மாங்குளம் ஆட்டிறைச்சிக்கடை | *1,000.00* | 1,000.00 | 21,375.00 |
| 4 | மாங்குளம் கருவாட்டுக்கடை | *1,000.00* | 1,000.00 | 5,143.00 |

நிபந்தனைகள்.

1. கேள்விப்பத்திரங்கள் இருபிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப் பிரதிகளை **தலைவர், பிராந்திய பெறுகைக் குழு, புதுக்குடியிருப்பு பிரதேசசபை, புதுக்குடியிருப்பு** என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் **கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு** பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும் அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடுதல் வேண்டும். இரண்டாவது பிரதியை **பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், முல்லைத்தீவு** என்ற முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.
2. எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு பூரண அதிகாரமுண்டு. ஏற்றுக் கொள்ளக்கூடிய குறைந்த கேள்வித் தொகையிலும் குறைவான கேள்விகோருபவர்களின் கேள்விவைப்புப்பணம் மீளளிக்கப்பட மாட்டாது. சித்திகர கேள்விதாரர் கேள்வித் தொகையின் $^1/_3$ பகுதியை **2019.11.15 ஆம்** திகதி பி.ப 2.00 மணிக்கு முன்னர் குத்தகைவைப்பாக செலுத்தி சபையுடன் ஒப்பந்தமொன்றினை செய்து கொள்ளவேண்டும். மிகுதித் தொகையினை 6 சமபங்குப் படி தை தொடக்கம் ஆனி வரையான காலப்பகுதிக்குள் அவ் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னைய வேலை நாள்களில் செலுத்தவேண்டும். தவறுமிடத்து மாதக் கட்டணத் தொகையின் 10 வீதம் தண்டமும் மேலதிகமாக அறவிடப்படும். மேலதிக விபரத்தினை தலைமை அலுவலகத்தில் அலுவலகநேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
3. கேள்விப்பத்திரத்தினை பெறவிரும்புவோர் முல்லைத்தீவு மாவட்ட எல்லைக்குள் நிரந்தர வதிவிடத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும். அத்துடன் விண்ணப்பத்துடன் **தேசிய அடையாள அட்டையின் பிரதி, தாம் வதியும் கிராம சேவையாளரிடம் பெற்றுக் கொள்ளப்பட்ட வதிவிடத்தின் வதிவிட சான்றிதழ்** ஆகியவற்றினை சமர்ப்பித்தல் வேண்டும்.
4. கேள்வி தொடர்பான மேலதிக விவரங்களை 2019.10.01 ஆம் திகதிய உதயன் பத்திரிகையின் 02ஆம் பக்கத்திலும். பிரதேச சபையின் தலைமையலுவலத்திலும் மற்றும் உபஅலுவலகங்களிலும் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம்.

திரு.செ.பிறேமகாந்,
தலைவர்,
பிராந்திய பெறுகைக் குழு,
புதுக்குடியிருப்பு பிரதேசசபை,
புதுக்குடியிருப்பு.
2019.10.26.

(C 32785)(10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்...

ளது.

நாளை தீபாவளிப் பண்டிகையை கொண்டாடும் இந்து மாணவர்களையும், ஆசிரியர்களையும் கருத்திற்கொண்டே இந்த விடுமுறை வழங்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது. குறித்த நாளுக்கு பதிலாக மேலும் ஒருநாளில் அந்த நாளுக்குரிய கற்றல் நடவடிக்கைளை நடத்த நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறும் பாடசாலை அதிபர்களுக்கு கல்வி அமைச்சு ஆலோசனை வழங்கியுள்ளது. (ஒ.5)

## இலங்கை...

விடுவிக்கப்பட்டதாக யாழில் உள்ள இந்தியத் துணைத் தூதரக வட்டராங்கள் தெரிவித்தன.

இந்தியக் கடற்படையினரால் கடந்த 3ஆம் திகதி கைது செய்யப்பட்ட 18 இலங்கை மீனவர்கள் இந்திய சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். இவர்களை விடுவிக்கக் கோரி கடந்த 23ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணை தூதரகத்தின் முன்பாக கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டி ருந்தது.

எழுவைதீவில் இருந்து கடற்றொழிலிற்காக சென்றிருந்தபோது கைது செய்யப்பட்டு சிறையில் வாடும் மீனவர்களை விடுதலை செய்ய நடவடிக்கை எடுப்பதோடு இந்திய-இலங்கை அரசுகள் இணைந்து இந்திய- இலங்கையின் கடலில் எல்லையை அமைக்க வேண்டும், எனவும் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இந்த நிலையில் இந்தியத் துணைத்தூதரகம் ஊடாக குறித்த விடயம் டில்லியின் கவனத்துக்கு கொண்டுசெல்லப்பட்டது. இதனையடுத்து நேற்றைய தினம் அனைத்து மீனவர்களும் விடுதலை செய்யப்பட்டுள்ளதாக இந்தியத் தூதரகத்துக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது. விடுவிக்கப்பட்ட மீனவர்கள் அடுத்த வாரம் தாயகம் திரும்புவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ஒ.5,105)

## கலந்துரையாடலில்...

கூட்டணியின் நிறுவுனருமான சி.வி.விக்னேஸ்வரன், உதயன் பத்திரிகைக்குத் தெரிவித்தார்.

ஐந்து கட்சிகளின் சந்திப்பு கொழும்பில் நேற்றுமுன்தினம் நடந்தது. இதில் தமிழ் மக்கள் கூட்டணி பங்கேற்கவில்லை. அத்துடன் நாளைமறுதினம் 5 கட்சிகளின் கூட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இந்தச் சந்திப்பில் தமிழ் மக்கள் கூட்டணி பங்கேற்குமா என்று எழுப்பிய கேள்விக்கே அவர் மேற்கண்டவாறு பதிலளித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:


5 கட்சிகளும் இணைந்து எங்களின் 13 கோரிக்கைகள் அடங்கிய ஆவணத்தை முன்வைத்து மூன்று முக்கிய வேட்பாளர்களுடனும் விவாதிக்கவேண்டும் என்று முடிவு செய்தோம். இருப்பினும் இதுவரையில் எந்தவொரு வேட்பாளருடனும் நாங்கள் எந்தச் சந்திப்பையும் நிர்ணயிக்கவில்லை. எந்தவொரு வேட்பாளரையும் சந்திப்பதற்கு முன்னர் மேலதிக கூட்டத்தில் கலந்து கொள்ளவேண்டிய அவசியமில்லை. வேட்பாளர்களைச் சந்திப்பதற்கு திகதி நிர்ணயிக்கப்பட்டால் எமது கட்சி பங்கேற்கும்.

வேட்பாளர்களைச் சந்திப்பதற்கு முன்னர் கலந்துரையாடல் அவசியம் என்றால், சிவில் சமூகத்தினர் மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் பங்கேற்புடன் 5 கட்சிகளின் கலந்துரையாடல் நடத்தலாம். அத்தகைய கூட்டம் அவசியமானால், 5 கட்சிகளின் தலைவர்கள் மற்றும் ஏனையோருக்கு அது தெரிவிக்கப்பட வேண்டும் - என்றார். (ஒ.5)




## மரண அறிவித்தல்

பிறப்பு
20 . 06 . 1935



இறப்பு
25 . 10 . 2019

## தம்பிஐயா சிவலிங்கம்

ஈவினை மத்தி, ஈவினை, புன்னாலைக்கட்டுவனை பிறப்பிடமாகவும் பூர்வீகமாகவும் கொண்ட தம்பிஐயா சிவலிங்கம் நேற்று (25.10.2019) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிஐயா ஆசைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற இராசையா சிவபாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகனும் காந்திமதியின் பாசமிகு கணவரும் ரஜனி (ஜேர்மனி), சிவகுமார் (தொழில்நுட்பக்கல்லூரி), பத்மகுமார் (யாழ் மாநகரசபை), ராஜ்குமார் தொழில்நுட்பக்கல்லூரி), தர்ஜினி (இலங்கை வலைப்பந்தாட்ட வீராங்கனை, செலான்வங்கி, கொழும்பு), கிருஷ்ணகுமார் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும் ரதிவதனி, தயாளினி (பிரதேச செயலகம் - சண்டிலிப்பாய்), தர்சினி (பிரதேச செயலகம்-புதுக்குடியிருப்பு), அஜந்தி (ஜேர்மனி) ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்றவர்களான சிவஞானகுரு (நீர்ப்பாசன இலாகா - அம்பாறை), சிவபாலன் (இளைப்பாறிய பிரதம சிறாப்பர் - யாழ் மாநகரசபை) மற்றும் சிவபதிமலர் - பாலசிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ரிசிகேஷ், ஹரிகேஷ், லவேந்திரன், கஜேந்திரன், தீபிகன், ஜஸ்மினி, ராயிகா, அன்ஷிகா, அக்ஷரா, ஆகியோரின் அன்புப்பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (25.10.2019) வெள்ளிக்கிழமை நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**ஈவினை மத்தி, ஈவினை,**
**புன்னாலைக்கட்டுவன்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

## அரச...

அரசை உருவாக்கிக் கொள்ள மக்கள் ஆணையைக் கோருகின்றோம். தமிழ்-முஸ்லிம் சமூகத்துக்குப் போலியான வாக்குறுதிகளை வழங்கி அவர்களை ஏமாற்றப்போவதில்லை. எதைச்செய்யமுடியுமோ அதனைக் கூறியுள்ளோம். இவ்வாறு எதிர்க்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் தேர்தல் அறிக்கை வெளியிடும் நிகழ்வில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வெளியிடப்படும் தேர்தல் அறிக்கைகளைக் கொண்டு நாட்டு மக்கள் அரசியல் ரீதியில் தற்போது தீர்மானங்களை மேற்கொள்வார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. ஏனெனில் கடந்த மற்றும் நடப்பு அரசின் நிர்வாகத்தையும், எமது கொள்கையையும் ஆராய்ந்து சிறந்த அரசியல் தீர்மானத்தை முன்னெடுப்பார்கள்.

மக்களை மையப்படுத்திய அரச நிர்வாகத்தை முன்னெடுக்கும் விதத்திலான ஐந்து ஆண்டுகாலக் கொள்கைத் திட்டம் வெளியிடப்பட்டுள்ளது. இந்தக் கொள்கைகள் ஒரு தரப்பினருக்கு சாதகமாகவும், பிறிதொரு தரப்பினருக்கு சாதகமாகவும் உருவாக்கப்படவில்லை.

எமது கொள்கையில் எவ்வித இரகசிய ஒப்பந்தங்களும் கிடையாது. எவரது நிபந்தனைகளுக்கும் அடிபணியவில்லை. தமிழ்- முஸ்லிம் மக்களின் வாக்குகளை பெறுவதற்காக போலியான வாக்குறுதிகளை வழங்கி அவர்களை ஏமாற்றவில்லை. எதை செய்ய முடியுமோ அதனையே அவர்களுக்கு வாக்குறுதியாக வழங்கியுள்ளேன். அதுவே தொடரும்.

2015ஆம் ஆண்டு ஆட்சியைக் கையளிக்கும் போது தேசிய பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது. சிறந்த நாட்டையே கையளித்தேன். ஆனால் தற்போது தேசிய பாதுகாப்பு கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளது. மீண்டும் ஆரம்பத்தில் இருந்து தேசிய பாதுகாப்பை பலப்படுத்த வேண்டிய தேவை எழுந்துள்ளது.

அரச தலைவர் தேர்தலை தொடர்ந்து பொதுத்தேர்தலுக்கு சென்று புதிய பலமான அரசைத் தோற்றுவிப்பதற்கு தேவையான மக்களாணை நிச்சயம் கிடைக்கப் பெறும். நாடாளுமன்றத் தேர்தலை உரிய காலத்துக்கு முன்னர் நடத்துவதற்கான மக்கள் ஆதரவைப் பெறுவதற்கான கொள்கைத் திட்டங்கள் தேர்தல் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது- என்றார். (ஒ.5)

## மகிந்தவின்...

கைதாகியுள்ளனர். இவர்கள் அண்மையில்தான் சவுதியிலிருந்து நாடு திரும்பியதாக குறிப்பிடப்படுகிறது.

இதனையடுத்து மகிந்தவின் கூட்டத்துக்கு பெரும் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது (ஒ.5)

## வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை

### கேள்வி அறிவித்தல் - 2020

### சாளம்பைக்குளம் மாட்டிறைச்சிக்கடை/மீன்கடை, நெளுக்குளம் மாட்டிறைச்சிக்கடை/ மீன்கடை/ கோழியிறைச்சிக்கடை, தோணிக்கல் மீன் கடை

வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபையின் அதிகாரத்திற்குட்பட்ட கீழ்க்காணும் மீன் கடைகள். இறைச்சிக்கடைகள் என்பவற்றை 01.01.2020 முதல் 31.12.2020 வரை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் எம்மால் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி -26.10.2019 முதல் 11.11.2019 பிற்பகல் 12.30 மணி வரையான அலுவலக நேரம்.

கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி – 11.11.2019 பிற்பகல் 12.30 மணி வரை

கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி.- 11.11.2019 பிற்பகல் 2.30மணி

**நிபந்தனைகள்**

- கேள்விப்பத்திரம் பெற விரும்புவோர் கோரிக்கைக் கடிதத்துடன் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தே.அ.அட்டை செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றுடனும் அதன் பிரதியுடனும் சமுகமளித்தல் வேண்டும்.
- கேள்விப்பத்திரம் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை " தலைவர், வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை, நேரியகுளம் வீதி, நெளுக்குளம், வவுனியா." என்ற முகவரிக்கு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் அதற்கெ வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், பூங்கா வீதி, வவுனியா. என்ற முகவரிக்கு 11.11.2019 ஆம் திகதி பிற்பகல் 12.30 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.
- கேள்வி நிபந்தனை அறிவுறுத்தலுக்கமையாத கேள்விக்கோரிக்கையை நிராகரிக்கவும் எந்த ஒரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ நிராகரிக்கவோ தலைவருக்கு பூரண அதிகாரமுண்டு.
- கேள்வி திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.
- கேள்விப்பத்திரங்களை கீழ் குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத படிவக்கட்டணமும் மீளளிக்கக்கூடிய கேள்விவைப்புப்பணமும் செலுத்தி மேற்குறித்த காலத்திற்குள் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.
- தெரிவு செய்யப்படும் கேள்விதாரர் கேள்வித்தொகையின் 1/3 பகுதியைச் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் செய்து கொள்ளல் வேண்டும்.
- நெளுக்குளம் மாட்டிறைச்சிக்கடை, மீன்கடை, கோழிக்கடைகளுக்கு மாதாந்தம் ரூபா 2000.00 வாடகையாகவும் சாளம்பைக்குளம் மாட்டிறைச்சிக்கடை.மீன்கடைகளுக்கு மாதாந்தம் 1500.00 வாடகையாகவும் செலுத்தப்படல் வேண்டும்.
- தெரிவு செய்யப்படும் கேள்விதாரர் கேள்வித்தொகை.மாதாந்த வாடகை என்பவற்றுடன் அரசாங்கத்தால் அவ்வவ்போது அறவிடப்படும் வரி என்பனவற்றை செலுத்துதல் வேண்டும்.
- மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| கடை விபரம் | ஒருவருடத்திற்குரிய குறைந்த கேள்வித் தொகை 15% VAT, 2% NBT நீங்கலாக | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு | கேள்விப் படிவக் கட்டணம் 15% VAT,2% NBT நீங்கலாக |
|---|---|---|---|
| சாளம்பைக்குளம் மாட்டிறைச்சிக்கடை | 449,570.00 | 25.000.00 | 1.000.00 |
| சாளம்பைக்குளம் மீன் கடை | 203,500.00 | 25.000.00 | 1,000.00 |
| நெளுக்குளம் மாட்டிறைச்சிக்கடை | 582,670.00 | 25.000.00 | 1,000.00 |
| நெளுக்குளம் மீன்கடை | 818.399.88 | 25.000.00 | 1,000.00 |
| நெளுக்குளம் கோழியிறைச்சிக்கடை | 548,130.00 | 25.000.00 | 1,000.00 |
| தோணிக்கல் மீன்கடை | 25.216.40 | 25.000.00 | 1,000.00 |

**தலைவர்,**
**வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை.**
**நேரியகுளம் வீதி, நெளுக்குளம்**
**வவுனியா. 26.10.2019**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்



### பொன்னர் சின்னத்தங்கச்சி

கொக்குவில் கிழக்கு, பொற்பதி வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னர் சின்னத்தங்கச்சி 25.10.2019 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நாகன் - நன்னி தம்பதிகளின் அன்பு மகளும் சின்னப்பொடி - சின்னப்பிள்ளை தம்பதிகளின் மருமகளும் கணேசலிங்கத்தின் (லண்டன்) அன்புத் தாயாரும் லலீலாவின் அன்பு மாமியாரும் வுஜானி - வாசன் மற்றும் நிலானி நிரோஜனின் அருமைப் பேர்த்தியும் பபிஷன், நித்தீஸ் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 28.10.2019 திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோண்டாவில் கட்டையடி இந்துமயானத்திற்கு எடுத்துச செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர்.



## மரண அறிவித்தல்

| மண்ணுலகில் | விண்ணுலகில் |
|---|---|
| 02 | 24 |
| 02 | 10 |
| 1967 | 2019 |



அமரர்.
### ஜீவகாந்தி ஜீவகுமாரன் (அசோ)
(Civil Engineer)
(Director of Myra Construction Private Ltd.)

ஏழாலை தெற்கை பிறப்பிடமாகவும், கனடாவை வதிவிடமாகவும் கொண்ட திரு. ஜீவகாந்தி ஜீவகுமாரன் அவர்கள் 24.10.2019 வியாழக்கிழமை அன்று கனடாவில் கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார். அன்னார் காலம் சென்ற திரு. திருமதி. ஜீவகாந்தி தம்பதிகளின் அன்பு மகனும், திரு.திருமதி. தனராஜசிங்கம் தம்பதிகளின் அன்பு மருமகனும், ஈவ்லின் சுகந்தினி அவர்களின் அன்புக் கணவரும், ஜீவிக்கா, ஜீவனோஜ் ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜீவநேசன், காலம் சென்ற ஜீவபாலன், ஜீவரூபன், ஜீவலதா ஆகியோரின் அன்பு சகோதரனும், அரியரோகினி, அன்ரனிஷா, ஜெயநிதி, டெனிஸ் மற்றும் ஜரின் தர்ஷனி, ரூத் துஷாந்தினி, Rev. டானியல் ரஞ்சித் ஆகியோரின் மைத்துனரும், ஜோசுவா, நியோமி, நிஷான், நிலுக்ஷி, ரினோஜ் ஆகியோரின் சித்தப்பாவும், ஜீவாஸ், ஜீவினி ஆகியோரின் பெரியப்பாவும், ஜெத்தோ, யூதா, டான் அபினாஷ் ஆகியோரின் மாமாவும் ஆவார். அன்னாரின் கனடாவில் நடைபெறும் இறுதி வழிப்பாட்டிக்கான ஆராதனை கொழும்பில் இன்று 26.10.2019 சனிக்கிழமை பி.ப 6.30 மணிக்கு இல.23, பெயர்லைன் வீதி, தெகிவளையில் உள்ள கொழும்பு C.A.C.M இலும், யாழ்ப்பாணத்தில் பி.ப 4.00 மணிக்கு கராஜ் லேன் பண்டத்தரிப்பிலுள்ள திரு. P. E. தனராஜசிங்கம் அவர்களின் இல்லத்திலும் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
திரு. ஜீவகாந்தி ஜீவரூபன் (சகோதரன்) கொழும்பு +94777008279
[Nexus Property Developers (Pvt) Ltd.]
Rev. டானியல் ரஞ்சித் (மைத்துனர்) யாழ்ப்பாணம் +94777302072


# ஆனையிறவுத்தாக்குதலின்போது தப்பியோடியவர்தான் கோத்தபாய

## கிண்டலடிக்கிறார் மங்கள

கொழும்பு, ஒக். 26

ஆனையிறவு நடவடிக்கையின் போதுநாட்டிலிருந்துதப்பிச்சென்ற கோத்தபாய ராஜபக்ச நேரடி விவாதத்தை தவிர்ப்பது ஒன்றும் ஆச்சரியத்துக்குரிய விடயமல்ல. பயம் என்பது அவரது ஒரு வழமையான விடயமாகும் என்று நிதியமைச்சர் மங்களசமரவீர தெரிவித்துள்ளார். அவர் தனது கீச்சகப் பதிவிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

'ஆனையிறவு நடவடிக்கை -1 ஐ புலிகளின் தலைவர் பிரபாகரன் போரின் முக்கிய புள்ளியாக பார்த்தார். ஆனால் அந்த ஆனையிறவு நடவடிக்கை -1 ஆரம்பிக்கப்பட்டு ஒரு வாரத்தில் கோத்தபாய நாட்டிலிருந்து தப்பிச் சென்றார். எனவே அவர்தற்போது நேரடி விவாதத்தை தவிர்ப்பதானது ஆச்சரியத்துக்குரியதல்ல. காரணம் பயம் என்பது அவரது ஒரு வழமையான விடயமாகும்' என்று பதிவிட்டுள்ளார்.

நாட்டை முன்னே ற்றுவதற்கான கொள்கைகள் குறித்து விவாதிக்க நேரடி விவாதத்துக்கு வருமாறு எதிரணி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷசவுக்கு ஆளும்கட்சிவேட்பாளர் சஜித் பிரேமதாச அழைப்பு விடுத்தார். அதற்கு கோத்தபாய இன்னும் பதில் வழங்கவில்லை. (ஒ.5)

# இரவில் வீடுகளுக்குள் நுழைவது ஐ.தே.கவுக்கு பழகிவிட்டது

## நாமல் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 26


இரவு நேரங்களில் வீடுகளுக்குள் நுழைவதாக சஜித் பிரேம தாசவும் கூறுகின்றார். அவ்வாறு நுழைவது ஐக்கிய தேசியக் கட்சியினருக்குப் பழகி விட்டது. இவ்வாறு மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார். மொரட்டுவ பிரதேசத்தில் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் பணிமனையைத் திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்ட போதே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: கிராமங்களில் வசிக்கும் அனைத்து சுதந்திரக் கட்சியின் ஆதரவாளர்களின் ஆதரவும் தற்போது பொதுமக்கள் முன்னணிக்கு கிடைத்துள்ளது. புதிய தலைவர் ஒருவருடன் நாட்டு மக்கள் புதிய பயணத்துக்குத் தயாராகியுள்ளனர், என்றார்.

இதேவேளை, கட்சியின் அரசியல் தலைவர்களுக்கு 'ஹூ' கூக்குரல் அடிக்கப்படுவது தொடர்பில் ஊடகவியலாளர் ஒருவர் இதன்போது கேள்வி எழுப்பினர்.

அதற்குப் பதில் அளித்த நாமல், ஐக்கியதேசியகட்சியினர் எமதுமேடையில் இடம்பெறுவதை தேடுவதற்கு முன்னர், இணையத்தில் ஊடகவியலாளராகசெயற்படும் இளைஞன் ஒருவன் தாக்கப்பட்டான். அவர் ஏன் தாக்கப்பட்டார் என்று முதலில் தேடுங்கள். ரணில் விக்கிரமசிங்கவிற்கு 'ஹூ' அடித்தார்கள். வேறு யாருக்கும் இல்லை. ஐக்கியதேசிய கட்சியின் தலைவருக்கு. அது தொடர்பில் தேடுங்கள். பக்கத்து வீட்டில் இடம்பெறுவதை தேடுவதையே இந்த ஐக்கியதேசியகட்சியினர் செய்கின்றனர். அதைதானே சஜித் பிரேமதாசவும் கூறுகிறார். இரவு நேரங்களில் வீடுகளில் நுழைவதாக. இரவு நேரங்களில் வீடுகளில் நுழைவது ஐக்கியதேசிய கட்சியினருக்கு பழகிவிட்டது, என்றார். (ஒ.5)

# டொல்பின்கள்



- டொல்பின்கள் மிகவும் புத்திசாலித் தனமானவை என்று கருதப்படுகின்றன.
- டொல்பின் அசைவப் பிராணி.
- ஓர்கா என்றழைக்கப்படும் திமிங்கிலங்கள் டொல்பின் வகையைச் சேர்ந்தவை.
- பெண் டொல்பின்கள் பசுக்கள் என்றும் ஆண்கள் காளைகள் என்றும் குட்டி டொல்பின்கள் கன்றுகள் என்றும் அழைக்கப்படுகின்றன.
- டொல்பின்கள் விளையாட்டுத்தனம் நிறைந்தவை. அதனாலேயே மனிதர்களுக்குப் பிடித்தவை. தண்ணீரிலிருந்து துள்ளிக் குதிக்கும். அலையின் மேலேறி விளையாடும். குட்டிச் சண்டைகள் போடும்.
- டொல்பின், தன் தலை மீது இருக்கும் துளையால் சுவாசிக்கும்.
- டொல்பின்களின் பார்வைத்திறனும், செவித்திறனும் வலிமையானவை. வௌவால்களைப் போன்றே மீயொலி அலைகளை அனுப்பிப் பொருள்களின் இருப்பிடத்தைச் சரியாக டொல்பின்களால் அறிய முடியும்.
- டொல்பின்கள் விசிலடித்து தங்களுடைய சகாக்களிடம் தொடர்பு கொள்ளக்கூடியவை.
- மனிதர்களின் வேட்டையால் சில டொல்பின் வகைகள் அழியும் அபாயத்தில் உள்ளன. யாங்ட்சி ஆற்றில் வசித்த டால்பின் வகைகள் அண்மையில் முழுமையாக அற்றுப்போனது ஒரு உதாரணம்.


### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை
### பேராசிரியர் கந்தையா குணரத்தினம் தங்கப்பதக்கம்

பேராசிரியர் க.குணரத்தினம் தங்கப்பதக்கத்தினை வழங்கும் பொருட்டு கல்வியாண்டு 2015/2016 இல் பட்டம் பெற்ற விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த தூய. பிரயோக விஞ்ஞான பட்டதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தகைமை: -**
எதிர்வரும் 34வது பொது பட்டமளிப்பு வைபவத்தில் (பகுதி-II) விஞ்ஞானத்தில் நான்கு வருட இளமாணிப்பட்டம் பெறவிருக்கும் முதலாம் அல்லது இரண்டாம் வகுப்புக்களில் சித்தியடைந்தவர்கள் தங்கப்பதக்கத்திற்கு தகுதியுடையவராகக் கருதப்படுவார்.

விண்ணப்பப்படிவங்களை கீழ்க்காணும் ஒரு முகவரியில் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.

01. உதவிப்பதிவாளர், கல்வி விவகாரங்கள் மற்றும் வெளியீட்டுக் கிளை,யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
02. இணையத்தளம்: www.jfn.ac.lk

**முடிவுத்திகதி: 11.11.2019(திங்கட்கிழமை)**

சரியான பொருத்தமான தகவல்களை உள்ளடக்காதவையும், தெளிவற்றவையும், பூரணப்படுத்தப்படாததும் மற்றும் முடிவுத் திகதிக்கு பின்னர் பெறப்படுபவையுமான விண்ணப்பங்கள் கருத்திற் கொள்ளப்படமாட்டாது.

பதிவாளர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருப்பெயர்ச்சி பலன்கள்!

## 2019 — 2020

குரு பகவான் ஒரு ராசியில் இருந்து அடுத்த ராசிக்கு செல்வதற்கு 13 மாதங்கள் அல்லது ஒரு வருடம் ஆகும். இப்படி ஒரு ஆண்டுக்கு ஒருமுறை நிகழக்கூடிய குரு பெயர்ச்சி இந்த வருடம் 29.10.2019 அன்று நிகழ்கிறது. விகாரி வருடம் ஐப்பசி மாதம் 12ஆம் நாள் செவ்வாய்க்கிழமை, வாக்கிய பஞ்சாங்கப்படி, விருச்சிகம் ராசியில் இருந்து தனுசு ராசிக்கு மாறுதலாகிச் செல்கிறார். குரு பகவான் தனுசு ராசியில் 14.11.2020 வரை சஞ்சாரம் செல்கிறார். குரு பார்க்க கோடி நன்மை என்றும், கோடி தோஷம் விலகும் என்றும் நம்பப்படுகிறது. குரு பெயர்ச்சியினால் நன்மைகள் நடக்கும் என்று பொதுவாக நம்பலாம்,



**சொந்த பந்தங்களை எந்த ஒரு சூழ்நிலையிலும் விட்டுக் கொடுக்காத கன்னி ராசி அன்பர்களே !**

கனவிலும், கற்பனையிலும் மாறிமாறி சஞ்சரிக்கும் நீங்கள் நிஜத்தைத் தேடி அலைவீர்கள். பேதம் பார்க்காமல் எல்லோரிடமும் சமமாகப் பழகும் நீங்கள், பலரையும் வழிநடத்திச் செல்லும் அளவுக்குப் பட்டறிவு கொண்டவர்கள். விட்டுக்கொடுக்கும் மனம் கொண்ட நீங்கள், எல்லோரையும் அன்பால் அரவணைப்பவர்.

உங்களின் ராசிக்கு 3ஆம் வீட்டில் அமர்ந்து கொண்டு உங்களின் புதிய முயற்சிகளை முடக்கி வைத்து எந்த ஒரு வேலையையும் முதல் கட்டத்திலேயே முடிக்க முடியாமல் அலைக்கழித்த குரு பகவான் 29.10.2019 முதல் 13.11.2020 வரை ராசிக்கு 4 ம் வீட்டில் அமர்வதால் சந்தர்ப்ப, சூழ்நிலையறிந்து செயல்படும் சாமர்த்தியத்தைக் கற்றுக் கொள்வீர்கள். உங்களின் பலம் எது, பலவீனம் எது என்பதைத் தெரிந்துகொள்வது நல்லது. கணவன், மனைவிக்குள் சிலர் குழப்பத்தை ஏற்படுத்த முயற்சி செய்வார்கள். 'உன் சொந்தம், என் சொந்தம்' என்று மோதிக் கொள்ளாமல் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்துப் போங்கள்.. எதிலும் உணர்ச்சிவசப்படாமல் அறிவுப்பூர்வமாக முடிவெடுங்கள்.

வீடு, மனை வாங்கும் போது தாய் பத்திரம், வில்லங்க சான்றிதழ்களையெல்லாம் சரிபார்த்து வாங்குங்கள். சொத்து விற்பதாக இருந்தால், ஒரே தவணையில் பணத்தை வாங்கப் பாருங்கள். ஒருபக்கம் பணவரவு உண்டு என்றாலும் சேமிக்க முடியாதபடி செலவுகளும் துரத்திக் கொண்டேயிருக்கும். தாய்வழி உறவினர்களுடன் இருந்துவந்த கருத்து வேறுபாடுகள் நீங்கும்.




**குருபகவானின் பார்வைப் பலன்கள்:**

குரு உங்களின் ராசிக்கு 8ஆம் வீட்டைப் பார்ப்பதால் அயல்நாடு செல்ல விசா கிடைக்கும். பயணங்களால் பயனுண்டு. மறைந்து கிடந்த திறமைகளை வெளிப்படுத்த வாய்ப்புகள் வரும். குரு உங்கள் உத்தியோகஸ்தானத்தைப் பார்ப்பதால் சிலருக்குப் புதிய இடத்தில் வேலை கிடைக்கும். சம்பள பாக்கி கைக்கு வரும். குரு 12ஆம் வீட்டைப் பார்ப்பதால் புகழ் பெற்ற புண்ணியஸ்தலங்கள் சென்று வருவீர்கள்.

**குருபகவானின் நட்சத்திர சஞ்சாரம்:**

29.10.2019 முதல் 31.12.2019 வரை குருபகவான் கேதுவின் நட்சத்திரமான மூலம் நட்சத்திரத்தில் செல்வதால் எதிலும் நாட்டமின்மை, ஏமாற்றங்கள், திடீர் செலவுகள் வரலாம். முன்னெச்சரிக்கையுடன் செயற்படுங்கள்.

1.1.2020 முதல் 5.3.2020 வரை மற்றும் 31.7.2020 முதல் 18.10.2020 வரை உங்கள் தனம் மற்றும் பாக்யாதிபதியான சுக்கிரனின் பூராடம் நட்சத்திரத்தில் குரு பகவான் செல்வதால், இக்காலக் கட்டத்தில் எதிர்பார்த்த பணம் கைக்கு வரும்.

கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். வெள்ளிச் சாமான்கள் வாங்குவீர்கள். தடைப்பட்ட கல்யாணப் பேச்சுவார்த்தை சாதகமாக முடியும். குடும்பத்தில் மகிழ்ச்சிகரமான சம்பவங்கள் நிகழும்.

6.3.2020 முதல் 27.3.2020 வரை மற்றும் 19.10.2020 முதல் 13.11.2020 வரை குரு பகவான் உங்கள் விரயாதிபதியான சூரியனின் நட்சத்திரமான உத்திராடம் 1 ம் பாதத்தில் செல்வதால் அறிவுப்பூர்வமாக சில முடிவுகள் எடுப்பீர்கள்.

**மகரத்தில் குரு பகவான்:**

28.03.2020 முதல் 6.7.2020 வரை குரு பகவான் உங்களின் ராசிக்கு 5 வீடான மகர ராசியில் அதிசாரமாகியும், வக்கிரமாகியும் அமர்வதால் மன இறுக்கங்கள் குறையும். குடும்பத்தில் அமைதி உண்டாகும். குழந்தை பாக்கியம் கிடைக்கும்.

அரைகுறையாக நின்ற வீடு கட்டும் பணியைத் தொடங்குவீர்கள். திருமணம் தள்ளிப்போனவர்களுக்கு கை கூடி வரும். மகனுக்கு அயல்நாடு செல்லும் வாய்ப்பு வரும். நீண்ட காலமாக செல்ல வேண்டுமென்று நினைத்திருந்த அண்டை மாநிலப் புண்ணிய ஸ்தலங்களுக்குச் சென்று வருவீர்கள்.

**குரு பகவானின் வக்கிர சஞ்சாரம்:**

7.07.2020 முதல் 30.7.2020 வரை உள்ள கால கட்டத்தில் உத்திராடம் 1 ம் பாதம் தனுசு ராசியில் குரு வக்கிரமடைவதால் பழைய பிரச்னைகளுக்கு மாறுபட்ட அணுகுமுறையால் தீர்வு காண்பீர்கள். மேல்மட்ட அரசியல்வாதிகள் உதவுவார்கள். பயணங்களால் உற்சாகமடைவீர்கள். தொலைநோக்குச் சிந்தனை அதிகரிக்கும்.

31.7.2020 முதல் 10.9.2020 வரை பூராடம் நட்சத்திரத்தில் குரு வக்கிர கதியில் செல்வதால், கொஞ்சம் வளைந்துக் கொடுத்துப்போவது நல்லது. கணவன், மனைவிக்குள் வீண்வாக்கு வாதத்தைத் தவிர்ப்பது நல்லது. உடல்நலனில் கவனம் செலுத்துங்கள். புதியவர்களால் பணவரவு உண்டு.

**வியாபாரிகளுக்கு :**

வியாபாரத்தில் ஏற்றஇறக்கங்கள் இருந்துகொண்டேயிருக்கும். அவ்வப்போது மாறி வரும் சந்தை நிலவரத்துக்கேற்ப முதலீடு செய்து லாபம் ஈட்டப்பாருங்கள். விளம்பர யுக்திகளைக் கையாளுங்கள். ரியல் எஸ்டேட், உணவு, துணி வகைகளால் லாபமடைவீர்கள்.

**உத்தியோகஸ்தர்களுக்கு:**

உத்தியோகத்தில் வேலைச் சுமை அதிகரிக்கும். உயர் அதிகாரிகளின் உத்தரவுகளை உடனே செயல்படுத்துங்கள்.

கூடுதல் நேரம் ஒதுக்கி நீங்கள் உழைக்க வேண்டியிருக்கும். சக ஊழியர்கள் உதவிகரமாக இருப்பார்கள். அடிக்கடி இட மாற்றம் வரும். எதிர்பார்த்த சலுகைகளும், சம்பள உயர்வும் தாமதமாக கிடைக்கும்.

**மாணவர்களுக்கு:**

விரும்பிய கல்வி நிறுவனத்தில் விரும் பிய கல்விப் பிரிவில் சேர்வீர்கள். அறிவாற்றல் கூடும். சின்னச் சின்ன தவறுகளைத் திருத்திக் கொள்ளுங்கள். நட்பு வட்டம் விரிவடையும். சந்தேகங்களை உடனுக்குடன் ஆசிரியர்களிடம் கேட்டுத் தெளிவு பெறுங்கள்

**பெண்களுக்கு:**

பெண்களுக்குத் திருமணம் கை கூடி வரும். பெற்றோரின் முடிவுகளை ஏற்றுக்கொள்ளுங்கள். சிலருக்கு வெளிமாநிலத்தில் வேலை கிடைக்கும். உயர் கல்வியிலும் முன்னேற்றம் உண்டு.

**மாணவர்களுக்கு:**

மாணவ, மாணவிகள் தொடக்கத்திலிருந்தே படிப்பில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. எதிர்பார்த்த கல்வி நிறுவனத்தின் கல்விப் பிரிவில், சேர அதிகம் செலவு செய்யவேண்டி வரும். பொது அறிவை வளர்த்துக் கொள்ளுங்கள். விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெறுவீர்கள்.

**கலைத்துறையினருக்கு:**

கலைத்துறையினரின் கற்பனைத்திறன் வளரும். அவர்களின் படைப்புகளுக்கு காப்புரிமை செய்து கொள்வது நல்லது. மூத்த கலைஞர்களின் ஆதரவு முன்னேற்றம் தரும்.

இந்த குரு மாற்றம் அவ்வப்போது ஏமாற்றங்களையும் இடமாற்றங்களையும் தந்தாலும் கடினஉழைப்பால் முன்னேற வைக்கும்.

வியாழக்கிழமைகளில் நெய் தீபம் ஏற்றி குலதெய்வத்தை வணங்கி வாருங்கள். மஞ்சள் நிற பூக்களை கொண்டு இறை தெய்வங்களை அர்ச்சியுங்கள். ராகு/ கேதுக்களின் சஞ்சாரம் பெரிய நல்ல பலன்களை தரும் விதத்தில் இல்லை என்பதால் துர்க்கையை ராகு காலத்தில் அரளி சாற்றி வழிபாடு செய்து வாருங்கள். கேதுவுக்கு விநாயகரை அதிகம் வழிபடுங்கள். இதனால் மேற்கண்ட தீய பலன்கள் குறைந்து வாழ்க்கையில் ஏற்றம் பெறுவீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேதார கௌரி விரத மகிமை!

சர்வலோக மாதாவாகிய பார்வதி தேவியே இந்த நோன்பினை முதன் முதலில் கடைப்பிடித்து பரம்பொருளின் இடது பாகத்தினைப் பெற்றுக் கொண்டார் என்பது இந்த விரதத்தின் சிறப்பு. இத்தகைய சிறப்பு பெற்ற கேதார கௌரி விரதம் குறித்து ஒரு புராண வரலாறு உண்டு.

**வரலாறு**

கைலயங்கிரியின் சிகரத்தில் நவரத்தினங்களால் இழைக்கப்பட்ட சிம்மாசனத்தில் பார்வதி சமேதராய் விளங்கும் பரமசிவன் பக்த கோடிகள் தரிசிக்கும் பொருட்டு தேவசபையில் வீற்றிருக்கின்றார். அங்கே தேவவாத்தியங்கள் முழங்க தேவமாதர்கள் நாட்டியம் ஆடிக்கொண்டிருக்கின்றார்கள். அதிலே நடன ஸ்திரீகளில் சவுந்தர்யம் மிக்கவளாகிய ரம்பையானவள் அற்புதமான நடன விசேஷங்களை நடித்துக் காட்டுகிறாள். அப்போது சிவ பக்தராகிய பிருங்கி மகரிஷி பக்தியோடு விசித்திரமான விகட நாட்டியம் ஒன்றை ஆடிக் காட்டுகிறார். பார்வதியும் அங்கே இருக்கின்றாள். தேவர்கள் ஆனந்தத்தால் சிரித்து மகிழ்கின்றார்கள். பரமசிவனும் பிருங்கியின் நாட்டியத்தில் மூழ்கித் திளைத்து மகிழ்கிறார். பரமசிவன் அனுக்கிரகமும் பிருங்கி மகரிஷிக்குக் கிடைக்கிறது. அதைக் கண்டு சபையிலுள்ளோர் பிருங்கி மகரிஷியை பாராட்டுகிறார்கள்.



இவ்வேளை பிரம்மா, விஷ்ணு, தேவேந்திரன் முதலான முப்பத்து முக்கோடி தேவர்களும், அட்டதிக்குப் பாலகர்களும், முனிவர்களும், பதினெண்ணாயிரம் ரிஷிகள் என்போரும் இருவரையும் மூன்று தடவை பிரதர்ஷணம் செய்து வணங்கிச் சென்றனர். ஆனால் அந்த நேரத்தில் பிருங்கி மகரிஷி வண்டின் உருவம் பெற்று, பரமேஸ்வரனுக்கும், பார்வதி தேவிக்கும் இடையில் சென்று (பார்வதி தேவியை வணங்காது) பரமேஸ்வரனை மட்டுமே 3 தடவை வலம் வந்து பயபக்தியோடு வணங்கினார். (வண்டின் உருவம் பெற்றதால் இம் முனிவர் 'பிருங்கி முனிகள்' என்னும் சிறப்புப் பெயர் பெற்றார்). பிருங்கி என்றால் வண்டு.

**பார்வதியின் கோபம்**

பிருங்கி ரிஷியின் இச்செய்கையைக் கண்டு கோபமுற்ற பார்வதிதேவி, பரமேஸ்வரனிடம் காரணம் கேட்க, பரமேஸ்வரனும் ஒரு புன்முறுவலுடன் பின்வருமாறு கூறினார்:

'தேவி! பிருங்கி முனிவர் உலக இன்பத்தை நாடுபவர் அல்ல. மாறாக மோட்சத்தை நாடுபவர். மோட்சத்தை நாடும் அவர் உலக இன்பங்களை நல்கும் உன்னை வணங்காது மோட்சத்தை நல்கும் என்னை வணங்கியதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லையே," எனக்கூற, இதனைக் கேள்வியுற்ற லோகமாதா மேலும் கோபமுற்றவளாக 'எனது சக்தி இல்லாமல் மோட்சத்தை நாடும் உங்கள் பக்தரான பிருங்கி முனிவர் மோட்சத்தை அடைய முடியாது என்பதுடன் இங்கிருந்து ஓர் அடி கூட எடுத்து வைத்து தனது இருப்பிடத்தைக் கூட அண்ட முடியாது அவ்வாறான சக்தியைக் கொடுக்கும் என்னை ஏளனம் செய்ததால் நிற்க முடியாமல் போகக் கடவாா' என முனிவருக்கு சாபம் கொடுத்தார். நிற்க முடியாது சக்தி அனைத்தையும் இழந்த முனிவர் தள்ளாடியவாறே நிலத்தில் விழப் போனார். இந்த நிலையில் 'என் பக்தனைக் காப்பாற்றுதல் என் தர்மம்' எனக் கூறி பிருங்கி முனிவரின் கையில் தண்டு (ஊன்று கோல்) ஒன்றை சிவன் கொடுத்தார். தண்டினைப் பெற்றுக் கொண்ட முனிவர் சிறிது சக்தியைப் பெற்றவர் போல் லோகநாயகனுக்கு கோடானு கோடி வணக்கம் என மீண்டும் பரமேஸ்வரனை மட்டும் வணங்கி தனது ஆசிரமத்தை அடைந்தார்.

இதனைக் கண்ட லோகமாதாவுக்கு மேலும் கோபம் உண்டாகின்றது. பிருங்கி முனிவர் மட்டுமன்றி தனது கணவரான பரமேஸ்வரனும் தன்னை அவமதித்து விட்டார் என்ற கோபத்தில் "மற்றவர்கள் முன்பு என்னை அவமதித்த உங்களுடன் இனி நான் வாழப் போவதில்லை" எனக் கூறி கயிலையை விட்டு நீங்கிப் பூலோகத்துக்கு வருகிறாள்.

**வால்மீகி பார்வதியை கண்ணுறுதல்**

வால்மீகி மகரிஷி சஞ்சரிக்கிற பூங்காவனத்தில் ஒரு விருட்சத்தின் அடியில் அமர்ந்திருக்கிறார். மல்லிகை, முல்லை, மந்தாரை, பாரிஜாதம் போன்ற செடிகள் பூத்துக் குலுங்கியதுடன் அவற்றின் நறுமணம் வனத்தின் நாற்றிசையும் வீசுவதைக் கண்ட வால்மீகி மஹரிஷி, தனது ஞானக் கண்ணால் தனது ஆசிரமம் அமைந்துள்ள வனத்தில் பரமேஸ்வரி எழுந்தருளி உள்ளதைக் கண்டார்.

முனிவர் பார்வதி தேவி எழுந்தருளியுள்ள வில்வமரத்தடிக்கு வந்து, ஆச்சரியத்துடன் தேவியை நோக்கி 'மும் மூர்த்திகளிலும் முதற் பொருளே! லோக மாதாவே! தாங்கள் பூலோகம் வந்து சிறியோனின் பர்னசாலை அமைந்துள்ள வனத்தில் எழுந்தருளி இருப்பதற்கு யான் என்ன தவம் செய்தேனோ?' எனக் கூறி, அன்னையை மெய்சிலிர்க்க வணங்கி, 'தாயே! தாங்கள் பூலோகம் வந்ததற்கான காரணத்தை அடியேன் அறிந்து கொள்வதில் தவறு ஒன்றும் இல்லையே?' என வினாவி மீண்டும் வணங்கி நின்றார். அதற்கு பார்வதி தேவி 'பிருங்கி முனிவரின் அலட்சியத்தால் கோபமுற்ற நான் பிரியக் கூடாத என் நாதனை விட்டுப் பிரிந்து நீண்ட தூரம் வந்து விட்டேன்' என தனது தவறை உணர்ந்து கவலையுடன் கூறினார்.

வால்மீகி முனிவர் பரமேஸ்வரியை தனது ஆசிரமத்திற்கு அழைத்துச் சென்று நவரத்தினங்களால் இழைக்கப்பட்ட இருக்கையில் அமரச் செய்து தினமும் வணங்கி வந்தார். இவ்வேளை பார்வதிதேவியானவள் வால்மீகி முனிவரை நோக்கி 'எனது அறிவீனத்தால் என் சுவாமியைப் பிரிந்து இங்கே வந்து விட்டேன். எனவே இவ்வுலகில் இதுவரை யாரும் கடைப்பிடிக்காத ஒரு விரதத்தினைக் கடைப்பிடித்து இறைவனை மீண்டும் அடைந்து ஆறுதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அடைய விரும்புகின்றேன். எனவே, அவ்வாறான விரதம் இருப்பின் கூறும்படி கேட்டார். அதற்கு வால்மீகி பின்வருமாறு கூறினார்.

'தாயே! இவ்வுலகில் இதுவரை யாரும் கடைப்பிடிக்காத விரதம் ஒன்று உள்ளது. அதனை மெய்யன்புடனும் பயபக்தியுடனும் கடைப்பிடித்தால் விரத முடிவில் பரமேஸ்வரனின் அருள் பூரணமாக கிடைக்கப் பெறுவீர்கள் எனக் கூறி, அத்தகைய சிறப்புப் பெற்றதும் யாராலும் இதுவரை கடைப்பிடிக்காததுமான விரதம் 'கேதார கௌரி விரதம்', எனக் கூறி இவ்விரதத்தின் போது கடைப்பிடிக்கப்பட வேண்டிய விரத நியதிகளை பின்வருமாறு கூறுகின்றார்.

**கேதார கௌரி விரத நியதிகள்**

'புரட்டாதி மாதம் சுக்கிலபட்ச தசமி தொடக்கம் ஐப்பசி மாதத்துக் கிருஷ்ண பட்சத்துத் தீபாவளித் திருநாளான அமாவாசை வரை 21 நாள்கள் பிரதி தினமும் நீராடி சுத்தமான ஆடை அணிந்து ஆலமரத்தின் கீழ் சிவலிங்கத்தை பிரதிஷ்டை செய்து 21 வாழைப்பழம், 21 பாக்கு, 21 மஞ்சள், 21 அதிரசம், நோன்பு நூல் போன்றவற்றை நைவேத்தியமாகப் படைத்து வழிபடல் வேண்டும்' என்று கூறினார்.

சிவனை மனதில் தியானம் செய்து விதிப்படி வணங்கியதால் 21ஆம் நாள் அம்பிகையின் விரதத்தில் மகிழ்ந்து அம்பாளின் முன் தேவ கணங்கள் புடைசூழ ரிஷபவாகனத்தில் பூலோகத்தில் அம்பிகையின் முன் காட்சி கொடுத்து 'என்ன வரம் வேண்டும் தேவி?' எனக் கேட்டார். அப்போது 'இமைப் பொழுதும் உம்மைப் பிரியாத வரம் வேண்டும் சுவாமி' என்றாா். 'தந்தோம் தேவி' என தனது இடது பாகத்தை ஈஸ்வரிக்கு கொடுத்து அர்த்தநாரீஸ்வர மூர்த்தம் பெற்று கயிலாயம் சென்றார். இறைவி இந்த விரதத்தைக் கடைப்பிடித்தமையால் ஓர் உயிரும் ஓர் உடலுமாக இறைவனின் இடப்பாகத்தைப் பெற்றாள் எனப் புராணங்கள் கூறுகின்றன. இத்தகைய சிறப்பு வாய்ந்த விரதத்தினை திருமால் கடைப்பிடித்து வைகுந்த பதவியைப் பெற்றதுடன் பிரம்மன் கடைப்பிடித்து உலகைப் படைக்கும் உயர் பதவியினைப் பெற்றார். இந்திரன் கடைப்பிடித்து பொன்னுலகை ஆண்டு வெள்ளை யானையினையும் வாகனமாகக் கொண்டார். இவ்விரதத்தின் மகிமையை இது தான் என யாராலும் வரையறுத்துக் கூற இயலாது. இவ்விரதத்தினை கடைப்பிடிப்பதால் ஐஸ்வரியம் பெருகும். வறுமையொழியும், நினைத்த காரியம் கை கூடும் என்பது அனுபவ உண்மை. எனவே தீபத்திருநாளில் இவ்வரிய நோன்பினை நோற்பவர்களுக்கு திருமகள் அனைத்து விதமான செல்வங்களையும் வளங்களையும் அளிப்பாள் என்பது நம்பிக்கை.

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## கோத்தபாய நிராகரிப்பு

குண்டுச்சட்டிக்குள்குதிரைஓட்டுவதுஎன்கிறசொலவடை தமிழில் வெகு பிரபலம். நகராமல் ஒரே இடத்தைச் சுற்றிக்கொண்டிருப்பதைக் குறிக்கும் இந்தச் சொலவடைதான் பொதுமக்கள்முன்னணியின்அரசதலைவர்தேர்தல்அறிக்கையைப் பார்க்கும்போது ஞாபகத்திற்கு வருகின்றது.

அந்த அறிக்கை தமிழ் மக்களின் கோரிக்கைகளில் சிலவற்றை நிறைவேற்றுவதாக வாக்குறுதியளிக்கின்றது.

தமிழர்களின் பிரச்சினைக்கான தீர்வு குறித்துப் பேசப்படும் போது இரு தளங்களில் அவை நோக்கப்படுவது வழமை. முதலாவது உடனடிப் பிரச்சினைகளுக்கான தீர்வு. மற்றையது நீண்டகாலப் பிரச்சினைகளுக்கான தீர்வு. நிரந்தரமான ஓர் அரசியல் தீர்வே நீண்டகாலப் பிரச்சினைக்கான தீர்வாகக் கொள்ளப்படுகின்றது.

பொது மக்கள் முன்னணியின் (பெரமுன) தேர்தல் அறிக்கை இதில்உடனடிப்பிரச்சினைகளுக்கானதீர்வையே அதிகளவில் முன்வைக்கின்றது. பயங்கரவாதத்தடைச்சட்டத்தி கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை 3 மாதங்களுக்குள் விடுவிப்பது, யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்களின் குடிதண்ணீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது, காணிப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணதேசியகாணி ஆணைக்குழு உருவாக்குவது, இரண்டாவது மொழிக் கற்கையைக் கட்டாயமாக்குதல், விளையாட்டுமைதானம் மற்றும் கலையரங்கம் அமைத்தல், அரசின் வசமுள்ள காணிகளை விடுவித்தல் போன்ற உடனடிப் பிரச்சினைகளுக்கான தீர்வைத் தரமுடியும் என்று கோத்தபாயவின் அறிக்கை கூறுகின்றது.

ஆனால், நிரந்தர அரசியல் தீர்வு விடயத்தில் அந்த அறிக்கை ஒற்றையாட்சிக்கு வெளியேயோ பௌத்த மதத்திற்கான முன்னுரிமை நீக்கத்துக்கோ செல்வதற்குத் தயாராக இல்லை என்பதைத்திட்டவட்டமாகத் தெரிவிக்கின்றது. ஆக, அண்மையில் தமிழ் அரசியல் கட்சிகள் 5 கூடித் தமிழர்களின் விருப்பங்கள் என்று முன்வைத்த கோரிக்கைகளை அது அடியோடு நிராகரித்துவிட்டது. அது பற்றிப் பேசக்கூடப் போவதில்லை என்பதை கோத்தபாயவும் மகிந்த ராஜபக்சவும் நேற்றைய தினம் இந்தத் தேர்தல் அறிக்கை வெளியீட்டோடு தெளிவாகக் கூறியும்விட்டனர்.

அரசியல் தீர்வு விடயத்தில் இந்த அறிக்கை கூறும் மற்றொரு முக்கியவிடயம், புதிய அரசமைப்பு ஒன்றை ஏற்படுத்துவதற்காக நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒன்று அமைக்கப்படும் என்று கூறுகின்றது. ஆக மொத்தத்தில் கோத்தபாய ராஜபக்ச வெற்றிபெற்றால், அதைத் தொடர்ந்து மகிந்த தரப்பினர் ஆட்சியைக் கைப்பற்றினால் அரசியல் தீர்வு முயற்சிகள் மீண்டும் ஒரு தடவை தொடக்கத்தில் இருந்தே தொடங்கும்.

மகிந்த ராஜபக்சவின் முன்னைய இரு பதவிக் காலங்களிலும் கூட இதேபோன்றஅனைத்துக்கட்சி நாடாளுமன்றத்தெரிவுக்குழு ஒன்று அரசியல்தீர்வு குறித்து ஆராய்வதற்காக நியமிக்கப்பட்டது. பேராசிரியர் திஸ்ஸ விதாரணவின் தலைமையில் நியமிக்கப்பட்ட இந்தக்குழுவில்தமிழ்த்தேசியக்கூட்டமைப்பினரும் ஜேவிபியினரும் கலந்துகொள்ளவில்லை என்றபோதும் ஏனைய தமிழ்க் கட்சிகளும் முஸ்லிம் கட்சிகளும் பங்கெடுத்துதீர்வுத்திட்டம்ஒன்றைத்தயாரித்துஅதனைமகிந்தவிடம் கையளித்திருந்தன.

அதன் பின்னர் இப்போது அனைத்துக் கட்சிகளைக் கொண்ட அரசமைப்புஉருவாக்கவழிகாட்டல்குழுவின்பரிந்துரைகளுடன் ஓர் அரசமைப்பு வரைவும் உருவாக்கப்பட்டுள்ளது. அதிலும் மகிந்த தரப்பினரும் பங்கெடுத்திருந்தனர். ஆனால், அவற்றையெல்லாம் விட்டுவிட்டு மீண்டும் நாடாளுமன்றத் தெரிவுக் குழு ஒன்றை அமைப்பது என்று தெரிவித்திருப்பது தீர்வை முன்வைக்காமல் மீண்டும்காலத்தை இழுத்தடிப்பதற்கான ஒரு முயற்சியேயன்றி வேறில்லை.

இதன் மூலம் குண்டுச்சட்டிக்குள் குதிரையோட்டிக்கொண்டிருப்பதே பெரமுனவின் நோக்கம் என்பது தெளிவாகின்றது. மங்கள முனசிங்க தீர்வுத் திட்டம், சந்திரிகா அம்மையாரின் தீர்வுத் திட்டம், அனைத்துக் கட்சி நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் தீர்வுத் திட்டம், அரசமைப்புச் சபையாக மாற்றப்பட்ட நாடாளுமன்றத்தின் புதிய அரசமைப்பு வரைபு மற்றும் இவற்றுக்கு வெளியே விடுதலைப்புலிகள் இயகத்தோடு நடத்திய பேச்சுக்களில் எட்டப்பட்ட இணக்கங்கள் என்று பல்வேறு திட்டங்கள் ஏற்கனவே இருக்கின்ற போதும், மீண்டும் மீண்டும் தொடக்கத்தில் இருந்தே தொடங்கப் போகின்றோம் என்று சிங்களத் தலைமைகள் சொல்வதன் நோக்கம் காலம் கடத்தல் உத்தி தவிர வேறில்லை.

# டிஜிட்டல் பரப்புரைகளில் களமாடுகின்றார் ட்ரம்ப்!



எதிர்மறையான கருத்துக்கணிப்பு வாக்குகள், பதவி விலகக் கோரும் தீர்மானம் என்றெல்லாம் பிரச்சினைகளை எதிர்கொண்டிருந்தாலும், ட்ரம்ப் ஒரு முக்கியமான தேர்தல் களத்தில் மற்றவர்களையெல்லாம் பின்னுக்குத் தள்ளியிருக்கிறார்: அதுதான் இலத்திரணியல் பரப்புரைக் களம்.

'பிராட் பார்ஸ்கேலின்' மேலாண்மையின் கீழ் ட்ரம்ப்பின் மறுதேர்தல் இயந்திரம் ஜனநாயகக் கட்சியின் எந்த வேட்பாளரைக் காட்டிலும் மிக அதிகமாகப் பல கோடிக்கணக்கான டொலர்களை அதிநவீன சிற்றிலக்குத் தொழில்நுட்பத்தில் முதலீடு செய்திருக்கிறது. முகப்புத்தகத்துக்காகவும் கூகுளுக்காகவும் ட்ரம்ப் செப்டம்பர் 19ஆம் திகதி வரை இந்திய மதிப்பில் 113 கோடி ரூபாவைச் செலவிட்டிருக்கிறார். ஆனால், ஜனநாயகக் கட்சியின் உச்ச வேட்பாளர்கள் மூன்று பேருக்கும் சேர்த்தே 110 கோடி ரூபாதான் இதற்குச் செலவாகியிருக்கிறது.

ட்ரம்ப்பின் செயல்முறைகளெல்லாம் 2016 ஆம் ஆண்டிலிருந்து இயங்கிக்கொண்டிருக்கின்றன. தொழில்நுட்பங்களை உருவாக்குவதும், அப்படி உருவாக்கி, அதன் மூலம் வாக்காளர்களை அடையாளம் கண்டு, அவர்களுக்கு உரிய தகவல்களையும் செய்திகளையும் மின்னணு தகவல்தொடர்புக்கு உரிய சாதனங்களையும் உருவாக்குவதுதான் அந்தச் செயல்முறைகளின் வேலை. ட்ரம்ப் தற்போது ஆட்சியில் இருப்பவர் அவருக்குப் முதன்மையான எதிராளி என்று எவரும் இல்லை. இதெல்லாம் அவருடைய அணியினருக்கும் குடியரசுக் கட்சியின் தேசியக் குழுவுக்கும் சாதனங்களை உருவாக்கவும் தரவுகளைத் திரட்டவும் மாதிரிகளைப் பரீட்சித்துப் பார்க்கவும் செய்திகள், தகவல்கள் அனுப்பவும், ஆதரவாளர்களை முடுக்கிவிடவும் மூன்று ஆண்டுகளை வழங்கின என்கிறார்கள் அரசியல் நோக்கர்கள்.

### இந்தச் சாதகமான அம்சம் எவ்வாறாக இயங்குகிறது?


எம்ஏஐடிதான் இதற்கு அடிப்படை என்கிறார்கள். அதென்ன எம்ஏஐடி? அலைபேசி விளம்பர அடையாள எண்தான் (mobile advertising id) அது. எமது எல்லா அலைபேசிகளும் தனித்துவமான விளம்பர அடையாளத்தைக் கொண்டுள்ளன. தேர்தல் பரப்புரை செய்யும் கட்சிகள் இதைக் குறிவைக்கின்றன.

இதன் மூலம் வாக்காளர்களின் அலைபேசிகளின் தனித்துவ அடையாளத்தைக் கண்டுபிடித்து, அதனுடன் தொடர்புடைய தரவுகளை அள்ளிக்கொள்கின்றன. இந்த அளவுக்கு விரிவான தகவல்களைப் பெறுவதால் அதன் மூலம் விளம்பரங்கள், அலைபேசி அழைப்புகள் மூலமாகவும், வீட்டுக்கே பரப்புரைப் பிரதிநிதிகளை அனுப்புவதன் மூலமாகவும் வாக்காளர்களைக் குறிவைக்கிறார்கள்.

ஜனநாயகக் கட்சியும் குடியரசுக் கட்சியினரும் மிகப் பெரும் வாக்காளர் பட்டியல்களைப் பராமரித்து இற்றைப்படுத்தியும் (update) வருகிறார்கள். அவற்றில் கடன் அட்டைப் பயன்பாடு, பத்திரிகை சந்தாக்கள், கிளப்களுக்கு வைத்திருக்கும் பாக்கி, வேட்டைமீன் பிடி உரிமங்கள் போன்ற தகவல்கள் எல்லாம் இருக்கும். இதன் மூலம் எந்த வேட்பாளரை, எந்த வாக்காளர்கள் தேர்ந்தெடுப்பார்கள் என்று கணிக்க முடியும். எல்லாம் எம்முடைய அலைபேசியில் இருந்து எடுக்கப்படும் தகவல்கள்தான். இந்த உலகை நோக்கித்தான் நாம் போய்க்கொண்டிருக்கிறோம். இதில் தங்களிடம் உள்ள பணத்தால் பழம்பெரும் கட்சியான குடியரசுக் கட்சி, பல காத தூரம் முன்னால் இருக்கிறது என்கிறார்கள்.

அடுத்ததாக, 'சிற்றிலக்கு' (microtargetting). ஒரு குறிப்பிட்ட பகுதியில் உள்ள அலைபேசிகளை கோபுரங்களுக்கு அருகில் உள்ள வாக்காளர்களை சமிக்ஞையின் மூலம் அடையாளம் காணும் தொழில்நுட்பம் இது. தேர்தல் நாளில் வாக்காளர்களை வாக்களிக்கச் செல்லும்படி தூண்டும் செய்திகளை இதன் மூலம் அனுப்புவார்கள்.

நுகர்வோர்தரவுகள், மக்கள்தொகை அமைப்பு போன்றவற்றைப் பயன்படுத்தும் உத்தி இது. இதன் மூலம் தனிப்பட்ட நபர்களின் ஆர்வங்களையும், ஒரே மாதிரியான எண்ணங்களைக் கொண்ட குழுக்களையும் அடையாளம் கண்டு, அவர்களின் எண்ணங்களிலும் செயல்களிலும் தாக்கம் செலுத்தும் உத்தி.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த இரு தரப்புப் போர் கடந்த 15 ஆண்டுகளாக நடைபெற்றுவருகிறது.

**துரத்தப்படும் வாக்காளர்கள்**

2004ஆம் ஆண்டில் ஜோர்ஜ் டபிள்யு புஷ்ஷின் மறுதேர்தலின் போதுதான் இந்தத் தொழில்நுட்பம் முதன்முறையாகப் பயன்படுத்தப்பட்டது. குடியரசுக் கட்சிசார்புமனநிலைகொண்டவர்களைத் தேர்தல் நாளன்று வாக்குச்சாவடிக்கு ஈர்க்க இந்தத் தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டது. 2008ஆம் ஆண்டிலும் 2012ஆம் ஆண்டிலும் ஒபாமாவும் அவரது ஜனநாயகக் கட்சியினரும் அந்தத் தொழில்நுட்பத்தில் கரைகண்டு குடியரசுக் கட்சியை முந்தினர். இதன் மூலம் நன்கொடையாளர்கள், வாக்காளர்கள் போன்றவர்களிடம் எளிதாகச் சென்றுசேர்ந்தனர்.

இதுவே 2016ஆம் ஆண்டில் காற்று திசைமாறி ட்ரம்ப் பக்கம் வீசியது. இதற்கு முக்கியக் காரணம், ட்ரம்ப் தனது இலத்திரணியல் செயல்பாடுகளுக்காக 'பிராட் பார்ஸ்கேலைத்' தேர்ந்தெடுத்தது. 2016ஆம்ஆண்டில்ஹிலாரி கிளிண்டனும் ட்ரம்ப்பும் ஜூன் நவம்பருக்கு இடையிலான காலகட்டத்தில் முகப்புத்தகத்துக்காகப் பெருமளவு செலவழித்திருக்கிறார்கள் என்று முகப்புத்தகத்தின் வெள்ளை அறிக்கை தெரிவிக்கிறது. ஹிலாரி 66 ஆயிரம் வேறுபட்ட விளம்பரங்களைப் பரீட்சித்துப் பார்த்தார் என்றால், ட்ரம்ப் 59 லட்சம் வேறுபட்ட விளம்பரங்களைப் பரீட்சித்துப் பார்த்தார்.

**ட்ரம்ப்பின் பரப்புரைப் பாணி**

ட்ரம்ப்பின் அசாதாரணமான பேச்சு உருவாக்கிய அதிர்ச்சியையும் வியப்பையும் மக்களுக்குக் கடத்துவதுதான் தங்கள் பரப்புரைப் பாணி என்கிறார் பார்ஸ்கேல். தங்கள் பரப்புரையின் முரண்நகையையும் பார்ஸ்கேல் தொட்டுக்காட்டுகிறார். 'இந்த சமூகத் தளங்களெல்லாம் அமெரிக்காவின் மேற்கு மற்றும் கிழக்குக் கடற்கரைகளில் உள்ள மிகவும் தாராளவாத சிந்தனைக் கொண்டவர்களால் உருவாக்கப்பட்டன. நாங்களோ அவற்றைக் கொண்டு மரபுவாதச் சிந்தனைகளை எப்படி மக்களிடம் கொண்டுசெல்வது என்பதைக் கண்டறிந்திருக்கிறோம். இப்படியெல்லாம் நடக்கும் என்று அவர்கள் நினைத்தே பார்த்திருக்க மாட்டார்கள்' என்கிறார்.

கருத்துக்கணிப்புகளைப் பொறுத்தவரை ட்ரம்ப்புக்கு சிறுபான்மை வாக்குகளே கிடைத்திருக்கின்றன. தேர்தலில் பெரும்பான்மை வாக்குகளை அவர் பெறுவது தற்போதுள்ள சூழலில் அரிதாக இருக்கிறது. இந்தச் சூழலில் அவர் தனது வாக்கு வங்கியை மட்டும் சார்ந்திருக்க முடியாது.

அவர் சார்புள்ள சிந்தனை கொண்டிருப்பவர்கள், ஆனால் வாக்களிக்கச் செல்லாத மக்களை நோக்கி அவர் திரும்ப வேண்டும். அவர்களை ஈர்த்தால் மட்டுமே அவர் வெற்றிபெறுவதற்குச் சாத்தியம் இருக்கிறது. இதற்கிடையே ட்ரம்ப்பும் பார்ஸ்கேலும் கிடைக்கும் ஒவ்வொருதொழில்நுட்பத்தையும்கொண்டு, ஜனநாயகக் கட்சிக்குக் கிடைக்கக்கூடிய ஆதரவுத் தளத்தைத் தடுத்து நிறுத்த முயன்று கொண்டிருப்பார்கள்.

உயர் தொழில்நுட்பப் போர்க்களத்தில் சமீபகால வரலாற்றைப் பொறுத்தவரை ஆட்சியுள்ளவர்களுக்கு, அதிலும் முதன்மைப் போட்டியாளர்கள் இல்லாதவர்களுக்கே நிலைமை பெரிதும் சாதகமாக இருந்துவந்திருக்கிறது. 2004ஆம் ஆண்டில் புஷ்ஷும், 2012ஆம் ஆண்டில் ஒபாமாவும் இதற்கு உதாரணங்கள். இவர்கள் இருவரின் போட்டியாளர்களான ஜோன் ஹெர்ரி, மிட் ரோம்னி ஆகியோரிடம் போதுமான பணமோ நேரமோ இருந்ததில்லை.





எனினும், இந்த முறை வேறுவிதமாகவும் அமையலாம்.

**சமூக வலைத்தளப் போர்க்களம்**

பணத்தைப் பொறுத்தவரை, ட்ரம்ப் மீதான வெறுப்பு ஜனநாயகக் கட்சியின் வேட்பாளருக்குப் பண வெள்ளத்தைக் கொண்டுவரலாம். ஆனால், தங்கள் இலத்திரணியல் பரப்புரையை மேற்கொள்வதற்கான நேரம்தான் ஜனநாயகக் கட்சியினருக்கு இருக்காது. கூடவே, அந்தக் கட்சிக்குத் தங்கள் செய்தியைச் சரியாக மக்களிடம் கொண்டுசேர்க்கத் தெரியாத பிரச்சினையும் இருக்கிறது. ஒரு தரப்பானது இலத்திரணியல் பரப்புரையை ஆயுதமாக்கியிருக்கிறது.

இன்னொரு தரப்பு அப்படிச் செய்யவில்லை என்கிறது. ஜனநாயகக் கட்சியினர் உண்மைகள் மீதும் உண்மையான தரவுகள் மீதும் கவனம் செலுத்துகிறார்கள். குடியரசுக் கட்சியோ மக்களின் அச்சங்களைத் தட்டியெழுப்பி, அவர்களின் உணர்வுகளைப் பயன்படுத்திக்கொள்கிறார்கள்; உண்மையல்லாத தகவல்களைக் கொண்டு மக்களைத் தவறாக வழிநடத்துகிறார்கள். 'முகப்புத்தகம்தான் நாங்கள் 2016ஆம் ஆண்டில் வென்றதற்குக் காரணம்' என்கிறார் பார்ஸ்கேல். அதிபர் தேர்தலுக்கான சமீபத்திய இலத்திரணியல் விளம்பரம் தொடர்பான தரவுகளை மட்டும் கொண்டு பார்க்கும்போது, வரலாறு தன்னைத் தானே திரும்பவும் நிகழ்த்திக்கொண்டுவிடுமோ என்ற அச்சம் ஏற்படுகிறது.

> “இந்த சமூகத் தளங்களெல்லாம் அமெரிக்காவின் மேற்கு மற்றும் கிழக்குக் கடற்கரைகளில் உள்ள மிகவும் தாராளவாத சிந்தனை கொண்டவர்களால் உருவாக்கப்பட்டன. நாங்களோ அவற்றைக் கொண்டு மரபுவாதச் சிந்தனைகளை எப்படி மக்களிடம் கொண்டுசெல்வது என்பதைக் கண்டறிந்திருக்கிறோம். இப்படியெல்லாம் நடக்கும் என்று அவர்கள் நினைத்தே பார்த்திருக்க மாட்டார்கள்.”




## ஆசிரியருக்கான கடிதம்

# வாசிப்பு மாதத்தில் செய்யக்கூடிய செயலா இது!

உதயன் பத்திரிகையின் இரண்டு செய்திகளை இங்கு கோடிட்டுக் காட்டப்பட வேண்டிதாகின்றன. முதலாவது சாவகச்சேரி பொது நூலகத்தால் வாசிப்பை வளர்க்கும் விதமாக ஏற்பாடு செய்யப்பட்ட பேரணி தொடர்பான செய்தி. இந்தச் செய்தி உதயனின் நேற்றுமுன்தினப் பதிப்பின் முதல் பக்கத்தில் வெளிவந்தது. இரண்டாவது பழம்பெரும் யாழ்ப்பாணம் பொதுநூலகத்தின் முன் வீதி பூட்டப்பட்டு அந்தப் பகுதி தீபாவளி வியாபார நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்டிருக்கின்றது என்ற செய்தி. இந்தச் செய்தி உதயனின் நேற்றைய பதிப்பில் வெளியானது.

சிறுவர்களிடத்தில் வாசிப்புப் பழக்கத்தை வளர்க்க வேண்டும். பாடசாலைகள்தோறும் வாசிப்பு சார்ந்த திட்டங்களை முன்னெடுக்க வேண்டும் என்று வாய்கிழிய கத்திக்கொண்டு வருகின்றோம். இத்தகையதொரு நிலையில் வாசிப்பு மாதத்தில் நூலகத்தின் வீதிகள் பூட்டப்பட்டமை எந்தளவுக்கு மடமைத்தனம். படிப்பது தேவாரம் இடிப்பது சிவன்கோவில் என்ற சொல்லடைதான் இங்கே நினைவுக்கு வருகின்றது.

மூன்று நாள்களுக்கு மட்டுமே மேற்குறித்த வியாபார நடவடிக்கையாக இருந்தாலும் எந்தளவுக்கு பிற்போக்கான செயற்பாடு இது. யாழ்ப்பாணம் நகரப்பகுதியில் யாழ்ப்பாணம் பொதுநூலகத்துக்கு முன் வீதியைத் தவிர்த்து ஏனைய பகுதிகளில் இவ்வாறான அங்காடிகளை அமைக்க இடம் இல்லையா?.

வியாபாரம் முக்கியம்தான் அதைவிட முக்கியம் பழமையும், பண்பாடும், பழக்க வழக்கங்களும். யாழ்ப்பாணம் மாநகர சபையினருக்கு இது உறைக்கட்டும்.

ஆர்.லயனல், ஆனைக்கோட்டை

**வாசகர்களே!**

ஆசிரியருக்கான கடிதம் பகுதிக்கு வந்துசேர்கின்ற பல கடிதங்கள் எழுதுபவரின் சுயவிவரங்கள் இல்லாத காரணத்தால் பிரசுரிக்க முடியாத நிலையில் இருக்கின்றன. ஆகையால் தாங்கள் ஆசிரியருக்கு எழுதுகின்ற கடிதத்தில் உங்களுடைய பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல் பயன்படுத்துபவராக இருந்தால் மின்னஞ்சல் முகவரி போன்றனவற்றைத் தவறாது குறிப்பிட்டு, அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். தங்களின் பெயர் விவரங்களை வெளிப்படுத்த வேண்டாம் என்றால் அது குறித்துக் குறிப்பிடுங்கள். மேற்குறித்த விடயங்கள் இணைக்கப்படாத கடிதம் பிரசுரிக்கப்பட மாட்டாது என்பதைக் கவனத்தில் கொள்க! எழுதுகின்ற [illegible] ஆவணங்கள் ஏதும் இருந்தால் அவற்றை இணைத்து அனுப்புவதும் சிறந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டல் தாவரம் இருக்கும் நிலம் வனவளத் திணைக்களத்துக்குரியது

## வருகிறது மற்றொரு அரசிதழ்

யாழ்ப்பாணம், ஒக். 26

நாட்டின் எப்பாகத்திலேனும் கண்டல் தாவரம் காணப்படுமாக இருந்தால் அந்தப் பகுதி நிலம் வனவளத் திணைக்களத்துக்கு உரியது என்று அரசிதழ் வெளியிடப்படவுள்ளது.

நாட்டின் எந்தப் பாகத்திலும் காடு வளர்ந்த பிரதேசங்கள் வனவளத் திணைக்களத்தின்பிடியில்கொண்டு செல்லப்பட்ட நிலையில் தற்போது மேலும் ஓர் அரச இதழ் வெளியிடப்படவுள்ளது. இதன் அடிப்படையில் நாட்டில் எந்தப் பாகத்திலேனும் கண்டல் தாவரம் காணப்பட்டால் அதுவனவளத்திணைக்களத்துக்கு உரியதுஎன்றுபுதியஅரசிதழ்வெளியிடப்படவுள்ளது.

இந்தப் புதிய அரசிதழால் வடக்கு கிழக்கு மாகாணங்களே அதிகம் பாதிக்கப்படும். வடக்கின் 5 மாவட்டங்களிலும்தற்போதுகண்டல்தாவரம் பரவலாக வளர்ந்துள்ளது. இதனால் வடக்கின் பல்வேறு இடங்கள் வனவளத் திணைக்களத்தின் பிடிக்குள்செல்லும்என்றுசுட்டிக்காட்டப்படுகின்றது. (ம-105)



## குடிமக்கள் குழுக்கள் வடமராட்சியில் சந்திப்பு

யாழ்ப்பாணம், ஒக். 26

வடமராட்சிக் கிழக்கு மற்றும் மன்னார் மாவட்ட பிரஜைகள்குழுக்களிடையிலான சந்திப்பு கடந்த புதன்கிழமை வடமராட்சியில் இடம்பெற்றது.

நிகழ்வில் வடமராட்சிக் கிழக்கு பிரஜைகள் குழுவுக்கான புதிய நிர்வாகத் தெரிவு இடம் பெற்றது. இதில் தலைவராக த.சிறீஸ்கந்தராசா, செயலாளராக தே.பகீரதன், பொருளாளராக திருமதி ஜெ.சற்குணதேவி, உப தலைவராகஜெ.குறிஞ்சிகுமரன், உப செயலாளராக பி.பிறேம ரஞ்சினி, வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சார்பாகதிருமதிமேரிபற்றிமாபுஸ்பராணி, மாற்று திறனாளிகள் அமைப்பு சார்பில்சுரேஸ்குமார்உள்பட 13பேர்தெரிவுசெய்யப்பட்டனர்.

வடமராட்சிக்கிழக்குமுன்னாள் பிரஜைகள் குழுத் தலைவர் சி.த.காண்டீபன் தலைமையில் இடம் பெற்ற சந்திப்பில் தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் பிரதிநிதிகள், பருத்தித்துறைப் பிரதேச சபை உறுப்பினர்கள், மன்னார் மற்றும் வடமராட்சிக் கிழக்கு பிரஜைகள் குழு உறுப்பினர்கள், வடமராட்சிக் கிழக்கு காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைக் கண்டறியும் உறவுகள் அமைப்பினர், வடமராட்சிக் கிழக்கு மாற்றுதிறனாளிஅமைப்பின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். (க-160)

# தங்கக்குரல்த்தேர்வுக்கான இறுதி போட்டி விரைவில்

யாழ்ப்பாணம், ஒக் 26

வடக்கின் தங்க குரல் தேர்வுக்கு இறுதிப் போட்டி விரைவில் நடைபெறவுள்ளது.

வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் எண்ணக்கருவில், வடக்குமாகாணத்திலுள்ள இசையார்வலர்களை ஊக்குவிக்கும்முகமாகவடக்கின்தங்கக்குரல் தேர்வுப் போட்டி விறுவிறுப்பாக நடைபெற்று இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளது.

வடக்குமாகாணஆளுநர்செயலகம்மற்றும் பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம்ஆகியவற்றின்ஏற்பாட்டில்இந்தியத் திரைப்பட இயக்குநர்கள் இளையராஜா மற்றும் அமீர் ஆகியோரின் வருகையுடன் யாழ் பொது நூலக கேட்போர் கூடத்தில்கடந்த5ஆம்திகதிபோட்டிகள்ஆரம்பமாகின.

போட்டியில் 15 தொடக்கம் 30 வயதுக்கு இடைப்பட்ட நூற்றுக்கணக்கான வடமாகாணத்தைச் சேர்ந்த இளைஞர்கள் பங்குபற்றினர்.

இந்தப்போட்டியில்முதற்சுற்றுக்காக130 பேர்தெரிவுசெய்யப்பட்டனர். இரண்டாம் சுற்று குரல் தேடல் போட்டிக்காக 81பேர் தெரிவாகினர். மூன்றாம் சுற்றில் 37 இசையார்வலர்கள் போட்டியிட்டு தற்போதுநான்காம்சுற்றுகுரல்தேடல்போட்டிக்காக 20 பேர் நடுவர்களால் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இந்த20போட்டியாளர்களும்இறுதியில் போட்டியிட்டுதமது இசைத்திறமைகளை வெளிப்படுத்துவர். அவர்களில் இறுதிச் சுற்றுக்கு 8 போட்டியாளர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

தெரிவு செய்யப்படும் 8 போட்டியாளர்களும் யாழ்ப்பாணத்தில் மிகப்பிரமாண்டமாய் நடைபெறவுள்ள இறுதிப்போட்டியில் கலந்து கொண்டு போட்டியிடவுள்ளதுடன் வடக்கின் தங்க குரலுக்குச்சொந்த மானவர் யார்? என தெரிவு செய்யப்படவுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-7)

## கொண்டடி வீதி மக்கள் பாவனைக்கு

யாழ்ப்பாணம், ஒக். 26

துரித ஊரெழுச்சி அபிவிருத்தித் திட்டத்தில் சீரமைக்கப்பட்ட குருநகர் கொண்டடி வீதி கடந்த திங்கட்கிழமைமுதல்மக்கள் பாவனைக்கு விடப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சோ சேனாதிராசாவின், யாழ்ப்பாணம் தொகுதிக்கான துரித ஊரெழுச்சி அபிவிருத்தி திட்டத்தில், யாழ்ப்பாண மாநகர முதல்வரின் சிபார்சில் வீதிசீரமைக்கப்பட்டது.

யாழ். மாநகர முதல்வர் இம்மானுவல் ஆனல்ட் வீதியை மக்கள் பாவனைக்குக்கையளித்தாா்.

நிகழ்வில் மாநகரசபை உறுப்பினர் மேரி அஞ்சலா, இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி குருநகர் கிளை உறுப்பினர்கள், அந்தப் பகுதி பொது மக்கள்கலந்துகொண்டனர் என்று முதல்வரின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (க)



## சென்.ஜோன்ஸ் மாணவர்கள் மதிப்பளிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 26

இந்த வருடத்துக்கான தேசிய தமிழ்த்தின விழாவில் விவாதப்போட்டியில்முதலிடம்பெற்றயாழ்பரியோவான் கல்லூரி (சென். ஜோன்ஸ்) மாணவர்களுக்கான பதக்கம் வழங்கும் நிகழ்வு கல்வி அமைச்சில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

யாழ். பரியோவான்கல்லூரி அணிசார்பாகப் பங்குபற்றிய வேல்நம்பி சதுசிகன், ரனேஸ் ஆதித்தன், டேவிட் லிவின்ஸ்டன்ஆகியோர்பதக்கங்கள்வழங்கிமதிப்பளிக்கப்பட்டனர். (ம)

# சாவகச்சேரி மகளிர் கல்லூரி மாணவர்களுக்குமதிப்பளிப்பு



சாவகச்சேரி, ஒக். 26

சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் சாதனை மாணவர்கள் நேற்று மதிப்பளிக்கப்பட்டனர்.

நிகழ்வில்கடந்த தரம்5புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிக்கு மேல் புள்ளிகள் பெற்ற மாணவர்களும், 70 புள்ளிகளுக்கு மேல் புள்ளிகள் பெற்ற மாணவர்களும், ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கிடையிலான தேசிய நிலை செயற்பட்டுமகிழ்வோம்போட்டியில்வெற்றியீட்டியதரம்3, தரம்4மாணவர்களும் மதிப்பளிக்கப்பட்டனர்.

புலமைப் பரிசில் பரீட்சையில் வெட்டுப் புள்ளிக்கு மேல் புள்ளிகள் பெற்றவர்களுக்குவிருதுகளும், கற்றல்உபகரணங்களும், 70 புள்ளிகளுக்கு மேல் புள்ளிகள் பெற்ற மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும், சான்றிதழ்களும், செயற்பட்டுமகிழ்வோம்போட்டியில்வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பதக்கங்களும், சான்றிதழ்களும்வழங்கப்பட்டன.

அதிபர் திருமதி ல.முகுந்தன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக மாகாணக் கல்வித் திணைக்கள உதவிக் கல்விப் பணிப்பாளர்தி.ஆயவன்,சிறப்புவிருந்தினர்களாக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர்சோ.திருக்குமரன், மதிப்புறுவிருந்தினர்களாகவலயசெயற்பட்டுமகிழ்வோம் இணைப்பாளர்திருமதிஇ.மயில்வாகனசிங்கம், கல்லூரிபழையமாணவன்ஸ்ரீ. புவிசுதேஷ் ஆகியோர் கலந்து கொண்டனர். (க-9)



சைவ பரிபாலன சபையின் அனுசரணையுடன், சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி இந்து மாமன்றத்தின் ஏற்பாட்டில் 35 மாணவர்களுக்கு, சிவசிறி வி.பாலகுமாரக்குருக்களால் நேற்று சமய தீட்சை வழங்கப்பட்டது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சி கிழக்கில் 40 ஆயிரம் ஏக்கரை திணைக்களம் விடுவிக்கத்தான் வேண்டும்

## மாவட்டச் செயலகம் அமைச்சுக்குக் கடிதம்

யாழ்ப்பாணம், ஒக். 26

வடமராட்சி கிழக்கில் அரசிதழில் பிரசுரிக்கப்பட்ட 40 ஆயிரம் ஏக்கர் நிலத்தில் மக்கள் குடியிருப்பு, 17 உள்ளூராட்சி நிலையங்கள், உல்லாசப் பயணத்துறையின் வளர்ச்சி போன்றவை உள்ளன. எனவே குறித்த நிலத்தை, வன உயிரிகள் திணைக்களம் விடுவித்தே ஆக வேண்டும் என்று மாவட்டச் செயலகம் அறிக்கை சமர்ப்பித்துள்ளது.

நிலத்தை மீள மக்களிடமே வழங்க நடவடிக்கை எடுக்குமாறு தலைமைஅமைச்சர் அலுவலகம் அண்மையில் வன உயிரிகள் அமைச்சுக்கு எழுத்தில் கடிதம் அனுப்பி வைத்திருந்தது. மாவட்டச் செயலகத்துக்கும் பிரதியிட்டிருந்தனர். இதில் வடமராட்சிக் கிழக்குப் பகுதியில் உள்ள மக்களின் வாழ்விடங்கள், தொழில் மையங்கள், மத வழிபாட்டுத் தலங்கள் என அனைத்தையும் உள்ளடக்கி எவருக்குமே தெரியாதவாறு கடந்த ஆட்சியில் 42 ஆயிரம் ஏக்கர் நிலத்தை வனஉயிரினங்கள் திணைக்களம் இரகசியமான முறையில் அரசிதழில் பிரசுரித்து தனது ஆளுகைக்குள் எடுத்துக் கொண்டது.

இதனால் இந்தப் பகுதியில் வாழ்ந்த பலஆயிரம்குடும்பங்கள் இருப்பிடத்தையும் மேலும் பல ஆயிரம் குடும்பங்கள் தொழில் வாய்ப்பையும் இழந்தன. இதனைக் கருத்திற்கொண்டு பல முயற்சிகளின் பின்னர் அந்தப் பகுதியிலிருந்து 25 ஆயிரம் ஏக்கர் நிலத்தை விடுவிக்க குறித்த திணைக்களம் இணக்கம் தெரிவித்தது. இருப்பினும் இன்று வரை இடம்பெறவில்லை.

இவ்வாறு இணக்கம் தெரிவித்து 2 ஆண்டுகள் கடந்தபோதும் எந்த முன்னேற்றமும் கிடையாது. இதனால் 25ஆயிரம் ஏக்கர் நிலத்தை விடுவிக்க குறித்த திணைக்களம் நடவடிக்கை எடுக்க தலைமை அமைச்சர் உத்தரவிட வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கடந்த ஓகஸ்ட் மாதம் 16ஆம் திகதி யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற சிறப்பு ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

குறித்த திணைக்களத்திடம் இது தொடர்பில் கேட்டால் போதிய விளக்கம் அளிப்பதில்லை. ஏதாவது கடிதம் அனுப்பினால்கூட தனியே சிங்கள மொழியில் கடிதம் அனுப்பி வைக்கப்படுகின்றது. தமிழ் தெரியாது விட்டால் ஆங்கிலத்தையாவது உபயோகம் செய்து மக்களின் விடயத்துக்குத் தீர்வை முன்வையுங்கள் என்று ஆளுநர் சுரேன் ராகவன் தெரிவித்திருந்தார்.

இதற்குப் பதிலளித்த தலைமை அமைச்சர் அரசுடமையாக்குவதாக அரசிதழ் அறிவித்தல் வெளியிடும்போது பின்பற்றாத நடைமுறை அதனை விடுவிப்பதற்கு மட்டும் கோருவது எந்தவகையில் நியாயமானது?. இதனை மக்களின் பணியாகக்கருதி உங்கள் திணைக்களத்துக்குத் தெரிவித்து உடன் பணியை நிறைவேற்றுங்கள் என்று தெரிவித்த நிலையில் தலைமைஅமைச்சர் செயலகத்தால் குறித்த அமைச்சுக்கு எழுத்திலும் அறிவுறுத்தல் வழங்கி அதன் பிரதி மாவட்டச் செயலருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அதன் தற்போதைய நிலை தொடர்பில் அமைச்சு விளக்கம் கோரியது.

இது பற்றிய முழுமையான விளக்கங்கள் இரு பிரிவுகளாக அனுப்பி வைக்கப்பட்டுள்ள நிலையில் இந்தப் பகுதியில் காணப்படும் தேவாலயங்கள் சைவ ஆலயங்கள், வீடுகள், வாழ்வாதார நிலங்கள், மீன்பிடி இறங்குதுறைகள் என்பன எண்ணிக்கையுடன் சுட்டிக்காட்டப்பட்டு வரை படமும் இணைக்கப்பட்டு விடுவிப்புக்கான அரசிதழுக்கான முன்மொழிவுகள் மாவட்டச் செயலகத்தால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. (த-105)



## தற்காலிக பந்தல் அமைத்து வியாபாரம் செய்ய அனுமதி

வவுனியா, ஒக். 26

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு வவுனியா கொறவப்பொத்தான வீதியின் இருமருங்கிலும் வியாபாரம் மேற்கொண்டு வரும் நடைபாதை வியாபாரிகள் தற்காலிகப் பந்தல் அமைத்து வியாபாரம் செய்வதற்கு வவுனியா நகரசபை அனுமதி வழங்கியது.

பண்டிகைக் காலத்தை முன்னிட்டும், மழையுடனான காலநிலையைத் தொடர்ந்தும், வவுனியா நடைபாதை வியாபாரிகளின் கோரிக்கையைக் கருத்திற்கொண்டு தற்காலிகமாகக் கொட்டகை அமைப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக வவுனியா நகரசபைத் தவிசாளர் இ.கௌதமன் தெரிவித்தார்.

எதிர்வரும் 28 ஆம் திகதிக்குப் பின்னர் குறித்த பகுதிகளில் நடைபாதை வியாபாரத்துக்கு முழுமையாகத் தடை விதிக்கப்படவுள்ளது. வவுனியா பழைய பேருந்து நிலையப் பகுதியில் அவர்கள் வியாபாரம் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, நாளைய தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு வவுனியாவில் பண்டிகைக் கால வியாபாரம் களைகட்டியுள்ளது. வவுனியா நகர்ப் பகுதிகளில் அதிகளவான சனநடமாட்டத்தைக் காண முடிகின்றது. (த-110)

## யாழ். பொது நூலகத்தால் வாகன நடமாடும் சேவை

யாழ்ப்பாணம்,ஒக்.26

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு, வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கும் நோக்கில் யாழ்ப்பாணம் பொது நூலகத்தால் வாகன நடமாடும் நூலக சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.



யாழ்ப்பாணத்தில் உள்ள பாடசாலைகளுக்குச் செல்லும் நடமாடும் நூலக வாகனம், அங்கு மாணவர்களிடையே பல்வேறு விழிப்புணர்வுச் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகிறது.

வாகனத்தில் உள்ளே நூலகம் போன்ற அமைப்பில் நூல்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. மாணவர்கள் அதிகம் வாசிப்பதால் அவர்களின் அறிவு விருத்தி அடையும். ஆகவே வாசிப்பு மாதத்தில் அதனை ஊக்குவிக்கும் நோக்கில் நடமாடும் நூலக சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-7)

## சிறார்களிடையே போட்டி

கொடிகாமம்,ஒக்.26

சாவகச்சேரி பிரதேச சபையின் மிருசுவில் பொது நூலகத்தால், மிருசுவில் பிரதேச எல்லைக்குட்பட்ட முன்பள்ளி மாணவர்களுக்கிடைய நேற்று முன்தினம் போட்டிகள் நடத்தப்பட்டன.

45 வயதுப் பிரிவு மாணவர்களுக்கு வர்ணம் தீட்டும் போட்டியும், 56 வயது பிரிவு மாணவர்களுக்கு வாசிப்புக்கான முன்னாயத்தமாக உருக்களை இனங்கண்டு வாசித்தல் போட்டியும் நடத்தப்பட்டது.

தொடர்ந்து கதை கூறும் நிகழ்வு இடம் பெற்றது. நூலக மூத்த வாசகர் திருமதி எம்.எம்.வை. அலெக்சாண்டர் முன்பள்ளி சிறுவர்களுக்கான நாவல் பழமும், தேவதையும் என்ற மகிழ்வூட்டும் கதையைக் கூறி மகிழ்வித்தார். (க-159)



### பரீட்சைகள் பிற்போடல்

யாழ்ப்பாணம், ஒக்.26

சைவ பரிபாலன சபையின் வருடாந்த பரீட்சை இன்று சனிக்கிழமை நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது.

எனினும் தேசிய மட்ட போட்டிகளும், பரீட்சைகளும் நடைபெற இருப்பதால் மாணவரின் நலன்கருதி மாகாணக் கல்வி அமைச்சின் செயலரது ஆலோசனைக்கு அமைவாக குறித்த பரீட்சை எதிர்வரும் 30 ஆம் திகதி புதன்கிழமைக்குப் பிற்போடப்பட்டுள்ளது என்று பரீட்சைச் செயலர் அறிவித்துள்ளார்.

அதேவேளை யாழ்ப்பாணம் மறை மாவட்ட மறைக்கல்வி நடு நிலையத்தின் ஏற்பாட்டில் இன்று சனிக்கிழமை நடைபெறவிருந்த கத்தோலிக்க மறைக்கல்விப் பரீட்சை எதிர்வரும் 30ஆம் திகதிக்கு பிற்போடப்பட்டுள்ளது என்று மறைக்கல்வி நடுநிலைய இயக்குநர் அருட்பணி ஏ.எவ். பெனற் அடிகள் அறிவித்துள்ளார்.

அவரவர் பாடசாலைகளில் பரீட்சைக்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. அனைத்துக் கத்தோலிக்கப் பரீட்சாத்திகளையும் இந்தப் பரீட்சையில் தோற்றுமாறும் மறைக்கல்வி இயக்குநர் அறிவித்துள்ளார். (க-135)

### முதலிக்குளம் வீதி சீரமைப்புக்கு அடிக்கல்

ஈச்சமோட்டை முதலிக்குளம் வீதிச் சீர மைப்புக்கு அண்மையில் அடிக்கல் நடப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சோ.சேனாதிராசாவின், யாழ்ப்பாணம் தொகுதிக்கான துரித ஊரெழுச்சி அபிவிருத்தித் திட்டத்தில் வீதிச் சீரமைப்புக்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வீதிக்கான அடிக்கல்லை மாநகர முதல்வர் இம்மானுவல் ஆனல்ட் நட்டார். தொடர்ந்து பணிகளையும் ஆரம்பித்து வைத்தார்.

நிகழ்வில் முதல்வரின் வட்டார இணைப்பாளர்கள், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் ஈச்சமோட்டைக் கிளை உறுப்பினர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர் என்று முதல்வரின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (சு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் இடாப்பிலிருந்து நீக்கப்பட்டோர் தொடர்பில் விசாரணை தொடர்கின்றன

## தேர்தலின் பின்னர் முடிவு வெளியிடப்படும் எனத் தெரிவிப்பு

*தலைமன்னார், ஒக். 26*

மன்னாரில் 2019 ஆம் ஆண்டு தேர்தல் இடாப்பிலிருந்து நீக்கப்பட்டவர்கள் தொடர்பில் விசாரணைகள் நடைபெற்றுவருகின்றன. இதன் முடிவுகள் அரசதலைவர் தேர்தல் முடிவுற்றதும் அவர்களுக்குத் தெரிவிக்கப்படும் என்று மன்னார் உதவித் தேர்தல் ஆணையாளர் ஜே. ஜனிற்ரன் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் தேர்தலில் வாக்களித்த மன்னார் முஸ்லிம் மக்களில் 20 வீதமானவர்களின் பெயர்கள் 2109 ஆம் ஆண்டு தேர்தல் இடாப்பிலிருந்து நீக்கப்பட்டுள்ளன. இதற்கு நிவாரணம் பெறும் நோக்கில் மன்னார் மூத்த சட்டத்தரணியும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ஹுனைஸ் பாறூக் மன்னார் உதவித் தேர்தல் ஆணையாளருக்குக் கோரிக்கைக் கடிதம் அனுப்பிவைத்திருந்தார்.

இது பற்றி மன்னார் உதவித் தேர்தல் ஆணையாளரிடம் வினவிய போது அவர் தெரிவித்ததாவது:

1980 ஆம் அண்டு 15ஆவது இலக்கச் சட்டத்தின் பிரகாரம் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. தேர்தல் ஆணைக்குழுவின் ஆலோசனையின் பேரில் சிறப்புக் கணக்கெடுப்பு நடைபெற்றது. குறிப்பிடப்பட்ட நபர்களின் பெயர்கள் வாக்காளர் இடாப்பிலிருந்து நீக்கப்பட்டுள்ளன.

அத்தகையவர்களுக்கு அவர்களுடைய பெயர்கள் வாக்காளர் இடாப்பிலிருந்து நீக்கப்பட்டுள்ளன எனவும் அவர்கள் அதற்கு உரிமைக் கோரிக்கை சமர்ப்பிக்கும்படி கோரி கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

இதற்கு மேலாக இவர்களை விசாரணைக்கு வரும்படி பதிவுத் தபாலில் கடிதங்களும் அனுப்பப்பட்டன.

விசாரனைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

தற்பொழுது தேர்தல் காலமாக இருப்பதால், தேர்தல் முடிவுற்றதும் விசாரனைகளின் முடிவுகள் அவர்களுக்கு அனுப்பப்படும். தற்போது எத்தனை பேரின் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளன என்று கூறமுடியாதுள்ளது- என்றார். (த-60)



## கிளிநொச்சிப் போராட்டத்தை தேர்தல் திணைக்களம் தடுத்தது

கிளிநொச்சி, ஒக். 26

இயற்கையைப் பாதுகாப்போம் என்னும் தொனிப்பொருளில் கிளிநொச்சியில் நடைபெற்ற கவனவீர்ப்புப் ஊர்வலத்துடன்கூடிய போராட்டம் ஒன்று தேர்தல்கள் திணைக்களத்தால் தடுத்து நிறுத்தப்பட்டது.

கிளிநொச்சி செருக்கன் பகுதியில் புதிதாக அமைக்கப்பட்டுவரும் உப்பள தொழிற்சாலைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும்வகையில்குறித்தபோராட்டம் நேற்றுமுன்தினம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயம் முன்பாக ஆரம்பிக்கப்பட்ட உந்துருளி ஊர்வலம் ஏ/9 வீதி ஊடாக பரந்தன் முல்லைத்தீவு வழியாக செருக்கன் பகுதியில் அமைக்கப்பட்டுவரும் உப்பள தொழிற்சாலை வரை செல்வதென்று திட்டமிடப்பட்டிருந்தது. ஊர்வலம் ஆரம்பிக்கப்பட்டு செருக்கன் சந்தியைச் சென்றடையும் போது பொலிஸார் அவர்களைத் தடுத்து நிறுத்தினர்.

ஊர்வலம் தொடர்பில் கிளிநொச்சியில் அமைந்துள்ள தேர்தல்கள் செயலகத்துக்குக் கிடைத்த முறைப்பாட்டுக்கமைய பொலிஸார் அதைத் தடுத்து நிறுத்தினர். கிளிநொச்சி மாவட்ட தேர்தல்கள் முறைப்பாட்டுப் பிரிவின் உதவி த்தேர்வத்தாட்சி அலுவலர் எஸ்.சத்தியசீலன் குறித்த பகுதிக்கு வந்து போராட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் கலந்துரையாடினார். போராட்டம் மேற்கொள்வதற்கு உரிய முறையில் பொலிஸாரிடம் அனுமதி பெறப்படவில்லை எனவும், அனுமதி பெற்றும் போராட்டம் நடத்துமாறும் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு அவர் அறிவுறுத்தினார்.

இதேவேளை, உப்பளத் தொழிற்சாலையில் மேற்கொள்ளப்படும் பணிகளைத் தேர்தல் காலம்வரை நிறுத்துவதற்கான கடிதம் மாவட்டச் செயலகத்தால் வழங்கப்பட்டுள்ளதாகவும் அங்கு பணிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன என்றும் போராட்டகாரர்களுக்கு சத்தியசீலன் கூறினார்.

அதன் பின்னர் போராட்டம் நிறுத்தப்பட்டது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கரைச்சிப் பிரதேச சபை உறுப்பினர்கள், பொதுமக்கள் போராட்டத்தில்ஈடுபட்டிருந்தனர். (த-6)

## முன்னாள் அதிபரின் நினைவு பேருரை

யாழ்ப்பாணம்.ஒக்.26

சுன்னாகம் ஸ்கந்தவரோதய கல்லூரியின் முன்னாள்அதிபர்வி.சிவசுப்பிரமணியத்தின் 23 ஆம் ஆண்டுநினைவுப் பேருரை நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு கல்லூரி வளாகத்தில் இடம்பெறவுள்ளது.

அதிபர் மு. செல்வஸ்தான் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் 'வடக்குக்கல்வியில்உள்நாட்டுப்போரின்தாக்கம்' எனும்தலைப்பில்நினைவுப்பேருரையை யாழ்ப்பாணம்பல்கலைக்கழக வவுனியா வளாக முதல்வர் கலாநிதி ரி.மங்களேஸ்வரன் நிகழ்த்தவுள்ளார். (க-104)



பன்னாட்டு சிறுவர் தினத்தை முன்னிட்டு மக்கள் வங்கியின் மல்லாவிக் கிளையின் ஏற்பாட்டில் அனிஞ்சியன்குளம் தமிழ் கலவன் வித்தியாலயத்தில் சிறுவர் சந்தை நேற்று முன்தினம் நடத்தப்பட்டது. (74)

## பரிசளிப்பு விழா

கொடிகாமம்.ஒக்.26

மீசாலை கமலாம்பிகை வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா எதிர்வரும் நவம்பர் மாதம் 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 1மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.

அதிபர்திருமதிவ.கணேசலிங்கம்தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராகதென்மராட்சிகல்வி வலய ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர்சோ.திருக்குமரன் கலந்துகொள்வார். (க-159)



## தொழில்நுட்ப கல்லூரியில் கல்விக் கண்காட்சி

வவுனியா,ஒக்.26

வவுனியா நெளுக்குளம் தொழில்நுட்பக் கல்லூரியின் கல்விக் கண்காட்சி, தொழிநுட்பக்கல்லூரி வளாகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

"நாளைய உலகம் நம் கையில் இன்றே இணைவோம் தொழிற்கல்வியுடன்" எனும் தொனிப்பொருளில் இடம்பெற்ற கல்விக் கண்காட்சியை, 12 க்கும் மேற்பட்ட பாடசாலைகளிலிருந்து கா.பொ.த சாதாரண தர மற்றும் உயர்தர மாணவர்கள் ஆயிரத்து 500 க்கும் மேற்பட்டவர்கள் பார்வையிட்டனர்.

கண்காட்சியில் குழாய் இணைப்புப் பொறியியல் பிரிவு, சுருக்கெழுத்து மற்றும் தட்டடெழுத்துப்பிரிவு , தகவல் தொழிநுட்பப்பிரிவு , வர்த்தகப்பிரிவு , எந்திரவியல் பிரிவு, வாகனம் திருத்தும் பிரிவு , இலத்திரனியல் பிரிவு, மின்னியலாளர் பிரிவு, குளிரூட்டல் மற்றும் வளிச்சீராக்கல் பிரிவு போன்ற பல்வேறு காட்சிக் கூடங்கள் அமைக்கப்பட்டிருந்தன.

தடை செய்யப்பட்ட

# களை நாசினியுடன் வவுனியா நபர் கைது


வவுனியா,ஒக்.26

தடைசெய்யப்பட்ட களைநாசினியான "கிளைபோசெட்"டுடன் ஒருவர் நேற்று முன்தினம் கைது செய்யபட்டுள்ளார் வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா செட்டிகுளம் சிறப்பு அதிரடிப் படையினருக்குக் கிடைத்த தகவலுக்கமைவாக, வவுனியா கண்டி வீதி தேக்கவத்தைப் பகுதியில் அமைந்துள்ள களைநாசினி விற்பனை செய்யும் வர்த்தக நிலையம் ஒன்றில் சோதனை மேற்கொள்ளப்பட்டது.

அங்கு சிறு பைகளாகப் பொதி செய்யபட்டிருந்த 45 கிலோ நிறையுடைய தடை செய்யப்பட்ட "கிளைபோசெட்"களைநாசினியைக் கைப்பற்றினர்.

குறித்த களைநாசினியை வைத்திருந்தமைக்காக வவுனியா பூவரசங்குளம் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவரை கைது செய்த அதிரடிப்படையினர்



அவரை வவுனியா பொலிஸாரிடம் ஒப்படைத்தனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தந்தையைக் கைவிட்ட 4 பிள்ளைகளையும் நீதிமன்றில் முற்படுமாறு அழைப்பாணை

## மன்னார் நீதிவான் மன்று உத்தரவு வழக்கு

தலைமன்னார், ஒக். 26

நான்கு பிள்ளைகளின் தந்தையான முதியவரை (வயது -96) அவருடைய பிள்ளைகள் கைவிட்டமையால் அவர் குளிர் காற்றிலும் மழையிலும் வெயிலிலுமாக தெருக்களில் அநாதையாக உள்ளார் என்று நீதிமன்றின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது. அதையடுத்து நான்கு பிள்ளைகளையும் நீதிமன்றில் முற்படுமாறு நீதிமன்று அழைப்பாணை அனுப்பியுள்ளது.

மன்னார் நீதிவான் மன்றில் சட்டத்தரணிகள் தாக்கல் செய்த விண்ணப்பத்தைத் தொடர்ந்தே முதியவரின் பிள்ளைகளுக்கு நீதிமன்று அழைப்பாணை விடுத்துள்ளது.

இது பற்றி மேலும் தெரியவருவதாவது:

குறித்த முதியவர் மன்னார் அடம்பன் பகுதியைச் சேர்ந்தவர். அவர் இரண்டு ஆண்களினதும் இரண்டு பெண்களினதும் தந்தை. தள்ளாடும் வயதிலும் தன்னால் இயன்ற வேலைகளைச் செய்தே தனது வாழ்க்கை செலவைச் சமாளித்து வந்துள்ளார்.

இவரின் பிள்ளைகள் இவரைத் தத்தமது வீடுகளில் ஏற்றுக்கொள்ளவில்லை. அதனால் சில நாள்களாக வயது முதிர்ச்சி மற்றும் உடல் இயலாமை காரணமாக ஆங்காங்கே அமைக்கப்பட்டிருக்கும் பேருந்து தரிப்பிடங்களில் இருப்பதும் உறங்குவதுமாக அவருடைய வாழ்க்கை அவல வாழ்வாக நகர்ந்துகொண்டிருக்கின்றது.

அந்தப் பகுதியிலுள்ள ஒருசில நல்லுள்ளங்கள் அவருக்கு உணவுகள் வழங்கி உதவி வருகின்றனர். இந்த நிலையை அவதானித்துவந்த வடக்கு மாகாண அமைச்சரும் மன்னார் மூத்த சட்டத்தரணியுமான பா.டெனீஸ்வரன், இலங்கை சட்ட உதவி ஆணைக்குழுவின் சட்டத்தரணி கௌமிகா மற்றும் சட்டத்தரணி அன்ரனி றொமோள்சன் ஆகியோர் ஊடாக பாதிப்புக்குள்ளாகியிருக்கும் முதியவர் சார்பாக மன்னார் நீதிவான் நீதிமன்றில் நேற்றுமுன்தினம் விண்ணப்பம் செய்திருந்தனர்.

நீதிவான் மா.கணேசராஜா அதை ஏற்றுக்கொண்டு முதியவரின் பிள்ளைகளான பிரதிவாதிகளை மன்றில் முற்படுமாறு கட்டளைப் பிறப்பித்துள்ளார்.

இந்த வழக்குக்கு நீதிமன்று வழங்கும் தீர்ப்பு பெற்றோரைப் பராமரிக்காமல் கைவிடுகின்ற பிள்ளைகளுக்கு ஒரு பாடமாக அமைய வேண்டும் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. இந்த வழக்கு எதிர்வரும் 7ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. அன்று விசாரணை இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (த-60)



## இயக்கச்சிச் சந்தியில் இரவு நேரங்களில் கால்நடைகளின் நடமாட்டம் அதிகரிப்பு

கிளிநொச்சி,ஒக்.26

கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி பிரதேசசபைக்கு உட்பட்ட இயக்கச்சிச் சந்திப் பகுதியில் இரவு நேரங்களில் கால்நடைகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளது.

வயல்கள் காலபோகச் செய்கைக்குத் தயார் படுத்தப்பட்டுள்ளதால், அந்த இடங்களில் கட்டாக்காலிகளாக நின்ற வளர்ப்பு மாடுகள் இயக்கச்சிச் சந்தியில் கூட ஆரம்பித்துள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் வாகனச் சாரதிகள் போக்குவரத்தில் நாளாந்தம் பல பிரச்சினைகளை எதிர்நேக்கி வருகின்றனர்.

அத்துடன் கால்நடைகள் வாகனங்களுடன் மோதுண்டு உயிரிழக்கும் துர்ப்பாக்கி யமும் ஏற்பட்டுள்ளது.

அத்துடன் இரவுபகலாக நிற்கும் மாடுகள் அங்குள்ள சந்தை மற்றும் கடைகளை அசிங்கப்படுத்தியும் வருகின்றது.

எனவே இயக்கச்சிச் சந்தியில் கட்டாக்காலியாக நிற்கும் கால்நடைகளை உரிமையாளர்கள் உடன் பிடித்து உரிய முறைப்படி பராமரிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அல்லது உரிய முறையில் கால்நடைகளை அகற்றவும், கால்நடை உரிமையாளர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை மேற்கொள்ளவும் உரிய அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ள னர். (க-70)

## தனியார் வீட்டில் செயற்படும் அச்சுவேலி தபால்நிலையம்

அச்சுவேலி,ஒக்.26

அச்சுவேலி தபால் நிலையம் அச்சுவேலி தெற்குப் பயித்தோலைச் சந்திக்கு அருகில் உள்ள தனியார் வீடொன்றில் தற்போது செயற்பட்டு வருகிறது.

அச்சுவேலி தபால்நிலையம் அண்மைக் காலத்தில் மூன்று தடவைகள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது. தற்போது தனியார் வீடொன்றை ஒன்றை வாடகை ஒப்பந்தத்தில் பெற்று அதில் செயற்படுகின்றது.

இதுவரை காலமும் அச்சுவேலிப் பேருந்து நிலையத்துக்கு அண்மையில் தபால் நிலையம் செயற்பட்டு வந்தது. தற்போது பேருந்து நிலையத்தில் இருந்து ஒரு கிலோ மீற்றருக்கு அப்பால் இடமாற்றப்பட்டுள்ளது.

பேருந்துநிலையத்துக்கு அண்மையில் செயற்பட்டு வந்த தபால்நிலையம், பேருந்து நிலையத்துக்கு வெளியே செயற்படுவதால், மாதாந்தம் தமது நிவாரணக் கொடுப்பனவைப் பெறுவதற்கு செல்லும் மூத்தபிரசைகள்பல்வேறுசிரமங்களை எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டிருப்பதாக விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-11)

## வட மாகாண மாணவர்களுக்கு கல்வி சார்ந்த செயற்றிட்டங்கள்

கிளிநொச்சி,ஒக்.26



வடக்கு மாகாணக் கல்விக் கூட்டுறவுச் சங்கத்தின் பணிப்பாளர் வோல்வினால், மாகாண மாணவர்களுக்கான கல்வி சார்ந்த செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதனடிப்படையில் மன்னார் மடு கல்வி வலயத்தில் க.பொ.த.சாதாரண பரீட்சை எழுதும் மாணவர்களுக்காக தமிழ், ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம், வரலாறு ஆகிய முதன்மைப் பாடங்களுக்கான செயலமர்வு இலுப்பக்கடவை தமிழ் மகா வித்தியாலயத்தில் கடந்த திங்கட்கிழமை நடத்தப்பட்டது.

கல்விக் கூட்டுறவுச் சங்கத்தின் அனுசரணையுடன் நடத்தப்பட்ட செயலமர்வில், இலுப்பைக்கடவை மகா வித்தியால யத்தின் அதிபர், மடு கல்வி வலயத்தின் கணித பாடத்துக்கான உதவிக் கல்வி பணிப்பாளர், இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் மடு கல்வி வலய பிரதிநிதி உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர்.

இதில் 300 க்கும் அதிகமான மாணவர்கள் பங்குகொண்டு பயன் பெற்றனர்.

எதிர்வரும் காலங்களில் கல்விக் கூட்டுறவுச் சங்கத்தின் அனுசரணையுடன், வடமாகாணத்தில் மாணவர்கள் ஆசிரியர்களுக்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் என்று வடமாகாண கல்வி கூட்டுறவுச் சங்கத்தின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (க)

## சைவப்பிரகாசவித்தியாலய மாணவனுக்கு மதிப்பளிப்பு

நெடுந்தீவு.ஒக்.26



இந்துசமயகலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வருடாந்த ஆய்வுமாநாட்டை முன்னிட்டு தேசிய ரீதியில், பாடசாலை மாணவர்களிடையே நடாத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலய மாணவன் கு.நிஷாந் முதலிடத்தைப் பெற்றுக் கொண்டார்.

அவருக்கான பரிசில் மற்றும் சான்றிதழ் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஊடாக அண்மையில் வழங்கி வைக்கப்பட்டது.

மாணவனைப் பாராட்டிப் பாடசாலைச் சமூகத்தால் முன்னெடுக்கப்பட்ட மதிப்புறு நிகழ்வில், முன்னாள் நெடுந்தீவுக் கோட்டக் கல்வி அதிகாரியும், தற்போதைய வேலணைக் கோட்டக்கல்வி அதிகாரிமான திருமதி சாரதா தேவி கிருஸ்ணதாஸ் கலந்து கொண்டு பரிசில் வழங்கி மதிப்பளித்தார். (க-104)



பாடசாலை மட்ட விஞ்ஞானக் கண்காட்சி நடேஸ்வரக் கல்லூரியில், அதிபர் கு.விமலன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. (க-104)

## முல்லைத்தீவில் வாக்களிக்க 75,381பேர் தகுதி பெற்றுள்ளனர்

முல்லைத்தீவு, ஒக். 26

அரச தலைவர் தேர்தலில் வாக்களிக்க, முல்லைத்தீவுமாவட்டத்தில் 75ஆயிரத்து 381 பேர் தகுதிபெற்றுள்ளனர் என்று முல்லைத்தீவு மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் காந்தீபன் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 16ஆம் திகதி இலங்கை அரசதலைவர் தேர்தல் இடம்பெறவுள்ளது. இதற்காக முல்லைத்தீவில் 135வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன. 9வாக்கெண்ணும் நிலையங்களை முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்துக்குள்ளேயே அமைக்கவுள்ளோம்.

இதுவரை 2ஆயிரத்து 845 அஞ்சல் வாக்காளர்களின் வாக்காளர் அட்டைகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. முல்லைத்தீவு மாவட்டத்துக்குரிய அஞ்சல் வாக்காளர்களின் வாக்கெண்ணும் பணிகள் வவுனியாவில் வைத்தே இடம்பெறும்.

தேர்தல் நடவடிக்கைகளில் இடம்பெறும் சட்டவிரோதச் சம்பவங்களை முறையிடுவதற்கான, முறைப்பாட்டு நிலையங்களும் தேர்தல் திணைக்களத்தால் அமைக்கப்பட்டுள்ளன. இதுவரையில் தேர்தல் வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புடைய மூன்று சிறிய முறைப்பாடுகள் தமக்குக் கிடைக்கப்பெற்றுள்ளன - என்று மேலும் தெரிவித்தார். (த-246)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியாவில் 46 பேருக்கு டெங்கு: ஒழிப்பு நடவடிக்கைகள் முன்னெடுப்பு

வவுனியா,ஒக்.26

*வவுனியா பொது மருத்துவமனையில் 46 பேர் டெங்குத் தொற்றாளர்களாக இனம் காணப்பட்டுள்ளதால், டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.*



வவுனியா நகர்ப்பகுதியில் மாலை வேளையில் அதிகளவு டெங்கு நுளம்புகள் பெருக்கெடுத்து வருகின்றன. அதனை அழித்தொழிப்பதற்கு வவுனியா நகர்ப்பகுதிகளில் டெங்கு ஒழிப்புச் செயற்றிட்டம் மலேரிய தடுப்புப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வவுனியா பசார் வீதியிலுள்ள வியாபார நிலையங்களுக்கு முன்பா கவும், கால்வாய்களுக்குள்ளும், நகரையண்டிய பகுதிகளிலும், டெங்கு நுளம்பு பெருகும் இடங்களை புகை மூலம் விரட்டியடிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

அதேவேளை வவுனியா நகரப்பகுதியில் டெங்குத் தொற்று அதிகரித்துள்ளதாகவும், வவுனியா பொது மருத்துவமனையில் 46 பேருக்கு டெங்குத் தொற்று ஏற்பட்டுள்ளதாகவும் வவுனியா சுகாதார சேவைகள் பணிமனை தெரிவித்துள்ளது. (க-ரி4)

## மதிப்பளிப்பு நிகழ்வு

கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்ப பாடசாலையில் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான மதிப்பளிப்பு நிகழ்வு இன்று சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு பாடசாலையின் முதன்மை மண்டபத்தில் நடைபெறும்.

அதிபர் திருமதி பு.மங்களேஸ்வரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில், முதன்மை விருந்தினராக பழைய மாணவரும் பொறியியலாளருமான கலாநிதி சு. சபேசன் சிறப்பு விருந்தினராக தென்மராட்சி வலயக்கல்வி அலுவலகப் பிரதிக்கல்விப் பணிப்பாளர் திருமதி சிவத்திரை சிவநாதன், மதிப்புறு விருந்தினராக தென்மராட்சி வலயக்கல்வி அலுவலக ஆரம்பக்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் சோ.திருக்குமரன் ஆகியோர் கலந்து கொள்வர். (க-159)

## வருடாந்த பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம்,ஒக்.26

பருத்தித்துறைப் பிரதேச கலாசார அதிகார சபையின் வருடாந்தப் பொதுக் கூட்டம் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு பிரதேச செயலகக் கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் முக்கிய குறிக்கோளான 'கலாசார மனிதரை உருவாக்கும்' தேசிய வேலைத்திட்டத்தின் கீழ், நாடளாவிய ரீதியில் பிரதேசம் தோறும் உருவாக்கப்பட்டுள்ள கலாசார அதிகார சபைகள் கலைஞர்களின் நலச்சேவைகள் மற்றும் புத்தாக்கச் செயற்பாடுகளுக்கு ஊக்கமளித்தல் முதலான பல்வேறு வேலைகளை முன்னெடுத்து வருகின்றன.

அந்த வேலைத்திட்டங்களை எமது பிரதே சத்திலும் நடைமுறைப்படுத்துவதற்காக கலாசார அதிகார சபையைச் சீரமைக்க வேண்டியுள்ளது.

அதற்கமைவாக கலாசார அதிகார சபையின் வருடாந்தப்பொதுக்கூட்டத்தில் பிரதேச கலைஞர்கள், கலை ஆர்வலர்கள் பங்குபற்றி குறித்த வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்கு ஆதரவு வழங்குமாறு பிரதேச செயலகம் கேட்டுள்ள[illegible]. (க)

## தீபாவளி கொண்டாட்டம்

சைவ வித்தியா விருத்திச் சங்கத் தீபாவளிக் கொண்டாட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சங்க ஆராதனை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சைவ வித்தியா விருத்திச் சங்கத் தலைவர் சோ. பத்மநாதன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண போதனாமருத்துவமனை பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி த.சத்தியமூர்த்தி, சிறப்பு விருந்தினராக நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க முன்னாள் தலைவர் பெ.கனகசபாபதி ஆகியோர் கலந்து கொள்வர் என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (க)

# யாழ்ப்பாணப் பல்கலைப் பட்டமளிப்பு டிசெ. 6ஆம் 7ஆம் திகதிகளில் நடக்கும்

*உள்வாரி, வெளிவாரியென 1,706 பேருக்கு பட்டங்கள் மதிப்புறு கலாநிதிப் பட்டங்களும் வழங்கத் தீர்மானம்*

யாழ்ப்பாணம், ஒக். 26

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக 34 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவின் இரண்டாவது பகுதி எதிர்வரும் டிசெம்பர் 6 ஆம், 7 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

10 அமர்வுகளாக நடைபெறவுள்ள பொதுப்பட்டமளிப்பு விழாவில் ஆயிரத்து 358 உள்வாரி பட்டதாரிகளுக்கும் 348 வெளிவாரிப் பட்டதாரிகளுக்குமாக ஆயிரத்து 706 பேருக்குப் பட்டங்கள் வழங்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

உயர் பட்டப் படிப்புகள் பீடம், வணிக முகாமைத்துவ பீடம், கலைப்பீடம், விஞ்ஞான பீடம், மருத்துவ பீடம், ஆகிய பீடங்களைச் சேர்ந்த உள்வாரிப் பட்டதாரிகளினதும், திறந்த மற்றும் தொலைக் கல்வி நிலையத்தைச் சேர்ந்த வெளிவாரிப் பட்டதாரிகளுக்கும் பட்டங்கள் வழங்கப்படவுள்ளன.

**உள்வாரி**

கலாநிதி - 3, முது தத்துவமாணி - 19, முது கலைமாணி (தமிழ்) - 36,தொழில் நிர்வாகமாணி - 324,வணிகமாணி - 46, சட்டமாணி - 52, மருத்துவ சத்திர சிகிச்சைமாணி - 126, தாதியியல், மருந்தகவியல், மருத்துவ ஆய்வுகூடவியல் விஞ்ஞானமாணி - 43, விஞ்ஞானமாணி (பொது மற்றும் சிறப்பு) - 156, கணினி விஞ்ஞானத்தில் விஞ்ஞானமாணி - 20,கணினி விஞ்ஞான மாணி - 01, கலைமாணி (பொது மற்றும் சிறப்பு) - 364,நுண் கலைமாணி (வாய்ப்பாட்டு, நடனம், சித்திரமும் வடிவமைப்பும்) - 168

**வெளிவாரி**

கலைமாணி - 256, வணிகமாணி - 40, நுண் கலைமாணி (வாய்ப்பாட்டு) - 01, நுண் கலைமாணி (நடனம்) - 03, தொழில் முகாமைத்துவமாணி - 48.

இதுதவிர, பேராசிரியர் என். சண்முகலிங்கன் து[illegible]வேந்[illegible]ாக இருந்த காலப்பகுதி வரை நடைமுறையிலிருந்து பின்னர் கைவிடப்பட்டிருந்த மதிப்புறு கலாநிதிப் பட்டங்கள் வழங்கும் நடைமுறையை மீள ஆரம்பிப்பது தொடர்பில் கலைப் பீட வட்டாரங்கள் முன்மொழிவுகளைச் சமர்ப்பித்திருக்கின்றன.

அந்த அடிப்படையில் இந்தமுறை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் மதிப்புறு கலாநிதிப் பட்டங்களைப் பெறப்போகும் பிரபலங்கள் யார் என்பது அடுத்த வாரமளவில் தெரிய வருமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த வருடம் 34 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவின் முதலாவது பகுதி நடந்த போதிலும், பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் இ.விக்னேஸ்வரன் பதவி விலக்கப்பட்டமை, பல்கலைக்கழகத்துக்கு வேந்தர் நியமிக்கப்படாமை போன்ற காரணங்களால் 34 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவின் இரண்டாவது பகுதியை நடத்துவதில் தாமதங்கள் காணப்பட்டன.

பட்டமளிப்பு விழா நடத்தப்படாத காரணத்தால், கடந்த வருடம் தொடக்கம் பெருமளவான பட்டதாரிகள் அரச வேலை வாய்ப்புக்களைப் பெற முடியாதநிலை தோன்றியுள்ளது. கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கவனவீர்ப்புப் போராட்டமொன்றை ஏற்பாடு செய்திருந்தது. இந்த நிலையில், பல்கலைக்கழகத்தின் முன்னாள் வேந்தர் பேராசிரியர் எஸ்.பத்மநாதன் அரசதலைவரால் வேந்தராக நியமிக்கப்பட்டார்.

இந்த நிலையிலேயே பொதுப் பட்டமளிப்பு விழா நடத்துவதென்று பட்டமளிப்பு விழாக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப் பட்டுள்ளது. நேற்றுமுன்தினம் நடந்த இந்தக் கூட்டத்தில், பல்கலைக்கழக தகுதி வாய்ந்த அதிகாரி பேராசிரியர் க. கந்தசாமி, பீடாதிபதிகள், நிர்வாக அதிகாரிகள், உப விடுதிக் காப்பாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டிருந்தனர். (த-ரி1)




## வட இந்து பாடசாலையின் வருடாந்தப்பரிசளிப்புவிழா

கொடிகாமம்,ஒக்.26

வடஇந்துஆரம்பப்பாடசாலையின்வருடாந்தபரிசளிப்பு விழா கடந்த புதன்கிழமை பாடசாலையின் முதன்மை மண்டபத்தில் நடைபெற்றது.

நிகழ்வில்வலய, மாவட்ட, மாகாண, தேசியமட்டப் போட்டிகளில்வெற்றிபெற்றமாணவர்களும், தரம்5புலமைப் பரிசில்பரீட்சையில்வெட்டுப்புள்ளிக்குமேல்சித்திபெற்ற 30மாணவர்களும், 100புள்ளிகளுக்குமேல்புள்ளிகள் பெற்ற29 மாணவர்களும், வகுப்பில்முதன்மைபெற்ற மாணவர்களும் நினைவுச் சின்னம் மற்றும் பரிசில்கள் வழங்கி மதிப்பளிக்கப்பட்டனர். நிகழ்வில் மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம் பெற்றன.

அதிபர்ரவீந்திரன்தலைமையில்நடைபெற்றநிகழ்வில் முதன்மை விருந்தினராக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன், சிறப்பு விருந்தினராக பருத்தித்துறை கோட்டக்கல்விப் பணிப்பாளர் மா.நவநீதமணி, யாழ் பல்கலைக்கழக முன்னாள் பேராசிரியர் மா.நடராஜசுந்தரம் மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் கலந்து கொண்டனர். (க-159)




## மாணவர்கள் மதிப்பளிப்பு

வவுனியா, ஒக். 26

வடக்கு மாகாண மீலாத் விழாப் போட்டியில் முதலாமிடம் பெற்ற வவுனியா அல் இக்பால் மகா வித்தியாலய மாணவர்களுக்கு மதிப்பளிக்கும் நிகழ்வு பாடசாலை அதிபர் ஏ.கே.உபைத் தலைமையில் நேற்று நடைபெற்றது.

வடக்கு மாகாண மீலாத் விழா போட்டியில் முதலாமிடத்தைப் பெற்று தேசிய மட்டப் போட்டிக்குச் செல்லும் குறித்த பாடசாலையின் 7 மாணவர்கள் மதிப்பளிக்கப் பட்டனர்.

நிகழ்வில் பிரதி அதிபர் எம.ராசிக், ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர். (த-110,ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரம் பிரித்த குப்பையே தொழிலாளர் இனி ஏற்பர்

## மாநகர முதல்வர் கண்டிப்பான பணிப்பு

*யாழ்ப்பாணம், ஒக். 26*

*யாழ்ப்பாணமாநகரசபைஎல்லைப்பகுதிக்குள்திண்மக் கழிவகற்றலின்போது கழிவுகளைத் தரம் பிரித்து வழங்கினால்மட்டுமேதொழிலாளர்கள்ஏற்றுக்கொள்வார்கள் என்று மாநகர முதல்வர் இ.ஆனல்ட் தெரிவித்தார்.*

இது தொடர்பில் மாநகர முதல்வர் மேலும் தெரிவித்ததாவது:

மாநகரஎல்லைப்பரப்புக் குள்திரட்டப்படும்திண்மக் கழிவுகள் கல்லுண்டாய் பகுதிக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு தரம் பிரிக்கும் பணிகள் மேற்கொண்டுஅதன்பின்னர் அகற்றும் பணிகளே கடந்தகாலங்களில்இடம் பெற்றன.

இந்த நிலையில் குறித்த விடயம் நீதிமன்றுக்குக் கொண்டு செல்லப்பட்ட நிலையில், தரம் பிரிக்காத கழிவுகளை எந்தக் காரணம் கொண்டும் கல்லுண்டாய் பகுதியில் கொண்டு வந்து இறக்கவோ அந்த இடத்தில் தரம்பிரிக்கவோமுடியாது என்று நீதிமன்றம் கட்டளையிட்டுள்ளது.

இதன்அடிப்படையில்வரி இறுப்பாளர்கள்அனைவரும்திண்மக்கழிவுகளை கண்டிப்பாகத் தரம் பிரித்தே வழங்கவேண்டும். அவ்வாறன்றி தரம் பிரிக்காத நிலையில் காணப்பட்டால், தொழிலாளர்கள் அவற்றைப் பொறுப்பேற்கமாட்டார்கள். அதனால் ஏற்படும் அசௌகரியங்களும் பெரிதாகவேகாணப்படும். இதேநேரம் பிளாஸ்ரிக் கழிவுகளுடன் போத்தல் உடைவுகள் காணப்பட்டால் அல்லது உணவுக் கழிவு காணப்பட்டாலும் கழிவகற்றலின்போது அதனைப்பொறுப்பேற்க மாட்டார்கள்.

இவற்றைக் கருத்திற் கொண்டு உங்கள் இடங்களிலுள்ள திண்மக் கழிவுகள்கண்டிப்பாகத்தரம் பிரித்தே வழங்கப்பட வேண்டும் என்று மக்கள் அறிவுறுத்தப்படுகின்றனர். தரம்பிரிக்காதநிலையில் காணப்படும் கழிவுகள் அகற்றப்படாமல் ஏற்படும் அசௌகரியங்களைத்தவிர்க்கும்வகையில் முற்கூட்டியே செயற்பட்டு திண்மக் கழிவகற்றலுக்கு ஒத்துழைக்குமாறு வேண்டுகின்றேன்- என்றார். (து-105)



# சிறு உற்பத்தியாளர்களுக்கு வழிகாட்டல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஒக்.26

சிறுஉற்பத்தியாளர்களுக்கானவழிகாட்டல்கருத்தரங்கு கரவெட்டிப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

கைத்தொழில்வாணிபஅலுவல்கள்,நீண்டகாலம்இடம் பெயர்ந்த மக்கள் நலன் கூட்டுறவுத் தொழிற்பயிற்சி மற்றும் திறன் விருத்தி அமைச்சின் செயற்றிட்டத்தின் கீழ் தேசிய தொழில் முயற்சி அபிவிருத்திக்கு உதவும் நிறுவனத்தால் இந்தக் கருத்தரங்கு நடத்தப்பட்டு வருகிறது.

வடமராட்சி கிழக்கு,சாவகச்சேரி.பருத்தித்துறை மற்றும் கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவுகளுக்கு உட்பட்ட சிறு தொழில் முயற்சியாளர்களை ஒன்றிணைத்து கருத்தரங்கு நடத்தப்பட்டது.

தொழில்நிறுவனங்களைப்பதிவுசெய்தல், உற்பத்தியாளர்களை ஊக்குவித்தல், உற்பத்திக்கானதரநிர்ணயச் சான்றிதழ்கள் பெற்றுக் கொள்ளல், நிதி அறிக்கையை எவ்வாறுபேணுதல், ஏற்றுமதியைஊக்குவித்தல், வசதி வாய்ப்புகளை எவ்வாறு ஏற்படுத்துதல் போன்ற வற்றுக்கான ஆலோசனைகள் கருத்தரங்கில் தெரிவிக்கப்பட்டன.

கரவெட்டிப்பிரதேசசெயலர்ஈ.தயாரூபன்தலைமையில் இடம் பெற்ற கருத்தரங்கில் தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகார சபை வட மாகாண பணிப்பாளர் கே.ரவிக்குமார், யாழ் மாவட்ட வர்த்தகத் தொழில் மன்ற அலுவலர்சகீவன், யாழ்மாவட்டநுகர்வோர்அதிகாரசபை அலுவலர்ஆகியோர்கருத்துக்களைவழங்கினர். (க-160)

# கந்தசஷ்டி உற்சவம்

யாழ்ப்பாணம்,ஒக்.26

நீர்வேலி கந்தசுவாமி கோவிலின் கந்தசஷ்டி உற்சவம் நாளை மறுதினம் திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

இதற்கான பூர்வாங்க கிரியைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு ஆரம்பமாகும்.

தொடர்ந்து எதிர்வரும் 2ஆம் திகதி சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு வேல் வழங்கும் காட்சியும், பிற்பகல் 3மணிக்குசூரன்போரும் இடம்பெறும்.

மறுநாள் 3ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்குத் தீர்த்தோற்சவமும், பிற்பகல் 5மணிக்குகொடிஇறக்க உற்சவமும் நடைபெறும். எதிர்வரும் 4 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 5 மணிக்குத் திருக்கல்யாண உற்சவம் நடைபெறும். (க-17)

# கஞ்சா போதைப்பொருள் மீட்பு நெல்லியடியில் நால்வர் கைது

யாழ்ப்பாணம், ஒக். 26

வடமராட்சி நெல்லியடியில் 2 கிலோக்கிராம் கஞ்சா போதைப் பொருள் வைத்திருந்தனர் என்று குற்றஞ்சாட்டில் நால்வர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நெல்லியடி நகர்ப் பகுதியில் சந்தேகத்துக்கிடமாக மகிழுந்து ஒன்றைப் பொலிஸார் சோதனைக்கு உட்படுத்தினர். அதில் 2 கிலோக்கிராம் கஞ்சா இருந்தது என்றும் அதை மீட்டதோடு சந்தேகநபர்களையும் கைது செய்தோம் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்கள்திருகோணமலையைச்சேர்ந்தவர்கள். அவர்கள்நீதிமன்றில்முற்படுத்தப்படுவர்என்றுபொலிஸார் மேலும் தெரிவித்தனர். (து-7,26)

# நாகர்கோவில் மகா வித்தியாலய பரிசளிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.26

வடமராட்சிக்கிழக்குநாகர்கோவில்மகாவித்தியாலயத்தின் வருடாந்தப் பரிசளிப்பு விழா நேற்று நடைபெற்றது.

நிகழ்வில்பாடசாலை, கோட்டம், வலயம், மாவட்டமட்டங்களில் திறமையான மாணவர்கள், தரம் 5 புலமைப் பரிசில்கள் பரீட்சையில் சித்தியடைந்த இரண்டு மாணவர்கள் விருந்தினர்களால் பரிசில் வழங்கி மதிப்பளிக்கப்பட்டனர்.

பாடசாலை அதிபர் கு.கண்ணதாசன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், யாழ்ப்பாண பல்கலைக்கழக கல்வித் துறை மூத்த விரிவுரையாளர் ஆ.நித்திலவர்மன், பருத்தித்துறைப் பிரதேச சபை உறுப்பினர் ஆ.சுரேஸ்குமார், இமையாணன் அ.த.க.பாடசாலை அதிபர் இ.சிவசங்கள், மெதடிஸ்த பெண்கள் பாடசாலை ஆசிரியை திருமதி நிசாந்தினி நித்திலவர்மன் உட்பட பலர் கலந்து கொண்டனர். (க-160)





# தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு வவுனியாவில் நேற்று விழிப்புணர்வு ஊர்வலம்

வவுனியா,ஒக்.26

தேசியவாசிப்புமாதத்தைமுன்னிட்டுஅல்இக்பால்மகா வித்தியாலயமாணவர்கள்விழிப்புணர்வுநேற்றுவிழிப்புணர்வு ஊர்வலத்தை முன்னெடுத்தனர்.

பாடசாலையின் முதன்மை வாயில் முன்பாக அதிபர் ஏ.கே.உபைத் தலைமையில் ஆரம்பமான ஊர்வலம், சூடுவெந்தபுலவு முதன்மை வீதியில் 3 கிலோ மீற்றர் தூரம்வரைசென்றுமீண்டும்பாடசாலையைவந்தடைந்தது. விழிப்புணர்வு ஊர்வலத்தில் ஈடுபட்ட மாணவர்கள் 'நேசிப்போம்நேசிப்போம்வாசிப்பைநேசிப்போம்,வேண்டும் வேண்டும் ஊருக்கு ஒரு நூலகம், துப்பாக்கியை விட பெரிய ஆயுதம் புத்தகங்கள், வாசிப்போம் வாசிப்போம் நல்ல நூல்களை' என்று கோசங்களை எழுப்பியிருந்ததுடன் சுலோக அட்டைகளையும் ஏந்தியிருந்தனர்.

வாசிப்பின்முக்கியத்துவத்தைவெளிப்படுத்தும்துண்டு பிரசுரங்களையும் மாணவர்கள் ஊர்வலத்தின்போது கிராமமக்களுக்குவிநியோகித்தனர். ஊர்வலத்தில்பிரதி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப்பலரும் இணைந்து கொண்டனர். (க-110)

# சிறுவர்,முதியோர் தின நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக்.26

சமூக அபிவிருத்தி மன்றம்நடத்தும்சிறுவர், முதியோர்தினநிகழ்வுஇன்று சனிக்கிழமைகந்தர்மடத்திலுள்ள காரியாலய மண்டபத்தில் நடைபெறும்.

தலைவர் பொ.சண்முகசுந்தரம் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட மேலதிக செயலர் கனகசபாபதி கனகேஸ்வரன் கலந்து கொள்வார். (க)

# மரக்குற்றிகள் கடத்தினாரென வாகனத்துடன் சாரதி கைது

வவுனியா, ஒக். 26

அனுமதிபெறாதுமுதிரை மரக் குற்றிகளைக் கடத்திச்சென்றார்என்றகுற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்றுவவுனியாப்பொலிஸார் தெரிவித்தனர்.



வவுனியா கல்மடுப் பகுதியிலிருந்து, வவுனியா நகர்நோக்கி மரங்கள் கடத்தப்படுகின்றனஎன்று கிடைத்த தகவலின்படி மரக்காரம்பளைப் பகுதிக்குச் சென்ற வவுனியா பொலிஸார் மரக்கடத்தலை முறியடித்தனர் என்றுதெரிவிக்கப்பட்டது.

மரக்குற்றிகளை ஏற்றி வந்த வாகனச்சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளார். மரங்களைக் கடத்துவதற்குப்பயன்படுத்திய கன்ரர் வாகனமும 14 மரக்குற்றிகளும்பொலிஸ் நிலையத்துக்குக்கொண்டுசெல்லப்பட்டன.

சாரதி விசாரணையின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (து-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஹேமசிறி, பூஜித் தொடர்பாக 18 பேரிடம் வாக்குமூலம் பதிவு

கொழும்பு, ஒக்.26

உயிர்த்த ஞாயிறு தொடர் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களை தடுப்பதற்கு அல்லது அதன் தாக்கங்களை குறைத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமை தொடர்பில் குற்றவியல் பொறுப்பு சாட்டப்பட்டு, கைது செய்யப்பட்ட முன்னாள் பாதுகாப்பு செயலர் ஹேமசிறி பெர்னான்டோ மற்றும் பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர ஆகியோரின் விளக்கமறியல் எதிர்வரும்நவம்பர்6ஆம்திகதிவரைநீடிக்கப்பட்டுள்ளது. இந்த விவகாரம்தொடர்பிலானவழக்கு விசாரணைகள் கடந்த புதன்கிழமை கொழும்புப் பிரதான நீதிவான் லங்கா ஜயரத்ன விடுமுறை என்பதால் மேலதிக நீதிவான் பிரியந்த லியனகே முன்னிலையில் விசாரணைக்கு வந்தன. அதன்போதே பிரதான நீதிவான் விடுமுறை என்பதைக் காரணம் காட்டி இருவரின் விளக்க மறியலையும் மேலதிக நீதிவான் நீடித்தார். விசாரணையாளர்களான குற்றப்புலனாய்வுப் பிரிவினருடன் மன்றில் முன்னிலையான சட்ட மா அதிபர் திணைக்களத்தின் மூத்த பிரதி சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ், இந்த விவகாரத்தில் இதுவரை தேசிய உளவுத்துறை பணிப்பாளர் பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிலந்த ஜயவர்த்தன உள்ளிட்ட 18 பேரிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது என்று கூறினார். வழக்கு விசாரணைகளுக்காக சந்தேக நபர்களான முன்னாள் பாதுகாப்புச் செயலர் ஹேமசிறி பெர்ணான்டோ மற்றும் பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர ஆகியோர் சிறைச்சாலை அதிகாரிகளால் மன்றில் முற்படுத்தப்பட்டனர். இந்த விவகாரம்குறித்த விசாரணைகளின் முன்னேற்றத்தை குறிக்கும் மூத்த மேலதிக அறிக்கையையும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மன்றில் சமர்ப்பித்தனர். மன்றில் விடயங்களை குறிப்பிட்ட பிரதி சொலிசிட்டர் ஜெனரால் திலீப பீரிஸ் 'இந்த இரு சந்தேக நபர்களும் மேல் நீதிமன்றின் உத்தரவுக்கு அமையவே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இந்த வழக்கை கொழும்பு பிரதான நீதிவானின் பொறுப்பில் இருந்து வேறு ஒரு நீதிவானுக்கு மாற்று மாறு நாம் கோரிக்கை விடுத்துள்ளோம். அது தொடர்பில் வாதங்களை முன்வைக்க சிறிய கால அவகாசம் ஒன்றைத் தருமாறு கோருகின்றோம் என்றார். மேலதிக விசாரணை அறிக்கை ஊடாக மன்றுக்கு விளக்கமளித்த குற்றப்புலனாய்வுப் பிரிவினர், இந்த விவகாரத்தில் சந்தேக நபர்கள் இருவரினதும் வங்கிக் கணக்குகள் தொடர்பில் 75 வங்கி, நிதி நிறுவங்களிடம் அறிக்கை கோரப்பட்டுள்ளன என்று, அதில் 48 நிறுவனங்களில் இருந்து அறிக்கை கிடைத்துள்ளதுடன், 17 நிறுவங்களிடமிருந்து அறிக்கை கிடைக்க வேண்டியுள்ளது என்றும் சுட்டிக்காட்டினர். அறிக்கைகள் பிரகாரம், முதல் சந்தேக நபரான ஹேமசிறி பெர்ணான்டோவின் பெயரிலோ அவரது தேசிய அடையாள அட்டை இலக்கத்திலோ எந்த வங்கிக் கணக்குகளும் பதிவாக இல்லை எனவும், 2ஆம் சந்தேக நபர் பூஜித் ஜயசுந்தரவின் பெயரில் 3 வங்கிக் கணக்குகள் உள்ளன என்றும் குற்றப் புலனாய்வுப் பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது. (எ-71)

## பிரபாகரன் கொல்லப்பட்டதைப் போன்று கோத்தாவை அரச தலைவராக்குவோம்

### நிச்சயம் நடக்கும் என்கிறார் அதாவுல்லா

கொழும்பு, ஒக். 26


**வி**டுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் சந்தியில் செத்துக் கிடப்பார் என்றோம், வடக்கு - கிழக்கு பிரிக்கப்படும் என்றோம், மகிந்த மைத்திரி இணைவார்கள் என்றோம் இவையெல்லாம் நடந்திருக்கின்றன. இவைபோல் கோத்தபாய அரச தலைவராவதும் நடக்கும் என்றார் முன்னாள் அமைச்சர் அதாவுல்லா.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

எதிர்வரும் அரச தலைவர் தேர்தலானது இலங்கையைப் பொறுத்தமட்டில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாக காணப்படுகின்றது. இன்றைய சூழ்நிலையில் நாட்டின் இறைமையை, பாதுகாப்பை உறுதிப்படுத்தக்கூடிய ஒருவரே நாட்டின் அரசதலைவராக வேண்டும். அந்த வகையில் 30 வருடப் போரை முடிவுக்குக் கொண்டுவந்த ராஜபக்ச குடும்பதைச் சார்ந்த ஒருவரே நாட்டுக்கு ஏற்ற அரச தலைவராவார்.

அந்த வகையில் தேசிய காங்கிரஸான எமது கட்சி கோத்தபாய ராஜபக்சவை ஆதரிக்கின்றது. இன்று கோத்தபாய ராஜபக்சவின் வெற்றியானது உறுதியாக உள்ளது. இந்த வெற்றியில் முஸ்லிம்களாகிய நாமும் பங்காளர்களாக வேண்டும். குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கை தவிர்ந்து ஏனைய பிரதேசங்களில் வாழும் முஸ்லிம் மக்கள் அரச தலைவரைத் தெரிவு செய்யும் விடயத்தில் நிதானமாக உள்ளனர். அவர்களது மனநிலைகளை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸாலோ அல்லது அகில இலங்கை மக்கள் காங்கிரஸாலோ மாற்ற முடியாது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட அரச தலைவர் முறையானது சிறுபான்மை முஸ்லிம்களுக்கு சிறந்தது என நானும் மறைந்த தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரபும் கூறியுள்ளோம். ஆனால் இந்த நிறைவேற்று அதிகார முறைமை மாற்றப்பட வேண்டும் என ஹக்கீம், ரிசாத் ஆகியோர் உறுதியாக உள்ளனர். தொடர்ச்சியாக அரச தலைவர் தேர்தலில் களமிறங்கி



தோல்வி கண்ட ரணில் விக்ரமசிங்க இந்த தடவையும் தனது தோல்வியை ஒப்புக்கொண்டதனாலே இந்த தேர்தலில் சஜித் பிரேமதாசவை வேட்பாளராக களமிறக்கியுள்ளார். சஜித் பிரேமதாசவினால் குச்சிப்பெட்டி போன்ற வீடுகளை கட்டிக்கொடுக்க முடியுமே தவிர நாட்டை பாதுகாக்க முடியாது - என்றார். (ம)

## இலங்கையில் நடந்த போரால் தமிழ் மக்களுக்கு பெரும் அழிவு

### வடக்கு ஆளுநர் லண்டனில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.26

இலங்கையில் நடைபெற்ற போரால் தமிழினத்துக்கும், தமிழ் பேசும் மக்களுக்கும் பெரும் அழிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதனை நாங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும். அதை எவரும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது என்று வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவன் தெரிவித்தார்.

உத்தியோக பூர்வப் பயணமாக லண்டன் சென்றுள்ள வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராவகன், அங்கு தொலைக் காட்சி நேர்காணல் ஒன்றில் பங்கு கொண்டார். அந்த நேர்காணலில் புலம்பெயர் தமிழர் ஒருவர் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கும் போதே ஆளுநர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

"வடக்கில் இனஅழிப்பு இடம்பெற்றதை ஏற்றுக்கொள்கிறீர்களா?" என்று புலம் பெயர் தமிழர் ஒருவர் ஆளுநரிடம் கேள்வியெழுப்பினார். அதற்குப் பதிலளித்த ஆளுநர்,

"இதே கேள்வியை மலையக மக்கள் கேட்கிறார்கள், இதே கேள்வியை முஸ்லிம் மக்கள் கேட்கிறார்கள் யாழ்ப்பாணத்தை விட்டு முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டது இனஅழிப்பு என்கிறார்கள் அவர்கள். எனவே இனஅழிப்புச் செய்தவர் யார், இன அழிப்புக்கு உட்பட்டவர் யார், இதைப் பார்த்துக் கொண்டிருக்கும், மூன்றாம் தரப்பாக உள்ள பன்னாட்டுச் சமூகம் செய்



றதோ, இல்லையோ என்ற இந்த மூன்று பேரும் தான் பதிலைக் கூற வேண்டும்.

இது தவிர தனிப்பட்ட எனது கருத்து முக்கியமானதல்ல.

என்னைப் பொறுத்தவரையில் போர் பெரும் அழிவுகளை ஏற்படுத்தியுள்ளது. தமிழ்த் தேசத்திலே நான்கு இராணுவத்தினர் அழிவுகளை உண்டாக்கியுள்ளன. மனித உயிர் அழிக்கப்பட்டுள்ளது, கலாசாரம் அழிக்கப்பட்டுள்ளது. தமிழர்களுக்கு முக்கியமாக இருந்த நூலகம் எரிக்கப்பட்டுள்ளது. எனவே இவற்றை வரிசைப்படுத்தும் போது இலங்கையில் தமிழினத்துக்கும், தமிழ் பேசும் மக்களுக்கும் போரால் அழிவுகள் உண்டானது என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும்" என்று ஆளுநர் பதிலளித்தார். (க-21)

## ரெலோவின் செயற்குழுக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஒக்.26

அரச தலைவர் தேர்தலை முன்னிட்டு, தமிழர் விடுதலைக் கூட்டணி சிறப்பு மையம் செயற்குழுக் கூட்டம் நாளை மறுதினம் 28 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு ஹொரவ பொத்தான வீதி, வவுனியாவில் அமைந்துள்ள றோயல் கார்டன் ஹோட்டலில் நடைபெறும்.

கூட்டத்தில் அரச தலைவர் தேர்தலில் என்ன முடிவை எடுக்க வேண்டும் என்று வடக்கு கிழக்கு மாகாணத்திலுள்ள சகல உறுப்பினர்களது அபிப்பிராயங்களைக் கேட்டறிந்து, பாதிக்கப்பட்ட மக்களுக்கு எதிர்காலத்தில் நியாயமான தீர்வைப் பெற உதவும் வகையில் தீர்மானங்கள் மேற்கொள்ளப்படும் என்று கட்சியின் செயலாளர் நாயகம் வீ. ஆனந்தசங்கரி அறிவித்துள்ளார். (க)

## தமிழ்மக்கள் அனைவரும் வாக்களிப்பது அவசியம்

### சிவமோகன் எம்.பி. தெரிவிப்பு

மன்னார், ஒக்.26

எதிர்வரும் அரச தலைவர் தேர்தலில் தமிழ் மக்கள் அனைவரும் முழுமையாக வாக்குச் செலுத்த வேண்டும் என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது. அடுத்த மாதம் நடக்க உள்ள அரச தலைவர் தேர்தலில் தமிழ் மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து சுமுகமான வாழ்வைத் தரும் இலங்கையின் அரச தலைவரைத் தெரிவு செய்வதற்காக வடக்கு, கிழக்குத் தமிழ் மக்கள் அனைவரும் நூறு சதவீதமான வாக்குகளைப் பதிவு செய்ய வேண்டும். பொருத்தமில்லாத ஒருவரை அரச கட்டிலில் ஏற்றிவிட்டுப் பின்னர் அழுது புலம்புவதில் அர்த்தமில்லை. 2019இலும் தமிழ் மக்களே அரச தலைவரைத் தீர்மானிக்கப் போகின்றனர். தமிழ் மக்கள் அனைவரும் வாக்களிப்பது அவசியம். என்றார். (எ-213)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதுவரையில் இல்லாத சம்பள அதிகரிப்பு வழங்கியுள்ளோம்

## அமைச்சர் மங்கள தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.26

இலங்கை சுதந்திர மடைந்த காலத்தில் இருந்து எந்த அரசும் வழங்காத சம்பள அதிகரிப்பை அரச ஊழியர்களுக்கு இந்த அரசு 150 முதல் 250 வீதம் வரை வழங்கி இருக்கின்றது.

பெரும் கடன் சுமையுடனே அரசைப் பொறுப்பேற்றிருந்தோம். இருந்தபோதும் அனைத்துக் கடன் தவணைகளையும் முறையாக செலுத்தியுள்ளோம். 2030ஆம் ஆண்டளவில் இந்த நாட்டை கடன் சுமையற்ற நாடாக மாற்ற முடியும். இவ்வாறு நிதி அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார். நாடாளுமன்றத்தில் கடந்த புதன்கிழமை 2020ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் நான்கு மாத காலங்களுக்கான அரச செலவீனங்களுக்கான கணக்கறிக்கையை சமர்ப்பித்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது அரச தலைவர் தேர்தல் ஒன்று நெருங்கியுள்ள சூழலில் நாம் இடைக்காலக் கணக்கு வாக்கெடுப்பை சமர்ப்பித்துள்ளோம். இது எதிர்வரும் 2020ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் ஏப்ரல் மாதம்வரை நான்கு மாதங்களுக்கானது. இவ்வாறு இடைக்கால கணக்கு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படுவது இது முதல்முறையல்ல. 1932ஆம் ஆண்டுமுதல் பல சந்தர்ப்பங்களில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

2015ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்ததுமுதல் பல்வேறு சவால்களையும், நெருக்கடி களையும் நாம் சந்தித்துள்ளோம்.

2016, 2017ஆம் ஆண்டுகளில் வெள்ளம் ஏற்பட்டது. 2018ஆம் ஆண்டு ஒக்டோபர் ஆட்சிக்கவிழ்ப்பு, 2019 ஏப்ரல் 21ஆம் திகதி பயங்கரவாதத் தாக்குதல் நடத்தப்பட்டது. அதனால் எமது சுற்றுலாத்துறை பெரும் வீழ்ச்சிகண்டது. என்றாலும், மிகவும் குறுகிய காலத்தில் அதை மீளக் கட்டியெழுப்பியுள்ளோம். அரச ஊழியர்கள் தொடர்பாகக் கதைக்கும் ராஜபக்சவினர், 2005ஆம் ஆண்டு முதல் அரச சேவையாளர்களுக்கு ஒரு சதத்தைக்கூட அதிகரிக்க வில்லை. அடுத்தாண்டு ஜனவரி மாதமளவில் அரச சேவையாளர்கள் எதிர்பாராதளவு சம்பள அதிகரிப்பை வழங்கவும் உள்ளோம். சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் வேட்பாளர் வற் வரியை 8சதவீதமாக குறை க்கவுள்ள தாக கூறுகின்றார். எவ்வாறு முடியும்?. கல்வி, சுகாதா ரத்திற்கான ஒதுக்கீடுகளை குறைப்பதன் மூலமா அதைச் செய்யப்போகின்றீர்கள்? . ஒழுக்கமுள்ள நாட்டைக் கட்டியெழுப்பப் போகின்றோம் என்று தெரிவிக்கின்றனர். ஆனால் கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் இந்த சபையில் அவர்கள் எந்தளவு கீழ்த்தரமான முறையில் செயற்பட்டார்கள் என்பது மக்களுக்குத் தெரியும். இவர்களை வைத்துக் கொண்டு எப்படி இவர்கள் ஒழுக்கமுள்ள சமுகத்தை ஏற்படுத்துவார்கள் என்று கேட்கின்றேன். என்றார்.

(எ-61)

# ஸஹ்ரான் தெரிவித்த நபரை வெளிப்படுத்தட்டும் ஹக்கீம்

## நமல் லான்சா வலியுறுத்து

கொழும்பு, ஒக்.26

தேசியப்பட்டியல் வழங்கக்கூடாது என சஹ்ரான் தெரிவித்த நபரை அமைச்சர் ரவூப் ஹக்கீம் வெளிப்படுத்த வேண்டும் என்று எதிர்க் கட்சி உறுப்பினர் நமல் லான்சா தெரிவித்தார். நாடாளுமன்றத்தில் கடந்த புதன்கிழமை 2020ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரும்வகையில் நான்கு மாத காலங்களுக்கான அரச செலவீனங்களுக்கான கணக்கறிக்கை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது ஏப்ரல் தாக்குதல் தொடர்பாக ஆராய நாடாளுமன்றத் தெரிவுக்குழு அமைக்கப்படவேண்டும் என்று நானே ஆரம்பத்தில் தெரிவித்தேன். என்றாலும் தெரிவுக்குழு உறுப்பினர்கள் தொடர்பில் எமக்கு திருப்தி இல்லாததால் அதை எதிர்த்துவந்தோம். தெரிவுக்குழுவின் அறிக்கை நீதியாக இருக்கமாட்டாது என தெரிவித்திருந்தோம்.

ஆனால் தற்போது விசாரணைக்குழுவில் இருந்த அமைச்சர் ரவூப் ஹக்கீம் பயங்கரவாத தாக்குதல் தாரியான சஹ்ரானுடன் இணைந்து கலந்துரையாடும் காட்சிகளை ஊடகங்கள் ஊடாக பார்க்கின்றோம். அவ்வாறாயின் தெரிவுக்குழு விசாரணை நீதியாக இடம்பெற்றுள்ளதாக நம்பமுடியுமா?. அமைச்சர் ரவூப் ஹக்கீம் மீது எமக்கு நம்பிக்கை இருக்கின்றது. ஆனால் ஊடகங்களில் வெளிப்படுத்தி இருக்கும் படங்கள் தொடர்பில் அவர் தெளிவுபடுத்தவேண்டும்.

சஹ்ரானுடனான கலந்துரையாடலின்போது, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு 50ஆயிரம் வாக்குகளை பெற்றுத் தந்திருக்கின்றோம். அதனால் தேசியப்பட்டியலில் அவருக்கு வழங்கக்கூடாது என சஹ்ரான் தெரிவிக்கின்றார். சஹ்ரான் தெரிவிக்கும் அந்த நபர் யார் என்று கேட்கின்றோம். அமைச்சர் ரவூப் ஹக்கீம் அந்த நபரை முடியுமானால் வெளிப்படுத்த வேண்டும். என்றார்.

சபையில் இருந்த அமைச்சர் ரவூப் ஹக்கீம் அதன் பின்னர் கருத்துத் தெரிவித்தார். சஹ்ரானுடன் நான் கலந்துரையாடியது 2015 ஆண்டிலாகும். அந்த காலப்பகுதியில் சஹ்ரான் பயங்கரவாதி என யாரும் அறிந்திருக்கவில்லை. அந்த காலப்பகுதியில் அவருடன் இணைந்து செயற்பட்டவர்களின் படங்கள் என்னிடம் இருக்கின்றன என தெரிவித்து சில படங்களை காட்டி, அதில் இருக்கும் ஒருவர் எம்.எஸ்.எம்.ஸியாத். அவர்தான் பொதுமக்கள் முன்னணியின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளராக இருக்கின்றார். கோத்தாபய ராஜபக்ச மட்டக்களப்புக்கு தேர்தல் பரப்புரைக்கு வர இருக்கின்றார். அவரை இவர்தான் வரவேற்க இருக்கின்றார். என்றார்.

(எ-61)

# சு.கவை பாதுகாப்பதற்கே பெரமுனவுடன் இணைவு

## வீரகுமார எம்.பி. கூறுகின்றார்

கொழும்பு, ஒக்.26

சுதந்திரக் கட்சியின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டே பொதுமக்கள் முன்னணியுடன் இணைந்தோம். அரச தலைவர் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்சவின் வெற்றியை எவராலும் தடுக்க முடியாது.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் வீரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியும் இணைந்து கடந்த புதன்கிழமை இராஜகிரியவில் உள்ள அவர்களது அலுவலகத்தில் செய்தியாளர் சந்திப்பு நடத்தின. அதில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.


அவர் மேலும் தெரிவித்ததாவது

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்சவின் வெற்றிக்குச் சிறிலங்கா சுதந்திர கட்சியினர் என்ற ரீதியில் தனித்தும், சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியுடன் இணைந்தும் தேர்தல் பரப்புரைக் கூட்டங்களை முன்னெடுத்து செல்கின்றோம். சுதந்திர கட்சியின் உறுப்பினர்கள் அனைவரும் இன்று எம்முடன் இணைந்துள்ளார்கள். சுதந்திர கட்சியின் ஒரு சில தரப்பினர் இன்றும் கட்சியை பாதுகாப்பதாக குறிப்பிட்டுக் கொண்டு ஐக்கிய தேசிய கட்சிக்கு ஆதரவாகவே செயற்படுகின்றார்கள். சுதந்திர கட்சியையைப் பாதுகாக்க வேண்டிய தேவை எழுத்ததால்தான் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியுடன் ஒன்றிணைந்து தேர்தலை எதிர்க் கொள்ளவுள்ளோம். சுதந்திர கட்சியின் ஆதரவுடன் கோத்தபாய ராஜபக்ச நிச்சயம் பெற்றிப் பெறுவார் என்பதில் எவ்வித சந்தேகமும் கிடையாது. சுதந்திர கட்சியினரது அரசியல் தீர்மானங்களில் தலையிடுவதற்கு எவருக்கும் அனுமதியும் கிடையாது. என்றார்.

(எ-31)

# தமிழ் தலைமைகள் மீது மக்கள் அதிருப்தியாம்

## ரெஜினோல்ட் குரே கூறுகின்றார்



யாழ்ப்பாணம், ஒக்.26

தமிழ்த் தலைமைகள் மீது கடும் அதிருப்தியில் இருக்கும் தமிழ் மக்கள் தற்போதுஎம்முடன்இணைந்து மீண்டும் மகிந்த யுகத்தை ஏற்படுத்த உழைக்கின்றனர் என்று கூறியுள்ளார் வடக்கு மாகாண முன்னாள் ஆளுநரும், சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் வடக்கு மாகாண இணைப்பாளருமான ரெஜினோல்ட் குரே. யாழ்ப்பாணம், கே.கே.எஸ். வீதியில் உள்ள சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி அலுலகத்தில் கடந்த புதன்கிழமை நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் ஒன்றாக இணைந்து பணியாற்றும் தேர்தலாக இந்தத் தேர்தல் அமைந்துள்ளது. இன, மத, குல பேதம் இன்றி நாட்டுக்கான ஒரு தலைவரைத் தெரிவு செய்வதற்கு அனைவரும் இணைந்து செயற்படுவது வரவேற்கத்தக்கது.

தமிழ்த் தலைமைகளின் அண்மைய செயற்பாடுகளால் மக்கள் கடும் வெறுப்புணர்சியில் உள்ளனர். இனியும் அந்தத் தலைவர்களை நம்பிச் யெற்படுவதற்கு மக்கள் தயாராக இல்லை.

அதனால் மக்கள் மீண்டும் மகிந்த யுகத்தை ஏற்படுத்த வேண்டும் என்று மக்கள் விரும்புகின்றனர். எதிர்வரும் 28 ஆம் திகதி எமது கட்சியின் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ச பரப்புரைக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக வரவுள்ளார். என்றார்.

(எ-ரி1)

# முகாமிலிருந்து தப்பியோடியவர் போதைக்கு அடிமையானவராம்

வவுனியா, ஒக்.26

வவுனியா பூந்தோட்டத்தில் அமைந்துள்ள மறுவாழ்வு நிலையத்தில் தங்க வைக்கபட்டிருந்த வெளிநாட்டு அகதிகள் கடந்த மாதம் முழுமையாக வெளியேறியிருந்த நிலையில், அங்கிருந்து தப்பியோடியவர் போதைபொருளுக்கு அடிமையானவர் என்று மறுவாழ்வு நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த இரண்டு நாள்களுக்கு முன்னர் அதிகாலை வேளை பூந்தோட்டம் மறுவாழ்வு நிலையத்தில் இருந்து வெளிநாட்டு அகதி ஒருவர் தப்பியோடினார் என்று செய்தி வெளியானது. குறித்த நபர் வெளிநாட்டு அகதி அல்ல எனவும் அவர் போதைப்பொருளுக்கு அடிமையாகி மறுவாழ்வு பெற்று வருபவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஏப்ரல் 21 நாட்டில் இடம்பெற்ற தாக்குதலுக்குப் பின்னர் பூந்தோட்டம் மறுவாழ்வு நிலையத்தில் தங்க வைக்கப்பட்டிருந்த வெளிநாட்டு அகதிகள் கடந்த மாதம் முழுமையாக வெளியேறியிருந்தனர். இந்த நிலையில் கடந்த 11 ஆம் திகதியில் இருந்து குறித்த புனர்வாழ்வு நிலைலயத்தில் போதைப்பெருளுக்கு அடிமையானவர்களே தங்க வைக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைத்து மக்களுக்கும் சமவுரிமை வழங்குவோம்

## அநுரகுமார திசாநாயக்க தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.26

சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் என அனைத்து மக்களின் சம உரிமை விடயத்தில் நாம் முன்னிற்கின்றோம் என்று தேசிய மக்கள் சக்தியின் அரசதலைவர் வேட்பாளர் அநுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

அம்பாறை, அக்கரைப்பற்றில் நேற்றுமுன்தினம் நடத்திய தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது அனைத்து மக்களுக்கும் தத்தமது சமய வழிபாடுகளை முன்னெடுப்பதற்கான சந்தர்ப்பத்தை நாம் உறுதிப்படுத்துவோம்.

எவருக்கும் மற்றவர்களின் மதத்தை உயர்த்தி அல்லது தாழ்த்திப் பார்ப்பதற்கு இடமளிக்க முடியாது. மாறாக மற்றையவர்களின் மதத்தை ஏனையோரும் ஏற்றுக் கொள்ள வேண்டும். அந்த வகையில் அனைவருக்கும் தத்தமது மதங்களை பின்பற்ற உள்ள உரிமையை நாம் உறுதிப்படுத்துவோம். நாட்டில் மீண்டும் இரத்தம் சிந்தாது தமிழ், சிங்கள மற்றும் முஸ்லிம் மக்கள் மத்தியில் ஒற்றுமையை ஏற்படுத்தக் கூடிய நாட்டை கட்டியெழுப்புவோம். நாட்டை அதள பாதாளத்துக்குக் கொண்டு சென்ற அரசியல்முறைமையை முடிவுக்கு கொண்டு வருவதற்கு தேசிய மக்கள் சக்தியுடன் இணையுங்கள்.

கடந்த 19 ஆண்டுகளாக நாடாளுமன்றில் அமைதியாக இருந்த சஜித்தை விடுத்து, மக்களாகிய உங்களது பிரச்சினைகளுக்காக குரல்கொடுத்த என்னையே மக்கள் தெரிவு செய்ய வேண்டும்- என்றார். (எ)



# பெருந் தோட்ட மக்களுக்கு வசதிகள் ஏற்படுத்தப்படும்

## கோத்தபாய தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.26

பெருந்தோட்ட மக்களின் வாழ்வை ஒரு குறுகிய வட்டத்துக்குள் மட்டுப்படுத்தாமல் அவர்களுக்குத் தேவையான உட்கட்டமைப்புக்கள் உள்ளிட்ட அனைத்து வசதிகளையும் பெற்றுக் கொடுப்பேன் என்று தெரிவித்துள்ளார் சிறிலங்கா பொதுமக்கள் முன்னிணியின் அரச தலைவர் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ச.

நாவலப்பட்டியில் அண்மையில் நடைபெற்ற பரப்புரைக் கூட்டம் ஒன்றில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

பெருந்தோட்ட மக்களின் அடிப்படை பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கான விடயங்களை துறைசார் நிபுணர்களின் அறிவுறுத்தல்களை கொண்டு உருவாக்கியுள்ளோம். மக்களின் அடிப்படையாகக்கொண்டே அரச நிர்வாக கட்டமைப்பு முன்னெடுக்கப்படும். மக்கள் எம்மீது கொண்டுள்ள நம்பிக்கை முழு மைப்படுத்தப்படும்.

தேசிய உற்பத்தியில் உலக சந்தையில் முதலாம் நிலையில் இருந்த இலங்கையின் தேயிலையின்தரம் 4ஆம் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

அதற்கு அரசே பொறுப்பு கூற வேண்டும். இறக்குமதி உற்பத்திகளுக்கு முன்னுரிமை கொடுத்தமையாலும், உற்பத்தி மோசடிகளாலும் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. எமது ஆட்சியில் தேசிய உற்பத்திகளுக்கு முன்னுரிமை கொடுக்கப்படும். என்றார். (எ-31)

# நாட்டை மீட்டெடுப்பதற்கான இறுதிச் சந்தர்ப்பமே தேர்தல்

## ஹிருணிகா தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.26



ராஜபக்சக்களிடம் இருந்து நாட்டை மீட்பதற்கான இறுதித் தருணமாக எதிர்வரும் அரச தலைவர் தேர்தல் காணப்படுகின்றது என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர தெரிவித்தார்.

கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது ஜனநாயக நாட்டுக்குச் சர்வாதிகார ஆட்சியாளர் ஒருவர் அவசியமா என்ற கேள்வி தற்போது அனைவர் மத்தியிலும் எழுந்துள்ளது. பாதுகாப்பு அமைச்சின் கண்காணிப்பு நாடாளுமன்ற உறுப்பினராகத் துமிந்த சில்வா இருந்த காலத்தில்தான் கொலன்னாவ பிரதேசத்தில் போதைப் பொருள் வியாபாரம் பலப்படுத்தப்பட்டது.

இந்த விடயம் தொடர்பாக மகிந்த ராஜபக்சவுக்குப் பல தடவைகள் அறிவித்தும் அவர் அதைக் கவனத்தில் கொள்ளவில்லை. மகிந்த ராஜபக்ச முன்பாகத் தான் அமர்ந்திருந்தபோதுதான் எனது தந்தையான பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திரவுக்கு முடிவு கட்ட வேண்டும் என்று கோத்தபாய கூறினார் என்று கோத்தபாய ராஜபக்ச கூறினார் என்று குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு வழங்கிய வாக்குமூலத்தில் முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா கூறியிருந்தார்.

அதைப்போன்று ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட போன்றவர்களை கொலை செய்யும் எண்ணம் ராஜபக்சக்களைத் தவிர வேறெவருக்கும் இருக்கவில்லை. இத்தகையவர்களிடமிருந்து நாட்டை மீட்பதற்கான இறுதித் தருணம் எதிர்வரும் அரச தலைவர் தேர்தலாகும்- என்றார். (எ)

# தமிழரது கோரிக்கையை ஏற்று வாக்குகளை இழக்க முன்வரார்

## காதர் மஸ்தான் கூறுகின்றார்

வவுனியா. ஒக்.26



தமிழ்க் கட்சிகளின் கோரிக்கைகளை ஏற்று வாக்குகளை இழக்க விரும்ப மாட்டார்கள். ஒரு பகுதியால் தயாரிக்கப்பட்ட அறிக்கையை ஏற்றுக் கொண்டு மறு தரப்பால் கிடைக்கும் வாக்குகளை இழக்க அவர்கள் முன்வர மாட்டார்கள்.

இவ்வாறு முன்னாள் பிரதி அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான காதர் மஸ்தான் தெரிவித்தார்.

வவுனியாவில் உள்ள அவரது அலுவலகத்தில் கடந்த புதன்கிழமை நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது

அரச தலைவர் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்சவிடம் சிறு பான்மைச் சமூகம் சார்ந்து பல்வேறு கோரிக்கைகளை நாம் முன்வைத்துள்ளோம். முக்கியமாகச் சிறுபான்மை மக்களின் பாதுகாப்பு. மத சுதந்திரம் உறுதிப்படுத்த வேண்டும் என்று சுட்டிக்காட்டியுள்ளோம். ஏனைய மாகாணங்களைப் போன்று வடக்கு மாகாணத்திலும் அபிவிருத்திகள் இடம்பெற வேண்டும் என்று கூறியுள்ளோம்.

தற்போது சஜித் பிரேமதாசவுக்கு எந்த நிபந்தனையும் இன்றி ஆதரவு வழங்கச் சிறுபான்மைக் கட்சிகள் இணங்கியுள்ளன. அண்மையில் காலி முகத்திடலில் நடந்த ஐக்கிய தேசிய முன்னணியில் சிறுபான்மைக் கட்சிகளின் தலைவர்கள் பேசுவதற்குக் கூட வாய்ப்பளிக்கப்படவில்லை.

தற்போதைய நிலமை இவ்வாறு இருக்கையில் கோத்தபாயவை ஒரு இனவாதியாக முத்திரை குத்தப் பார்க்கிறார்கள். சஜித் பிரேம தாசவுக்குத் தான் சிறுபான்மைச் சமூகத்தின் வாக்குகள் கிடைக்கும் என்ற மாயை தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ளது.

எதிர்வரும் 16ஆம் திகதி நடைபெறும் வாக்களிப்பு அனைவருக்கும் உண்மையை உணர்த்தும். என்றார். (எ-110)

# மக்கள் கேட்ட கேள்விகளுக்கு பதிலளிக்காது நழுவிய திஸ்ஸ

வவுனியா, ஒக்.26

காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினை, அரசியல் கைதிகள் விடயம், காணி விடயங்கள் தொடர்பாக கோத்தபாய ராஜபக்சவே நேரடியாகக் கருத்துத் தெரிவிப்பார் என்று கூறி மக்களின் கேள்விக்கு விடையளிக்காது நழுவினார் முன்னாள் அமைச்சர் திஸ்ஸ விதாரண.

திஸ்ஸ விதாரண கடந்த புதன்கிழமை ஓமந்தையில் மக்கள் சந்திப்பு ஒன்றை நடத்தினார். அதில் அவர் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் அரச தலைவர் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்சவை ஆதரித்து உரையாற்றினார்.

ஐக்கிய தேசியக் கட்சி அமெரிக்காவிடம் நாட்டைத் தாரைவார்க்கின்றது என்று குற்றஞ்சாட்டிய அவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை இல்லாது செய்ய வேண்டும் என்றும் கூறினார்.

அங்கு இருந்த மக்கள் அவரிடம் கேள்வி எழுப்பினர். நீங்கள் கோத்தபாய ராஜபக்சவை ஆதரிக்க வேண்டும் என்கிறீர்கள், காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம், அரசியல் கைதிகள் விடுதலை, காணி விடயங்கள் தொடர்பாகப் பல விடயங்களுக்குத் தமிழ் மக்கள் தீர்வை எதிர்பார்த்துள்ளனர். அவை தொடர்பாக உங்களிடம் உள்ள தீர்வு என்ன? என்று மக்கள் கேட்டனர். இவற்றை நாம் எமது கட்சி சார்பாக கோத்தபாய ராஜபக்சவிடம் கையளித்த கோரிக்கைகளில் உள்ளடங்கியுள்ளோம்.

எதிர்வரும் 28ஆம் திகதி வவுனியாவில் நடைபெறும் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் கூட்டத்தில் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்சவே இதற்கான பதிலை வழங்குவார் என்று திஸ்ஸ விதாரண பதிலளிக்காது நழுவினார். விமல் வீரவன்ச யாழ்ப்பாணம் வானூர்தி நிலையப் பெயர்ப் பலகை தொடர்பாகச் சுட்டிக்காட்டிய மக்கள், இலங்கைக் கொடியையும் மாற்றியமைக்கும் செயற்பாடுகளையும் செய்கின்றனர். அவர்களது இனவாதப் போக்கைப் பார்க்கின்ற போது எவ்வாறு வாக்களிக்க முடியும்? என்று கேள்வி எழுப்பினர்.

அதற்குப் பதிலளித்த திஸ்ஸ விதாரண, வடக்கிலும் விக்னேஸ்வரன், சிவாஜிலிங்கம் போன்றோர் வெளியிடும் கருத்துக்களால் தென்னிலங்கை மக்களும் அச்சம் கொண்டுதான் உள்ளனர் என்றார். (எ-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீராவிப்பிட்டி ஆலயத்துக்குள் தொல்பொருள் சிதைவுகளாம்

## சர்ச்சையைக் கிளப்பும் பிக்குகள்!

முல்லைத்தீவு, ஒக். 26

முல்லைத்தீவு பழைய செம்மலை நீராவியடிப் பிள்ளையார் ஆலய வளாகத்துக்குள், தொல்பொருள் சிதைவுகள் இருப்பதாக, அந்தப் பகுதிக்குச் சென்ற பிக்குகளிடம் விகாரைத் தரப்பு காண்பித்ததனால் புதிய சர்ச்சை தோன்றியுள்ளது.

பழைய செம்மலை நீராவியடிப் பிள்ளையார் ஆலய வளாகத்தை அபகரித்த பிக்கு ஒருவர், அங்கு விகாரை அமைத்து குடியிருந்தார். அதையடுத்து பல சர்ச்சைகள் ஏற்பட்டன. விகாரையில் குடிகொண்டிருந்த விகாராதிபதி உயிரிழந்ததைத் தொடர்ந்து, அவரது உடலை நீதிமன்ற அனுமதியையும் மீறி ஆலயக் கேணிக்கு அருகில் தகனம் செய்தமையால் பெரிய பிரச்சினைகள் உருவாகி அதனை தொடர்ந்து வழக்குகள் நீதிமன்றங்களில் தொடரப்பட்டுள்ளன.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்த பிக்குகள் 30 பேர் அளவில் பேருந்தில் நீராவியடிப் பிள்ளையார் ஆலய வளாகத்தில் அமைக்கப்பட்டிருந்த விகாரையை பார்வையிடுவதற்காக வருகை தந்திருந்தனர்.

நீராவியடிப் பிள்ளையார் ஆலயத்துக்கு எதிர்ப்பக்கமாக அமைந்திருக்கின்ற இராணுவ முகாமில் தொல்பொருள் சின்னங்கள் சில ஒரு கண்காட்சி கூடமாக அமைக்கப்பட்டிருக்கின்றது. இந்த தொல்பொருள் சிதைவுகள் வைக்கப்பட்டிருக்கின்ற பகுதியின் ஒரு பகுதி இராணுவத்தினரின் தங்குமிடமாகவும் காணப்படுகின்றது. அதே போன்று ஆலய வளாகத்தைச் சுற்றி காணப்படுகின்ற பிரதேசத்துக்குள் தொல்பொருள் திணைக்களம் அதனுடைய அடையாளக் கற்களை நாட்டி உள்ளதோடு ஒரு சில தொல்பொருள் சிதைவு களும் காட்டுப் பகுதிகளில் தற்போது காணப்படுகின்றன.

இவற்றை பார்வையிட்ட பின்னர், கொழும்பில் இருந்து வருகை தந்த பிக்குகள் இது தொல்பொருள்த் திணைக்களத்துக்கு சொந்தமான இடம் எனவும் அரசு இதனை பாதுகாக்க வேண்டும் எனவும் கருத்து தெரிவித்தனர்.

நீராவியடிப் பிள்ளையார் ஆலய நிர்வாகத்தை தொடர்பு கொண்ட போது, அவர்கள் இவ்வாறு எந்த ஒரு சிதைவுகளும் அல்லது எந்த ஒரு பொருள்களுமே எமது ஆலய வளாகத்தில் இதுவரை காலமும் இருக்கவில்லை எனவும் அது திட்டமிட்டு கொண்டு வரப்பட்டு இருப்பதாகவும் தெரிவிக்கின்றார்கள்.

இதனால் நீராவியடிப் பிள்ளையார் ஆலய வளாக விவகாரத்தில் மீண்டும் ஒரு புதிய சர்ச்சையை தோற்றுவிக்கப்பட்டுள்ளது. (ஒ.5)

# கையைப் பிடித்ததால் கண்டியில் பதற்றம்!

கொழும்பு, ஒக். 26

கண்டி மஹய்யாவ நகரில் நேற்றுமுன்தினம் இரவு ஏற்பட்ட பதற்ற நிலை கட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

முஸ்லிம் இளைஞர் ஒருவர் சிங்களப் பெண் ஒருவரது கையை பிடித்து இழுத்தார் என்று பரவிய தகவலையடுத்து அங்கு பதற்றம் ஏற்பட்டது. இதனையடுத்து உடனடியாக பொலிஸாரால் நிலமை கட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

முஸ்லிம் இளைஞர் ஒருவர் மீது தாக்குதல் நடத்தப்பட்டு அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. இதையடுத்து அங்கு பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது. (ஒ.5)

# போராட்டத்தில் கைதான பல்கலை மாணவருக்குப் பிணை

## ஒருவருக்கு மறியல் நீடிப்பு

கொழும்பு, ஒக். 26

கொழும்பில் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்ட 52 மாணவர்களையும் பிணையில் செல்ல கொழும்பு, கோட்டை நீதிவான் நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது.

மாணவர்கள் 52 பேரும் தலா ஒரு இலட்சம் ரூபா ஆள் பிணையில் செல்ல நீதிவான் அனுமதி அளித்ததுடன், கைதான ஒரு மாணவனை எதிர்வரும் 8ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும் நீதிவான் இதன்போது உத்தரவிட்டுள் ளார்.

மகாபொலப் புலமைப்பரிசில் தவணைத் தொகையை அதிகரித்தல், மகாபொலக் கொடுப்பனவின் போது குறைவாக நிதி வழங்கலை நிறுத்தல், காலதாமதம் இன்றிக் கொடுப்பனவுகளை வழங்கல் ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை கொழும்பில் பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்றியம் ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டிருந்தது.

தேர்தல் சட்டவிதிகளை மீறியமை, நீதிமன்ற உத்தரவை மீறியமை, பொலிஸாரின் கடமைக்கு இடையூறு விளைவித்தமை ஆகிய குற்றச்சாட்டின் கீழ் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட 52 மாணவர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

களனிப் பல்கலைக்கழக மாணவர்கள் 28 பேரும், வயம்பப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 3 மாணவர்களும், திறந்த பல்கலைக்கழக மாணவர் ஒருவரும், சப்பிரகமுவப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் தலைவரும், செயலரும் பிக்குகள் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பாளரும், ஜெயவர்தன புரப் பல்கலைக்கழக மாணவர்கள் 11 பேரும், ருஹுணுப் பல்கலைக்கழக மாணவர்கள் ஐவரும் உள்ளடங்கலாக 52 மாணவர்களே கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, கொழும்பில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை ஆர்ப்பாட்டத்தின் போது கைது செய்யப்பட்ட 52 மாணவர்களையும் விடுதலை செய்யக்கோரி அனைத்துப் பல்கலைக்கழகங்களுக்கு முன்பாகவும் ஆர்ப்பாட்டத்தை செய்யவுள்ளதாக அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் நேற்று எச்சரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ.5)

# 10 ஆண்டுகளாக தந்தையைக் காணவில்லை

## முள்ளிவாய்க்காலில் தப்பிய சிறுமி பிரிட்டனில் சாட்சியம்

கொழும்பு, ஒக். 26

2009ஆம் ஆண்டு மே மாதம் 17ஆம் திகதியே எனது தந்தையை இறுதியாகப் பார்த்தேன் என்று முள்ளிவாய்க்காலில் உயிர் தப்பிய 14 வயதுச் சிறுமி கலையரசி கனகலிங்கம் பிரிட்டனின் நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற நிகழ்வில் தெரிவித்துள்ளார்.

தமிழர் இனப்படுகொலை குறித்த நிகழ்வில் கலந்துகொண்டு பிரிட்டனின் பொதுச்சபைக்கு ஆற்றிய உரையில் கலையரசி கனகலிங்கம் இதனை தெரிவித்துள்ளார்.

2009ஆம் ஆண்டு மே மாதம் 17ஆம் திகதி நான் எனது தந்தையை இறுதியாகப் பார்த்தேன். எனது தந்தையை விட்டு பிரிந்த அந்த நிமிடம் இன்னமும் எனக்கு வேதனையை ஏற்படுத்துகின்றது. எனக்கு அச்சமாக உள்ளது வாருங்கள் என்று எனது தந்தையை அழைத்தேன். ஆனால் அவர் என்னை விட்டு போக வேண்டியிருந்தது. அந்த இறுதி தருணங்களை என்னால் எப்படி தெரிவிக்க முடியும்?

ஏனைய பல சிறுவர்களும் தங்கள் தந்தையர்களுக்காக அழுது கொண்டிருந்ததை நான் பார்த்தேன். நான் எனது தந்தையின் கழுத்தை இறுக்கி அணைத்தபடி அழுதேன். அவர் எனக்கு முத்தமிட்டுவிட்டு கண்ணால் எதனையோ சொல்ல முயன்றவராக விலகிச்சென்றார்.

நான் தற்போது லண்டனில் வாழும் அதேவேளை எனது தாய்;, தந்தை உயிருடன் இருக்கின்றாரா இல்லையா என்ற துயரத்துடன் வாழ்கின்றார். ஒவ்வொரு நாளும் எங்கள் துயரத்தை மறைத்து விட்டு நாங்கள் அவருடைய வருகைக்காக முகத்தில் சிரிப்பை ஏற்படுத்தியபடி காத்திருக்கின்றோம்.

எனது தந்தையைப் பார்ப்பதற்கு சில நாள்களுக்கு முன்னர் எனது உறவினர்களுடன் நான் பதுங்கு குழிக்குள் இருந்தேன். அவ்வேளை எனக்கு தெரிந்த சிறுவன் ஒருவன் ஈருருளியில் ஒடுவதை பார்த்தேன். நான் அவனை கூப்பிட எண்ணினேன். ஆனால் அதற்கு முதல் படையினரின் எறிகணை எங்களுக்கு அருகில் விழுந்து வெடித்தது. அந்த சிறுவன் தூக்கியெறிப்பட்டான்.

வானூர்திக் குண்டு வீச்சால் எனது இரு உறவினர்கள் கொல்லப்பட்டனர். என்னால் அதனை மறக்க முடியாது. குண்டு பதுங்கு குழியின் மேல் விழுந்தது. எனது உறவினர்கள் அதற்குள் சிக்குண்டனர்.

இன்றும் நான் அந்த நினைவுகளுடன் வாழ்கின்றேன். எனது தந்தைக்கு என்ன நடந்தது என்ற கேள்வியுடன் நான் ஒவ்வொரு நாளும் போராடுகின்றேன். தமிழ் மக்கள் இனப்படுகொலை செய்யப்பட்டனர் என்பதை ஏற்றுக் கொள்வது எனது வாழ்க்கையில் மாற்றங்களை கொண்டுவராது. ஆனால் எனது தந்தைக்கும் காணாமல்போன ஏனையவர்களுக்கும் என்ன நடந்தது என்பதை அறிவதற்கான வாய்ப்பை ஏற்படுத்தும் - என்றார். (ஒ.5)

### பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஒக். 26

அன்பொளி கல்வியகம் நடத்தும் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா இன்று சனிக்கிழமை பி.ப. 2 மணிக்கு, நாச்சிமார் கோயிலடியில் அமைந்துள்ள சரஸ்வதி மண்டபத்தில் அன்பொளிக் கல்வியக ஆசிரியர் வே. அன்பழகன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

முதன்மை விருந்தினர்களாக வலிகாமம் வலயக் கல்வி நிர்வாகப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி. மதியழகனும், யூப்பிட்டர் கல்வி நிலைய ஆசிரியை திருமதி லனிதா மதியழகனும் கலந்து கொள்ளவுள்ளனர். (ஒ.5)

# வெள்ளத்தால் இடம்பெயர்ந்த மக்கள் தற்காலிக முகாம்களில் தங்கவைப்பு

மன்னார், ஒக்.26

மன்னார் மாவட்டதில் கடந்தஒருவாரகாலமாக பெய்துவரும்கடும்மழை காரணமாக85குடும்பங்களைச்சேர்ந்த320பேர் தற்காலிகமாக இடம்பெயர்ந்து முகாம்களில் தங்க வைக்கப்படுள்ளனர்.

ஜீவபுரம், ஜிம்ரோன்நகர், சாந்திபுரம், எமில் நகர் சாவற்கட்டு, எழுத்தூர் போன்ற பகுதிகளில் வெள்ளம் குடிமனைகளுக்குள் புகுந்ததன் காரணமாக மக்கள் தங்கள் வதிவிடங்களை விட்டுவெளியேறினர்.

இடம்பெயர்ந்துள்ள மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள், உணவு, குடி தண்ணீர் என்பன மாவட்ட செயலகம் மற்றும் மாவட்ட இடர் முகாமைத்துவ பிரிவு பிரதேச செயலகத்தின் ஊடாக ஒழுங்கு செய்யப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றது.

இடம்பெயர்ந்த குடும்பங்களில் அதிகளவானவர்கள் சிறுபிள்ளைகளைக் கொண்ட குடும்பத்தினர் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிளிநொச்சிக் கடத்தல் சம்பவம்

# 9 பேருக்கு 10 ஆண்டுகள் கடூழியச் சிறைத்தண்டனை

*யாழ்ப்பாணம், ஒக். 26*

*கிளிநொச்சியில் சிறிராம் விஜிதன் என்பவரைக் கடத்திச் சென்றமை, அவரின் நகைகளைக் கொள்ளையிட்டமை ஆகிய குற்றங்களுக்கு 9 பேருக்கு தலா 10 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை விதித்து யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.*

மொகொமட் நஜிமுடீன் மொகொமட் சியாம், மொகமட் இப்ராஹிம் மரிக்கார் மொகொமட், மொகொமட் சஹீட் மொகொமட் ஹில்மி, மொகொமட் பைஸால் மொகொமட் பஸ்லு, வர்ணகுலசூர்ய ஜூட் ஜானக பெர்னாந்து, டாவுட் ஷhகி மொகொமட் அசான், ஹேரத் பத்திரணாலேக வந்தனா குமாரதுங்க, சரி ஜோன் மொகொமட் ரிஸ்வான் மற்றும் அப்துல் ரஹிட் மொகொமட் நிஸான்டீன் ஆகிய 9 பேருக்கு இவ்வாறு தண்டனை விதிக்கப்பட்டது.

கிளிநொச்சியைச் சேர்ந்த சிறிராம் விஜிதன் என்பவர் 2015ஆம் ஆண்டு ஓகஸ்ட் 18ஆம் திகதி கடத்திச் செல்லப்பட்டார். ஏ 32 பாதை வழியாக பூநகரியில் இருந்து மன்னார் நோக்கிச் சென்ற டிபென்டர் ரக வாகனம் ஒன்று சோதனைக்குட்படுத்தப்பட்ட போது 9 பேர் கைது செய்யப்பட்டனர்.

கடத்தப்பட்டவர், சந்தேகநபர்கள் பயணித்த வாகனத்தில் இருந்து மீட்கப்பட்டதுடன் சம்பவம் தொடர்பாக அவரிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. 3 லட்சம் ரூபா பணத்தை வாங்கிக் கொண்டு கஞ்சாவை வழங்காத காரணத்தால், தாம் அவரை கடத்திச் சென்றதாக சந்தேகநபர்கள் 9 பேரும் தெரிவித்திருந்தனர்

ட்2015ஆம் ஆண்டு ஒகஸ்ட் 18ஆம் திகதி கிளிநொச்சியில் சிறிராம் விஜிதன் என்பவரைக் கடத்தும் நோக்குடன் சட்டவிரோதக் கூட்டம் ஒன்றின் உறுப்பினராகச் செயற்பட்டமை, சிறிராம் விஜிதனை கடத்தி சட்டவிரோதமாகச் சிறைப்படுத்தும் நோக்குடன் செயற்பட்ட கூட்டம் ஒன்றின் உறுப்பினராக இருந்தமை, சிறிராம் விஜிதனின் உடமையிலிருந்த 58 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்கமாலை, 36 ஆயிரம் ரூபா பெறுமதியான கைச்சங்கிலி மற்றும் 24 ஆயிரம் ரூபா பெறுமதியான மோதிரம் என்பவற்றைக் கொள்ளையடித்தமை உள்ளிட்ட 5 குற்றச்சாட்டுக்களின் கீழ் எதிரிகள் 9 பேருக்கும் எதிராக யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் 2017ஆம் ஆண்டு ஓகஸ்ட் முதலாம் திகதி சட்ட மா அதிபரால் குற்றப்ப கா்வுப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கின் விளக்கம் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர் முன்னிலையில் இடம்பெற்று வந்தது. வழக்குத் தொடுனர் சார்பில் அரச சட்டவாதி மாதினி விக்னேஸ்வரன் வழக்கை நெறிப்படுத்தினார். எதிரிகள் சார்பில் நா.சிறிகாந்தா முன்னிலையானார்.

விளக்கம் சமர்ப்பணங்கள் நிறைவில் நேற்றுத் தீர்ப்புக்காக வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

எதிரிகள் மீதான 5 குற்றச்சா ட்டுக்களில் 3 குற்றச்சாட்டுக்கள் சாட்சியங்களின் அடிப்படையில் நியாயமான சந்தேகங்களுக்கு அப்பால் நிரூபிக்கப்பட்டு 9 பேரும் குற்றவாளிகளாக அடையாளம் காணப்படுகின்றனர் என்று மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர் தீர்ப்பளித்தார்.

**தண்டனைக் கைதி தப்பி ஓட்டம்**

தண்டனைத் தீர்ப்பளிக்கப்பட்ட நிலையில் வழக்கேட்டில் கையொப்பமிட அழைக்கப்பட்ட நிலையில் நீதிமன்றில் இருந்து தப்பி ஓட்டம் எடுத்தார். எனினும் சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் துரத்திச் சென்று நீதிமன்றிலிருந்து சுமார் 300 மீற்றர் தூரத்தில் வைத்து தண்டனைக் கைதியை மடக்கிப் பிடித்தனர்.

**குற்றவாளி ஒருவர் இல்லை**

மொகொமட் சஹீட் மொகொமட் ஹில்மி என்ற குற்றவாளி நீதிமன்றில் நேற்று முன்னிலை யாகவில்லை. அவர் குருநாகல் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று அவரது மனைவி மன்றுக்கு மருத்துவச் சான்றிதழுடன் தெரியப்படுத்தினார். மொகொமட் சஹீட் மொகொமட் ஹில்மி கைது செய்யுமாறு பகிரங்கப் பிடியாணை பிறப்பித்து யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம் உத்தரவிட்டது.

**வாகனம் உரிமையாளரிடம் ஒப்படைப்பு**

கடத்தலுக்குப் பயன்படுத்திய டிபென்டர் வாகனம் வாடகைக்கு அமர்த்திக் கொண்டுவரப்பட்டது. அதனால் அந்த வாகனம் கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றால் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் பிணை முறையை நீக்கி உரிமையாளரிடம் வாகனத்தை ஒப்படைக்க யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம் உத்தரவிட்டது. (ஒ,5,37)

### சிலாபத்தில் 13பேர் கைது ஆஸி.க்கு செல்ல முயன்றவர்களாம்

கொழும்பு, ஒக். 26

சட்டவிரோதமான முறையில் ஆஸ்திரேலியாவுக்குச் செல்ல முயன்றனர் என்று இரண்டு பெண்கள் உள்பட 13 பேர் சிலாபம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சிலாபம், சுதுவெல்ல பகுதியில் உள்ள விருந்தினர் மாளிகையில் இவர்கள் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடம் மேற்கொண்ட விசார ணைகளின் போது சட்டவிரோதமான முறையில் படகு மூலம் ஆஸ்திரேலியாவுக்கு செல்வதற்கான ஆயத்தங்களை மேற்கொண்டிருந்தமை கண்டறியப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர்கள் யாழ்ப்பாணம், பலாலி, மாங்குளம் மற்றும் மட்டக்களப்புப் பகுதியைச் சேர்ந்த 21 வயது தொடக்கம் 44 வயதுடையவர்கள். (ஒ,5)

# கிராமப்புற வாக்குகளை கொள்ளையடிக்க ஸஹ்ரானுடன் இணைத்து சேறுபூசுகின்றனர்

## சாடுகிறார் அமைச்சர் ஹக்கீம்

கொழும்பு, ஒக். 26

எதிர்க்கட்சியினர் தங்களது இயலாமையை மறைப்பதற்காக என்னையும் ஸஹ்ரானையும் இணைத்து விமர்சனங்களை பரப்பி வருகின்றனர். அப்பாவி நாட்டுப்புற சிங்கள மக்களின் வாக்குகளை கொள்ளையடிப்பதற்கு அவர்களுக்கு வேறு வழி தெரியவில்லை என்று சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

சஜித் பிரேமதாசவின் தேர்தல் பணிமனை முன்னாள் அமைச்சர் ஏ.எச்.எம். பௌசியால் நேற்றுமுன்தினம் இரவு மாளிகாவத்தையில் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ராஜபக்ச அரசில் இடம்பெற்றது போல, ஆள்களை கடத்திச் சென்று காணாமலாக்கி மறுநாள் கொன்றுவிட்டு காட்டுக்குள் புதைக்கின்ற சம்பவங்கள் எங்களது ஆட்சியில் நடைபெறவில்லை. சமூகத்தில் இருக்கும் தீயதை ஒழிப்பதற்கு ஒரு நியாயமான முறை இருக்கிறது. அதை அரசு பின்பற்ற வேண்டும்.

ஆட்சியை பின் கதவால் பறிப்பதற்கு எதிர்க்கட்சியினர் நாடாளுமன்றத்தில் மேற்கொண்ட அட்டகாசம் போன்றதொரு விடயத்தை எனது 25 வருட நாடாளுமன்ற வாழ்க்கையில் கண்டதில்லை. எதிர்க்கட்சியில் இருக்கும் போதே இவ்வளவு அட்டகாசம் புரிந்தவர்கள் ஆளும் கட்சியில் இருந்தால் நிலைமை இன்னும் தலைகீழாக மாறும். இத்தகையவர்களிடம் ஆட்சியைக் கொடுத்தால், நாம் இதைவிட பல மடங்கு விளைவுகளை சந்திக்க நேரிடும் என்பதை சிந்தித்து வாக்களிக்க வேண்டும்.

கடந்த தேர்தலில் மகிந்தவை வீட்டுக்கு அனுப்புவதற்கு மக்கள் மும்முரமாக செயற்பட்டு வாக்களித்தார்கள். கல்முனை, மூதூர் பிரதேசங்களில் அதிகூடிய வாக்களிப்பு வீதம் பதிவாகியது. அதைவிட கூடுதலான வேகத்துடன் இந்த தேர்தலிலும் மக்கள் வாக்களிக்க வேண்டும். அதன்மூலம் ராஜபக்ச குடும்பத்தை மீண்டும் வீட்டுக்கு அனுப்ப வேண்டும்.

எதிர்கட்சியினர் தங்களது இயலாமையை மறைப்பதற்காக என்னையும் சஹ்ரானையும் இணைத்து விமர்சனங்களை பரப்பி வருகின்றனர். அன்று காத்தான்குடியில் ஹிஸ்புல்லாஹ்வால் மேற்கொள்ளப்பட்ட கலவரத்தில் பாதிக்கப்பட்டவர்களை பார்வையிடுவதற்கு மருத்துவமனைக்குச் சென்றிருந்தேன்.

காத்தான்குடிக்குச் சென்ற என்னுடன் பொலிஸாரும் சுதந்திரக் கட்சியின் அமைப்பாளரும் வருகை தந்திருந்தனர். அவர் இப்போது மொட்டுக் கட்சியின் அமைப்பாளராக இருக்கிறார். ஸஹ்ரானோ அவரது சகோதரனோ தீவிரவாதி என்று 2015 இல் எனக்கோ அல்லது என்னுடன் வந்தவர்களுக்கோ தெரிந்திருக்க வாய்ப்பில்லை.

எனது நற்பெயருக்கு களங்கம் விளைவித்து, மக்கள் மத்தியில் வாக்குகளைச் சிதறடிப்பதற்காக எதிரணி செய்த லீலை தான் இந்த விசமப் பிரசாரம். இதனால் அப்பாவி நாட்டுப்புற சிங்கள மக்களை உசுப்பேற்றி வாக்குச் சேகரிக்கவே இப்படியான காரியங்களைச் செய்கின்றார்கள். வாக்குகளை அதிகரிப்பதற்கு அவர்களிடம் வேறு யுக்திகள் இல்லை என்பது தெரிந்துவிட்டது.

சிறுபான்மை மக்களின் வாக்குகள் ஒருபோதும் அவர்களுக்குக் கிடைக்காது. ஆகவே, இவ்வாறான களங்கத்தை ஏற்படுத்தி, பெரும்பான்மை மக்கள் மத்தியில் எனக்குள்ள நற்பெயருக்கு பங்கம் விளைவிப்பதற்கு முயற்சிக்கின்றனர். இதனை மக்கள் நன்றாக தெரிந்து வைத்துள்ளனர். இந்த ராஜபக்ச கும்பலை விரட்டியடிப்பதற்கு சஜித் பிரேமதாசவை அதிகப்படியான வாக்குகளால் நாம் வெற்றிபெறச் செய்வோம் - என்றார். (ஒ,5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## தமிழர்களின்...

தேர்தல் அறிக்கையில் வழங்கியுள்ளனர். தமிழர் - முஸ்லிம்கள் சகோதரத்துவம் என்ற அம்சத்தின் கீழ் வடக்கு- கிழக்கு விவகாரங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**மனிதாபிமானப் போர்**

நாம் ஒருபோதும் வடக்கின் தமிழ் மக்களுக்கு எதிராகப் போரைச் செய்யவில்லை. முப்பது வருடகாலமாக பயங்கரவாதத்தால் பாதிக்கப்பட்டிருந்த மக்களை விடுவித்துக் கொள்வதற்காக மனிதாபிமான நடவடிக்கையை மேற்கொள்வது மட்டுமே எமது நோக்கமாக இருந்தது. அதுவும் தற்போது கடந்த காலத்துக்கு உரித்தானதொன்று மாத்திரமே. ஆனாலும், அதுதொடர்பிலான எமது பொறுப்பு கூறல் மற்றும் பொறுப்பாகுதல் என்பவற்றை நாம் ஒருபோதும் குறைத்து மதிப்பிடுவதில்லை.

மனிதாபிமான நடவடிக்கையின் போது இடம்பெற்றுள்ள தவறுகள், குறைபாடுகளை நிவர்த்தி செய்து கொள்வதற்கு தேவையான செயற்பாடுகளை எடுக்கின்ற அதேநேரம், காய்ந்து வறண்ட நிலத்தில் தூசுகளுக்கு மத்தியில் எழுந்து நிற்கின்ற அச்சமோ, சந்தேகமோ அற்ற போதிய வசதிகளுடன் கூடிய சுபீட்சமான ஒரு பகுதியாக வடக்கு - கிழக்கு மாகாணங்களை கட்டியெழுப்புவது இன்று எமது தேவையாக இருக்கின்றது.

**பொருளாதாரம்**

யாழ்ப்பாணம் மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்கள் தவிர்ந்து, 2014ஆம் ஆண்டுக்கு முன்பதாக வறுமைக்கோட்டின் மேலிருந்த கிளிநொச்சி மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களிலும் தற்போது அந்த நிலையிலிருந்து கீழ் நோக்கி வீழ்ந்துள்ளன. 2015ஆம் ஆண்டு இப்பகுதி மக்களின் வாக்குகளை பெற்றுக் கொள்வதற்காக அரசியல் கலந்துரையாடலுக்காக வழங்கப்பட்டிருந்த உயர்ந்த இடத்தை, கடந்த காலங்களில் மக்களது பொருளாதார நிலையை உயர்த்துவதற்காக வழங்கப்பட்டிருக்கவில்லை என்பது இதிலிருந்து தெரிய வருகின்றது. ஏனைய அனைத்து பகுதிகளுக்கும் சமாந்தரமான வகையில் இப்பகுதி மக்களையும் பொருளாதார அபிவிருத்தி ரீதியில் உயர தூக்கி வைப்பது எமது கொள்கையாகும்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மக்களது வாழ்வாதார வழிகள் மற்றும் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு, அவசியமான பலத்தை கொடுக்கின்ற வகையில் 'மறுவாழ்வு நிதியம்' ஒன்று ஆரம்பிக்கப்படும். அதன் கீழ், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் போர் காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ள வடக்கு, கிழக்கு மக்களுக்கு வீடுகளை வழங்குவது மற்றும் நுண்நிதிக் கடன்கள் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள பெண்கள் உட்பட வடக்கு, கிழக்கு குடும்பங்களின் பெண்களுக்கென அரச தலையீட்டின் ஊடாக பல்வேறு தொழில் முயற்சிகளுக்கான இலகு கடன் மற்றும் விவசாய செய்கைக்கென கடன் வழங்குதல், மறுவாழ்வு அளிக்கப்பட்டுள்ள வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள இளையோருக்கு தங்களது வாழ்க்கையை வெற்றி கொள்வதற்காக, வர்த்தக நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கென தேவையான முதலீடுகளை வழங்குவது மற்றும் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள மனிதாபிமான நடவடிக்கையின் போது பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கென வழங்கப்படுகின்ற இழப்பீட்டு தொகையை அதிகரித்து வழங்குதல்.

இம் மாகாண இளையோருக்கு தொழில் வாய்ப்புகளை பெற்றுக் கொடுப்பதற்கென எம்மால் ஆரம்பிக்கப்படுகின்ற பொருளாதார அபிவிருத்தி வலயங்களில் அல்லது வேறெனும் இடங்களில் பெரிய மற்றும் நடுத்தர கைத் தொழில்களுக்கென மூலதன முதலீட்டை வழங்குவது, மற்றும் இளையோருக்குத் தேவையான தொழிற் பயிற்சி அல்லது தொழில் ரீதியிலான கல்வியை பெற்றுக் கொள்வதற்கென தொழில் ஒன்றை மேற்கொள்கின்ற நிலையில் செலுத்தத்தக்கதான கடன் தொகையை வழங்க நடவடிக்கை எடுத்தல்.

**காணி விடுவிப்பு**

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அரசால் கையகப்படுத்தப்பட்டுள்ள தனியார் காணிகள், அவற்றின் உரிமையாளர்களிடம் விடுவித்துக் கொடுக்கப்படுவதுடன் பெரிய மற்றும் நடுத்தர விவசாய செய்கைகளுக்கென அரச காணிகள் குத்தகை அடிப்படையில் வழங்கப்படும். அத்துடன், விவசாய மக்கள் விவசாய செய்கைகளில் ஈடுபடுவதற்கென அனுமதிப்பத்திர காணிகள் வழங்கப்படும்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அரச தொழில்வாய்ப்புகளின் வெற்றிடங்களை நிரப்பும் போது போதிய வரையில் அப்பகுதி இளையோருக்கு முதலிடம் வழங்கப்படுவதுடன் அப்பகுதிகளில் பணியாற்றுவதற்கென இலங்கை பொலிஸ் சேவையில் இணைத்துக் கொள்ளும் போது மொழி மூல அறிவாற்றல் அவதானத்தில் கொள்ளப்படும்.

இவ்விரு மாகாணங்களிலும் தேசிய தொழில் முயற்சியாளர்கள், விவசாய உற்பத்திகளுக்கு பெறுமதி சேர்ப்பதற்கும், அதேபோன்று சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளை ஆரம்பிப்பதற்குமாக பொருளாதார வலயங்களை உருவாக்குதல்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வாழுகின்ற இளையோரது பிரச்சினைகளை இனங்கண்டு அவர்களது எதிர்கால அபிலாசைகளை நிறைவேற்றுவதை உறுதி செய்வதற்காக பல்கலைக் கழக பயிற்சிக் கல்லூரி, தொழில்சார் கல்விக் கல்லூரி, உயர்தொழில் நுட்ப கல்லூரி, தகவல் தொழில் நுட்ப மற்றும் விவசாய ஆராய்ச்சி நிறுவகங்கள் என்பன உருவாக்கப்பட்டு அவர்களுக்குத் தேவையான அறிவு மற்றும் பயிற்சிகளை பெறுவதற்கான வாய்ப்புகள் பரவலாக்கப்படும்.

**யாழில் தாமரைத் தடாகம்**

நடனம், நாடகம் மற்றும் நிகழ்ச்சிகளை நடத்துதல், அத்துறைகள் சார்ந்து பயிற்சி பெறுதல் மற்றும் கற்பித்தல் போன்றவற்றுக்கு வசதியளிக்கின்ற நவீன வசதிகளைக் கொண்ட 'தாமரை தடாகம்' ஒன்றினை யாழப்பாணத்தில் நிர்மாணிப்பதுடன் பன்னாட்டுத் தரத்திலான விளையாட்டு மைதானமும், உயர்தரத்திலான கிரிக்கெட் விளையாட்டு மைதானமும் இவ் விரு மாகாணங்களுக்கும் வழங்கப்படும்.

**கடற்றொழில்**

ஆழ்கடல் கடற்றொழிலை வளர்த்தெடுப்பதற்கென நீண்ட நாள்கள் படகுகளை நிறுத்தி வைப்பதற்கு வசதியாக தற்போதுள்ள அனைத்து கடற்றொழில் துறைமுகங்களும் நவீனமயப்படுத்தப்படும். அத்துடன், தேவை கருதி புதிய கடற்றொழில் துறைமுகங்களை அமைத்தல்.

பன்னாட்டுக் கடலில் கடற்றொழிலில் ஈடுபடுவதனை ஊக்குவிக்கின்ற வகையில் தேசிய நிறுவனங்களை அதன்பால் ஈர்ப்பதற்கு மீன்கள் நடமாடும் இடங்களை அறிந்து கொள்வதற்கான நவீன தொழில் நுட்பம் மற்றும் நவீன செயற்பாடுகள் கொண்ட விருத்திச் செய்யப்பட்ட நீண்ட நாள்கள்படகுகள்சில அறிமுகப்படுத்தப்படும்.

இலங்கையிலுள்ள அனைத்து கடற்றொழில் துறைமுகங்கள், இறங்குதுறைகள் மற்றும் கடலுற்பத்திகளை கரையேற்றுகின்ற இடங்கள் தோறும் நவீன தொழில் நுட்ப வசதிகள், குளிரூட்டி அறைகள், எரிபொருள் வழங்கும் நிலையங்கள், சுகாதார வசதிகள் கொண்ட இடங்களாக மாற்றி அமைக்கப்படும்.

பெரிய அளவிலான நீண்ட நாள்கள் படகுகளை கட்டுவதற்கும், பராமரிப்பதற்குமான வலயமொன்று திருகோணமலை துறைமுகத்தை அண்டியதாக அமைக்கப்படும்.

கடலுற்பத்திகளை பாதுகாப்பாக கரைக்கு கொண்டு வருதல், பாதுகாப்பாக கரையில் இறக்குதல், போக்குவரத்தில் ஈடுபடுத்தல், காலம் தாழ்த்தி வைத்துக் கொள்ளல் போன்ற துறைகளை மேம்படுத்துவதற்கென கடற்றொழில் அமைச்சின் ஊடாக வட்டியில்லாத கடன் வழங்கப்படும்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அனுமதியின்றி கடற்றொழிலில் ஈடுபடுவதை நிறுத்தும் வகையில் இலங்கை கடற்படை மற்றும் கரையோர பாதுகாப்பு படையணி பலப்படுத்தப்படுவதுடன், இந்திய அரசுடன் இணைந்து புதிய பாதுகாப்பு வேலைத்திட்டமொன்றை மிக விரைவில் செயற்படுத்தல்.

கடற்றொழிலாளர்களுக்கு மிகவும் பயனுடையதாக காப்புறுதி முறைமையொன்றை அறிமுகப்படுத்தல்.

**தேசிய ஒற்றுமைக்கு வழிகூறும் ஜனநாயக ஆட்சி**

தற்போதைய அரசமைப்புத் தொடர்பில் சமூகத்தில் பிரபலமான விமர்சனங்கள் நிலவுகின்றன. அதனது குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கென கொண்டு வரப்பட்ட 19 ஆது திருத்தச் சட்டத்தின் மூலமாக, பிரச்சினைகளைத் தீர்க்கப் போய் இல்லாத பிரச்சினைகளை உருவாக்கிக் கொண்டமையே நிகழ்ந்திருக்கின்றது. உலக வல்லாதிக்கத்தினரதும், பன்னாட்டு அரசசார்பற்ற நிறுவனங்களினதும் அபிலாசைகளுக்கு பதிலாக மக்களது அபிலாசைகளின் அடிப்படையிலான புதியதொரு அரசமைப்பை அறிமுகப்படுத்துவதற்கு நாம் நடவடிக்கை எடுப்போம். எமது மக்களினதும், பல்வேறு அரசியல் கட்சிகளினதும், எமது மக்கள் அமைப்புகளினதும் யோசனைகள் பெறப்பட்டு புதிய அரசமைப்பை உருவாக்குவதற்காக நாடாளுமன்றத்தில் அனைத்து கட்சிகளையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற தெரிவுக் குழுவொன்றை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

நிறைவேற்று அதிகார அரச தலைவர் முறைமை, தேர்தல் முறைமை, மாகாண சபை முறைமை, சட்டத்தின் ஆதிபத்தியத்தை பலப்படுத்துதல் போன்ற துறைகள் அனைத்தும் அரசமைப்பு வகுத்தலின் போது அவதானத்தில் எடுத்துக் கொள்ளப்படும்.

மக்கள் அபிப்பிராய வாக்கெடுப்பு ஒன்றின் மூலமாக உங்களது அனுமதி கிடைத்தால் மாத்திரமே மேற்படி அரசமைப்பை சட்டமாக ஆக்குவதற்கு நான் கையொப்பம் இடுவேன்.

இன மற்றும் மதக் குழுக்களிடையே ஏற்படுகின்ற அவநம்பிக்கைகள் கொடிய மோதல்கள் வரையில் வளருவதை தவிர்க்கும் நோக்கில் அரச தலைவர் தலைமையில் முன்னெடுக்கப்படுகின்ற சர்வமத ஆலோசனை சபையொன்று அமைக்கப்படும். அதேபோன்று மாவட்ட மற்றும் பிரிவுகள் மட்டத்தில் சர்வமத சபைகளை உருவாக்கி, மதக் குழுக்களிடையே ஏற்படுகின்ற பிரச்சினைகளை கலந்துரையாடல்களின் மூலமாக சுமூகத் தீர்வுக்கு வரக் கூடிய வகையிலான பொறிமுறை ஒன்றை உருவாக்குதல்.

**மறுவாழ்வு**

ஆயுதங்களுடன் சரணடைந்த 13 ஆயிரத்து 784 புலிகள் இயக்க உறுப்பினர்களுக்கு மன்னிப்பு வழங்கப்பட்டு, மறுவாழ்வளித்து சமூகமயப்படுத்துவதற்கு நாங்கள் நடவடிக்கை எடுத்திருந்தும், போர் கால கட்டத்தின் போது பல்வேறு குற்றச்சாட்டுகளுக்கு உட்பட்ட இராணுவ உறுப்பினர்கள் தொடர்பில் அவ்வாறானதொரு நடவடிக்கை எடுக்கவில்லை. போர் தொடர்பில் பல்வேறு குற்றச்சாட்டுகளுக்கு ஆளாகியிருக்கும் மற்றும் தண்டனைகளை அனுபவித்து வருகின்ற இராணுவ உறுப்பினர்களைப் போன்றே தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்களையும் படிப்படியாக மறுவாழ்வுக்கு உட்படுத்தப்பட்டு சுதந்திர குடிமக்களாக சமூகமயப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

பயங்கரவாத குற்றச்சாட்டுகளின் கீழ் கைது செய்யப்பட்டு நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைவருக்கும் மூன்று மாதங்களுக்குள் வழக்குத் தாக்கல் செய்வதற்கு அல்லது அவர்களை விடுவிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இனங்களுக்கிடையில் சந்தேகங்களை வளர்க்கின்ற முக்கிய விடயமாக காணிப் பிரச்சினை இனங் காணப்படுகின்ற அதே நேரம், இந்த காணி வளமானது கடந்த காலங்களில் எமக்கு உரித்தான சொத்து என்பதைவிட எதிர்காலத்திடமிருந்து பெற்றுக் கொண்ட கடனை போன்றே தென்படுகின்றது. எனவே காணி தொடர்பிலான பயன்பாடு மிகவும் திட்டமிட்டதாக மேற்கொள்ளப்படல் வேண்டும். இதற்கென, பாரம்பரிய மற்றும் தொல்பொருள் முக்கியத்துவம், கனிய உள்ளடக்கங்கள், நகரமயமாக்கல், உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி, எதிர்காலத் தேவைகள் போன்ற விடயங்களை அடிப்படையாகக் கொண்டு காணி பயன்பாட்டுத் திட்டமொன்றை தேசிய, மாகாண மாவட்ட மற்றும் பிரதேச மட்டங்களில் வகுப்பதற்கென தேசிய காணி ஆணைக்குழுவொன்று உருவாக்கப்படும்.

இனங்களுக்கிடையிலான சந்தேகங்களுக்கு முக்கிய காரணம் தொலைத் தொடர்பாடல் இல்லாமை காரணமாக ஏற்பட்ட புரிந்துணர்வு இன்மையாகும். எனவே, சிங்கள மொழியில் கல்வி கற்கின்ற பிள்ளைகளுக்கு தமிழ் மொழியையும், தமிழ் மொழியில் கல்வி கற்கின்ற பிள்ளைகளுக்கு சிங்கள மொழியையும் கற்பிப்பதற்குத் தேவையான அனைத்து வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டு, மேற்படி மொழிகளில் கற்பது கட்டாயமாக்கப்படும். (ஒ.5)

## ஒற்றையாட்சி...

'ஒற்றை ஆட்சி, பௌத்த மதத்துக்கான முதலிடம், மத சுதந்திரம் உட்பட அடிப்படை மனித உரிமைகள் அரசமைப்பின் முக்கிய இலட்சனங்களாகும்' என்று தேர்தல் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் அரச தலைவர் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்சவின் தேர்தல் அறிக்கை கொழும்பு தாமரைத் தடாக அரங்கில் நேற்றுக் காலை வெளியிடப்பட்டது. இந்த அறிக்கையில் புதிய அரசமைப்பு உருவாக்கம் முன்னெடுக்கப்படும் என்றும், அதற்காக நாடாளுமன்றத் தெரிவுக் குழு அமைக்கப்படும் என்றும் கூறப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள் 5 இணைந்து உருவாக்கியுள்ள பொது ஆவணத்தில் 13 அம்சக் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. அதில் பிரதானமாக, ஒற்றையாட்சியை நிராகரிப்பதையும், கூட்டாட்சி (சமஷ்டி) தீர்வே தேவை என்று அழுத்தம் திருத்தமாக வலியுறுத்தப்பட்டிருந்தது. இவ்வாறானதொரு நிலையில், அரச தலைவர் தேர்தலில் போட்டியிடும் பிரதான எதிர்தரப்பு வேட்பாளரான கோத்தபாய ராஜபக்சவின் தேர்தல் அறிக்கையில், ஒற்றையாட்சி தொடர்ந்தும் பேணி பாதுகாக்கப்படும் என்று கூறப்பட்டுள்ளது. (ஒ.5)

## கிளிநொச்சியில்...

கள் மீறல் தொடர்பான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ள தாக கிளிநொச்சி மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார். தேர்தல் இடம்பெறும் காலம் மழை காலம் என்பதால், மழை [illegible] சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்பட [illegible]டிய முன்னேற்பாடுகள் செய்யப்[illegible] ளன என்றும் அவர் குறிப்பிட்டார். [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்ணை எரித்துக் கொன்ற வழக்கில் 16 பேருக்குச் சாவுத் தண்டனை விதிப்பு!

## குறுகிய காலத்தில் பங்களாதேஷ் நீதிமன்றம் தீர்ப்பு



டாக்கா, ஒக்.26
பங்களாதேஷின் தலைநகர் டாக்காவிலிருந்து 160 கிலோமீற்றர் தூரத்திலுள்ள வ்பெனி என்ற கிராமத்தில், 19 வயதான நஸ்ரத் ஜஹான் ரவ்பி எனும் மாணவி கடந்த ஏப்ரல் மாதம் எரித்துக் கொல்லப்பட்டார். அது தொடர்பான வழக்கில் 16 பேருக்குச் சாவுத் தண்டனை விதித்து பங்களாதேஷ் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது:

தனது கல்லூரி ஆசிரியர் மீது பாலியல் குற்றச்சாட்டை முன்வைத்த நஸ்ரத் ஜஹான் ரவ்பி அச்சுறுத்தல்களுக்கு ஆளானார். அது குறித்து அவர் பொலிஸில் முறையிட்டார். அதன் பின்னர் அவர் எரித்துக் கொல்லப்பட்டார். பாலியல் துன்புறுத்தல் தொடர்பாக நஸ்ரத் முறைப்பாடு அளித்த பின், பதவி பறிக்கப்பட்ட தலைமை ஆசிரியர் சிராஜ் உத் டூலா உட்பட மூன்று ஆசிரியர்கள் சிறையில் அடைக்கப்பட்டதாகவும், அங்கிருந்த அவர்கள் நஸ்ரத்தை கொலைசெய்வதற்கு ஆள்களை ஏவியதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

தற்போது இந்த மூன்று ஆசிரியர்கள், இரண்டு வகுப்புத் தோழிகள் மற்றும் பங்களாதேஷை ஆளும் அவாமி லீக் கட்சியைச் சேர்ந்த இரண்டு உள்ளூர்த் தலைவர்கள் உட்பட 16 பேர் இந்த வழக்கில் தண்டனை பெற்றுள்ளனர்.

மேலும், தற்போது தண்டனை பெற்றவர்களுடன் கூட்டுச் சேர்ந்து, நஸ்ரத் உயிரை மாய்த்துக்கொண்டார் என்று தவறான தகவலைச் சில பொலிஸ் அதிகாரிகள் பரப்பியதும் கண்டறியப்பட்டுள்ளது. பங்களாதேஷைப் பொறுத்தவரை, இது போன்ற வழக்குகள் நடந்து முடிவதற்குப் பல ஆண்டுகள் ஆகும். இருப்பினும், நஸ்ரத் சாவு தொடர்பான வழக்கு ஆறு மாதங்களில் நடத்தி முடிக்கப்பட்டுத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

நஸ்ரத்தின் சாவு பங்களாதேஷில் மிகப் பெரிய அதிர்வலைகளை ஏற்படுத்தியதைத் தொடர்ந்து நஸ்ரத்துக்கு நீதி கோரி அந்த நாடு முழுவதும் போராட்டங்கள் நடைபெற்றன.

அந்தப் போராட்டங்கள் காரணமாகவே இந்த வழக்கில் விரைந்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ள தாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால், தாங்கள் மேல்முறையீடு செய்யப்போவதாகக் குற்றம்சாட்டப்பட்டவர்கள் தரப்பு வழக்கறிஞர்கள் தெரிவித்தனர்.



# அழுத்தத்தை அதிகம் கொடுத்தால் ஈரான் பேச்சு மேடைக்கு வரும்!

## சவூதி தெரிவிப்பு

றியாத், ஒக்.26
ஈரானுக்கு அதிகளவில் அழுத்தத்தை வழங்கினால் மட்டுமே அது பேச்சில் ஈடுபடுவதற்கு இறங்கி வரும் என்று சவூதி அரேபியா தெரிவித்தது. ஈரானைத் திருப்திப்படுத்துவதில் வேலையில்லை என்று நினைக்கிறோம்.

செயலின் மூலம்தான் காட்ட வேண்டும். வெறும் சொல்லால் அல்ல. ஈரானுக்கு அளிக்கும் அதிகப்படியான அழுத்தம் மட்டுமே அந்த நாட்டைப் பேச்சில் ஈடுபட வைக்கும்- என்று சவூதி அரச தரப்புப் பிரதிநிதிகளால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவுடன் பேச்சில் பங்கேற்க வேண்டுமெனில் அதற்கு முதலில் தங்கள் மீதான பொருளாதாரத் தடையை நீக்க வேண்டும் என்று ஈரான் தொடர்ந்து கூறி வருவது குறிப்பிடத்தக்கது.



# கலிபோர் னியாவில் தொடர் காட்டுத்தீ!

வோஷிங்டன், ஒக்.26
அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் கடுமையான காட்டுத்தீ பரவி வருகிறது. அந்தப் பகுதியில் இருந்து இதுவரை பல்லாயிரக் கணக்கானவர்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர். கலிபோர்னியாவின் சோனோமா பகுதியில் 10 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பை ஆக்கிரமித்துள்ள இந்தத் தீயை இன்னும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியவில்லை என்று மாநிலத் தீயணைப்புத் துறை தெரிவித்தது. பெருங்காற்றால் பரவி வரும் இந்தக் காட்டுத்தீ தெற்கு நோக்கி நகர்வதாகக் கலிபோர்னியாவின் தீயணைப்புத் துறைச் செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.



# போராட்டக்காரர்களைப் பேச்சுக்கு அழைக்கிறார் லெபனான் அதிபர்

பெய்ருட், ஒக்.26
அரசுக்கு எதிராகப் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் போராட்டக்காரர்களைப் பேச்சுக்கு அழைத்துள்ளார் லெபனான் அதிபர் மிச்செல் அவுன். லெபனானில் நிலவும் பொருளாதார நெருக்கடி, ஊழல் காரணமாக அரசை எதிர்த்துப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றவர்களையே அவர் பேச்சுக்கு வருமாறு அழைத்தார். இந்தப் போராட்டங்களால் வன்முறைச் சம்பவங்கள் லெபனானில் அதிகரித்து வரும் நிலையில் போராட்டக்காரர்களைப் பேச்சுக்கு அழைத்துள்ளார் லெபனான் அதிபர். இதுகுறித்து அவர் தெரிவித்ததாவது:

ஊழலுக்கு எதிராக லெபனான் அரசு போரிடும். தற்போதுள்ள அரசைப் பற்றிய மதிப்பீடு தேவைப்படுகிறது. ஊழலை எதிர்த்து வரும் புதிய சட்டங்களுக்கு நிச்சயம் ஆதரவு அளிக்கப்படும். உங்கள் போராட்டம் நிச்சயம் வீணாகாது. போராட்டக்காரர்களே உங்கள் பிரதிநிதிகளைச் சந்திக்க நான் தயாராக இருக்கிறேன். உங்கள் வேண்டுகோளைக் கேட்கத் தயாராக இருக்கிறேன் - என்றார்.





கலிபோர்ணியாவில் ஏற்பட்டுள்ள காட்டுத்தீ குறித்த ஒளிப் படத் தொகுப்பை வெளியிட்டது பன்னாட்டு ஊடகமான ரொய்டர்ஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிவியாவின் அதிபராக 4ஆவது முறையும் மோரல்ஸ்!

## முறைகேடு நடந்திருப்பதாகக் கூறிப் போராட்டம் தொடர்கிறது



பியூனஸ் அயர்ஸ்,ஒக்.26
தென் அமெரிக்க நாடான பொலிவியாவில் கடந்த ஞாயிற்றுக் கிழமை நடந்த அதிபர் தேர்தலில் தற்போதைய அதிபர் இவோ மோரெல்ஸ் மீண்டும் வெற்றி பெற்ற தொடர்ந்து 4ஆவது தடவையும் அந்த நாட்டின் அதிபரானார். இந்தத் தேர்தலில் தற்போதைய அதிபர் இவோ மோரல்ஸ் (சோசலிச இயக்கம்), முன்னாள் அதிபரும் புரட்சிகர இடது முன்னிணி தலைவருமான கார்லஸ் மெசா ஆகியோருக்கிடையே கடும் போட்டி நிலவியது. ஆனாலும் தற்போதைய அதிபர் இவோ மோரல்ஸ் 47.07 சதவீத வாக்குகள் பெற்று வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. கார்லஸ் 36.51 சதவீத வாக்குகளே பெற்றார்.

**எதிர்க்கட்சியினர் போராட்டம்**

பொலிவியாவின் தேர்தல் ஆணையகம் வெளியிட்ட தகவலின்படி தேர்தலில் தான் வெற்றி பெற்றுவிட்டதாக அதிபர் இவோ மோரல்ஸ் அறிவித்தார்.
தேர்தல் முடிவை மெசா ஏற்கவில்லை. வாக்கு எண்ணிக்கையில் முறைகேடு நடந்திருப்பதாகக் குற்றம் சாட்டினார்.
வாக்கு எண்ணும் நடைமுறைகளை விமர்சித்து அங்கு போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. இதனால் பொலிவியாவில் அமைதியற்ற சூழல் நிலவுகிறது.

# காஷ்மீரில் ஓட்டுநர்கள் இரண்டு பேர் சுட்டுக்கொலை!

காஷ்மீர்,ஒக்.26
இந்தியாவின் கட்டுப்பாட்டில் உள்ள காஷ்மீரில் ஷோபியான் மாவட்டத்துக்கு அப்பிள் ஏற்றிச் செல்வதற்காகச் சென்ற பாரவூர்தி ஓட்டுநர்கள் இரண்டு பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். மேலும் ஓர் ஓட்டுநர் துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்தார்.
இது குறித்து மேலும் தெரிய வருவதாவது:
இந்தியாவின் ராஜஸ்தான், பஞ்சாப் மற்றும் ஹரியாணா மாநிலங்களில் இருந்து வந்த மூன்று பாரவூர்திகள் ஷோபியான் மாவட்டத்தின் சித்ரா என்ற கிராமத்தில் கடந்த வியாழக்கி ழமை மாலை அப்பிள் ஏற்றியபோது இந்தச் சூட்டுச் சம்பவம் நடந்தது. கொல்லப்பட்டவர்களில் ஒருவர் அடையாளம் காணப்பட்டுள்ளார். அவர் ராஜஸ்தான் மாநிலத்தைச் சேர்ந்தவர் என்று தெரிவிக்கப்படுகிறது.
காஷ்மீர் மாநிலத்துக்கு இந்தியாவழங்கிவந்தசிறப்புரிமை நீக்கப்பட்ட பிறகு, காஷ்மீர் முழுதும் இந்திய இராணுவப் பிடிக்குள் இருந்துவரும் நிலையில் இந்தச் சம்பவம் நடந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இரண்டு தொகுதிகளிலும் அ.தி.மு.காவுக்கு வெற்றி!

புதுடெல்லி,ஒக்.26
இந்தியாவின் தமிழ்நாட்டில் நாங்குநேரி, விக்கிரவாண்டி ஆகிய இரண்டு தொகுதிகளுக்கு இந்தமாதம் 21ஆம் திகதியன்று இடைத்தேர்தல் நடைபெற்றது. இந்த இரண்டு தொகுதிகளிலும் அ.தி.மு.க. வேட்பாளர்கள் வெற்றிபெற்றனர்.
விக்கிரவாண்டித் தொகுதியில் முத்தமிழ்ச் செல்வன் 44ஆயிரத்து 924 வாக்குகள் வித்தியாசத்திலும், நாங்குநேரி தொகுதியில் நாராயணன் 33ஆயிரத்து 445 வாக்குகள் வித்தியாசத்திலும் தங்களை எதிர்த்துப் போட்டியிட்ட முறையே தி.மு.க. மற்றும் காங்கிரஸ் வேட்பாளர்களை வீழ்த்தினர்.
நாங்குநேரியில் 3ஆயிரத்து 494 வாக்குகளுடன் மூன்றாவது இடத்தை நாம் தமிழர் கட்சி வேட்பாளர் ராஜா நாராயணன் பெற்றார். தமிழக சட்டமன்றத்தில் ஆளும்கட்சி மிகக் குறைவான பெரும்பான்மையிலேயே ஆட்சி நடத்திவரும் நிலையில் இந்தத் தொகுதிகளின் இடைத் தேர்தல் முடிவுகளால் சட்டமன்றத்தில் எந்த ஒரு மாற்றத்தையும் ஏற்படுத்த முடியாது என்பது குறிப்பிடத்தக்கது.







சிரியாவின் வடபகுதியில் துருக்கி மேற்கொண்டுவருகின்ற தாக்குதல்களால் அங்குள்ள மக்கள் பெரும் இடர்களை எதிர்நோக்குகின்றனர். பலர் இடம்பெயர்கின்றனர்.

# இன்றைய நாள்

**மேடம்:** உறவினரின் மாறுபட்ட செயல் வியப்பை தரலாம். தொழில், வியாபாரத்தில் நிதான அணுகுமுறை நல்லது. பணவரவு பெறுவதில் தாமதம் இருக்கும். அதிக பயன்தராத பொருள் விலைக்கு வாங்க வேண்டாம்.

**இடபம்:** உங்கள் மனம் விரும்பாத நிகழ்ச்சியில் ஒதுங்கி இருப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் கூடுதல் பணிபுரிவது அவசியம். சேமிப்பு பணம் அத்தியாவசியமான செலவுகளுக்கு பயன்படும்.

**மிதுனம்:** உங்கள் மனதில் இருந்த தயக்கம் விலகும். செயல்களில் கூடுதல் நன்மை பெறுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியில் புதிய சாதனை உருவாகும். தாராள பணவரவில் சேமிப்பு கூடும்.

**கடகம்:** முக்கிய செயலை பிறரிடம் ஒப்படைக்க வேண்டாம். தொழில், வியாபாரம் செழிக்க கூடுதல் உழைப்பு உதவும். பணவரவு சராசரி அளவில் கிடைக்கும். வாகனத்தில் பராமரிப்பு பணிகள் பயணத்தை எளிதாக்கும்.

**சிம்மம்:** இஷ்டதெய்வ அனுகூலத்தினால் நன்மை பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி செய்வீர்கள். குடும்பத்தின் தேவையை நிறைவேற்றுவதால் ஒற்றுமை வளரும்..

**கன்னி:** உங்களின் இரக்க குணத்தை சிலர் ஏளனம் செய்வர். முக்கியமான பணி அதிக முயற்சியினால் நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் சராசரி பணவரவு கிடைக்கும். நீண்ட தூர பயணங்களில் பாதுகாப்பு பின்பற்றவும்.

**துலாம்:** உங்கள் மனதில் சந்தோஷம் நிறைந்திருக்கும். தொழிலில் உற்பத்தி, விற்பனை செழிக்கும். குடும்பத்தில் சுபநிகழ்ச்சி நடத்த திட்டமிடுவீர்கள். பணவரவு திருப்திகரமாகும்.

**விருச்சிகம்:** எந்த செயலையும் சவாலாக அணுகுவீர்கள். தொழில், வியாபாரம் செழித்துசமூகத்தில்அந்தஸ்துஅதிகரிக்கும். அரசியல்வாதிகள் பதவி பெற அனுகூலம் உண்டு.

**தனுசு:** எவருக்கும் வாக்குறுதி கொடுக்க வேண்டாம். தொழில், வியாபாரம் தாமதகதியில் இயங்கும். அளவான பணவரவு கிடைக்கும். உடல்நலத்திற்கு ஒவ்வாத உணவு உண்ண கூடாது.

**மகரம்:** பணி நிறைவேறுவதில் தாமதம் உருவாகலாம். தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும். சொத்து, ஆவணம் பிறர் பொறுப்பில் தர வேண்டாம்.

**கும்பம்:** பெரியவர்களின் வழிகாட்டுதல்களை பின்பற்றுவீர்கள். உங்களின் பொறுப்பான செயல் பாராட்டு பெறும். வீட்டு உபயோக பொருள் வாங்குவீர்கள்.

**மீனம்:** கருணை நிறைந்த மனதுடன் செயல்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வருகின்ற இடையூறு இஷ்ட தெய்வ அருளால் விலகும். சராசரி பணவரவுடன் நிலுவை பணமும் வசூலாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஒக்.26

யாழ்.கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் பிரான்ஸ் கால்பந்தாட்டச் சம்மேளம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் இன்று சனிக்கிழமை யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானம், அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலையை மைதானங்களில் இடம் பெறவுள்ளது.

இதில் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் காலை 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இமையாணன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.காலை 8.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஞானமுருகன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நசேரத் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. காலை 9.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் சென். நீக்கிலஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வட்டுக்கோட்டை விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.முற்பகல் 10.15 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சென்.பிலிப்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. முற்பகல் 11 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இளந்தளிர் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.முற்பகல் 11.45 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் ஞானமுருகன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சென்.லூட்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.நண்பகல் 12.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சென். நீக்கிலஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இரணைப்பாலை சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

பிற்பகல் 1.15 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கலைமதி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.மாலை 3 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் இமையாணன் மத்தியவிளையாட்டுக்கழகஅணியை எதிர்த்து இளந்தளிர் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. பிற்பகல் 3.45 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் நசரேத் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சென். லூட்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வட்டுக்கோட்டை விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இரணைப்பாலை சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மாலை 5.15 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் சென்.பிலிப்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கலைமதி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலையை மைதானத்தில் காலை 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.காலை 8.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் டயமன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்த அரியாலை ஐக்கியம் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.காலை 9.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சென். லூட்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

முற்பகல் 10.15 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பொலிகை பாரதி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

முற்பகல் 11 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து விடத்தல் தீவு ஐக்கிய விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.முற்பகல் 11.45 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில்டயமன்ஸ்விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சென். தோமஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

நண்பகல் 12.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வல்வை விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. பிற்பகல் 1.15 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வலைப்பாடு ஜெக மீட்பர் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.பிற்பகல் 3 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் குறிஞ்சிக்குமரன் கழக அணியை எதிர்த்து விடத்தல் தீவு ஐக்கிய விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. பிற்பகல் 3.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அரியாலை ஐக்கியம் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சென்.தோமஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சென்.லூட்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வல்வை விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மாலை 5.15 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் பொலிகை பாரதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வலைப்பாடு ஜெக மீட்பர் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (23)

---

யாழ்ப்பாணம், ஒக்.26

பருத்தித்துறை லீக்கின் அனுமதியோடு கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் சுப்பர் 8 சுற்றின் ஆட்டங்கள் கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இதில் இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கம்பர் மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (23)



# கோலூன்றிப் பாய்தலில் அனித்தாவுக்கு தங்கம்

45ஆவது தேசிய மட்ட விளையாட்டு விழாவின் ஓர் அங்கமான பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தல் போட்டியில் வடக்கு மாகாணத்தைப் பிரதிநிதித்துவம் செய்து அனித்தா தங்கப் பதக்கத்தைச் சுவீகரித்தார்.

நேற்று வெள்ளிக்கிழமை பதுளைவின்சன்டயஸ்விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்ற பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தல் போட்டியில் அனித்தா 3.30 மீற்றர் உயரத்தை கடந்து தங்கப் பதக்கம் வென்றார். கடந்த ஒன்றரை வருடங்களாக உபாதைக்கு உள்ளாகியிருந்த அனித்தா மேற்படி போட்டியில் தங்கப் பதக்கம் பெற்றார். இவருக்கான பயிற்சிகளை சுபாஸ்கரன் வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (23)



---

பள்ளிமுனை மகா வித்தியாலய

## கால்பந்து அணிக்கு 'ஜெர்சி' அன்பளிப்பு

கடந்த வருடம் தேசிய ரீதியில் பாடசாலைகளுக்கு இடையில் இடம்பெற்ற கால்பந்தாட்ட சுற்றுப் போட்டித் தொடரில் வெற்றியீட்டி முதலாமிடத்தை பெற்று நடப்பு சம்பியனாக உள்ள மன்னார் பள்ளிமுனை மகா வித்தியாலய கால்பந்து அணிக்கு புதிய ஜெர்சி மன்னார் மெசிடோ நிறுவனத்தினரால் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை கால் பந்தாட்ட சுற்றுப் போட்டிக்கு தெரிவாகியுள்ள அணியினர் மற்றும் பயிற்றுவிப்பாளருக்கான ஜெர்சியை பாடசாலை அதிபர் மற்று ஆசிரியர்கள் முன்னிலையில் மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் குழு தலைவர் ஜாட்சன் பிகிறாடோ தலைமையில் வைபவரீதியாக கையளிக்கப்பட்டது.

குறித்த பாடசாலை மாணவர்களுக்கு என ஒழுங்கான மைதானம் இல்லாத போதிலும் இருக்கின்ற மைதானமும் கடந்த சில நாள்களாக பெய்து வரும் மழை காரணமாக வெள்ளம் நிறைந்துள்ள நிலையில் இந்த மாணவர்கள் தேசிய ரீதியான போட்டியில் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (56)



## போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஒக்.26

வடமராட்சி கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் மனோகரா விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 11 வீரர்கள் பங்கு பற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் மனோகரா விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

பலாலி விண்மீன் விளையாட்டுக்கழக அணிக்கும், அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழக அணிக்கும், இடையிலான ஆட்டத்தில் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழக அணி 8:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

மற்றுமொரு ஆட்டத்தில் கரணவாய் மத்திய விளையாட்டுக்கழக அணிக்கும், சிறிஅம்பாள் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் கரணவாய் மத்திய விளையாட்டுக் கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (23)

---

யாழ்ப்பாணம்.ஒக்.26

பருத்தித்துறை லீக்கின் அனுமதியோடு கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் சுப்பர் 8 சுற்றின் ஆட்டங்கள் கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது. இதில் இமையாணன் மத்திய விளையாட்டுக் கழக அணிக்கும். நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் இமையாணன் மத்திய விளையாட்டுக் கழக அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 100 பந்து கிரிக்கெட் பிரபலமடையும்

## சங்ககார கணிப்பு

இங்கிலாந்து கிரிக்கெட் சபையால் அறிமுகம் செய்யப்பட உள்ள 100 பந்து கிரிக்கெட் தொடர் உலகளவில் பிரபலமடையும் என இலங்கை அணியின் முன்னாள் வீரரும், எம்.சி.சியின் தலைவருமான சங்கக்காரா கணித்துள்ளார்.

இங்கிலாந்து கிரிக்கெட் சபை 100 பந்து கிரிக்கெட் லீக் தொடரை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்தத் தொடர் அடுத்த வருடம் ஆரம்பமாகவுள்ளது. இதற்கான வீரர்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஏலம் எடுக்கப்பட்டனர்.

தற்போது உலகளவில் ரி-20 கிரிக்கெட் பிரபலமாகியுள்ளது. 100 பந்து போட்டியை சரியான வகையில் கொண்டு சேர்த்தால் உலகளவில் பிரபலமான தொடராக மாறும் என இலங்கை அணியின் முன்னாள் தலைவரும், எம்.சி.சியின் தலைவருமான குமார் சங்கக்காரா தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;

டெஸ்ட் கிரிக்கெட்டை உலகளவில் கொண்டு செல்ல மிகவும் கடினமாக இருக்கிறது. ஏனென்றால், அது காலா காலமாக இருந்து வருகிறது. அதிக அளவிலான அணிகளை ஊக்குவிக்க ரி-20 கிரிக்கெட் சிறந்ததாக இருக்கிறது.

அதேநேரத்தில், இங்கிலாந்தில் அடுத்த வருடம் 100 பந்து கிரிக்கெட் ஆரம்பமாகவுள்ளது. சிறப்பாக வேலை செய்து, அதை சிறந்த வகையில் கொண்டு சென்றால், உலகளவில் கொண்டு செல்வதற்கான கிரிக்கெட்டாக மாறும் - என்றார்.





ஆஸ்திரேலியாவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை கிரிக்கெட் அணியானது அந்த நாட்டுத் தலைமை அமைச்சர் ஸ்கொட் மொரிசனை சந்தித்துள்ளனர். இந்தச் சந்திப்பானது நேற்ற பயிற்சிப் போட்டி ஆரம்பமாவதற்கு முன்னர் இடம்பெற்றுள்ளது.

# இறுதியாட்டம்

யாழ்ப்பாணம், ஒக்.26

கொடுக்குளாய் சக்திவேல் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டச் சுற்றுத் தொடரின் இறுயாட்டம் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கொடுக்குளாய் சக்திவேல் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெறவுள்ளது. இறுதியாட்டத்தில் உடுத்துறை செந்தமிழ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து வலைப்பாடு மெசியா விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. இறுதிநாள் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக மருதங்கேணி பிரதேச செயலர் கு.பிரபாகரமூர்த்தி கலந்து கொள்ளவுள்ளார். (23)

# உப தலைவர் பதவி மிக்க மகிழ்ச்சி

## பில்லிங்ஸ் தெரிவிப்பு

நியூசிலாந்து தொடருக்கான இங்கிலாந்து அணியின் உப தலைவராக நியமிக்கப்பட்டது மிகப்பெரிய மதிப்பு என சாம் பில்லிங்ஸ் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்து அணி நியூசிலாந்துக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட ரி-20 தொடரில் விளையாடவுள்ளது. இதற்கான இங்கிலாந்து அணியின் உப தலைவராக சாம் பில்லிங்ஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுகுறித்து அவர் தெரிவிக்கையில்; இது போன்ற அங்கீகாரம் மிகப்பெரிய மதிப்பாகும். ஒரு தலைவராக பெயர் எடுக்க எனக்கு கிடைத்த வாய்ப்பு. கடந்த குளிர்கால பருவ காலத்தில் லயன்ஸ் அணித் தலைவரா இருந்துள்ளேன்- என்றார்.

## வடக்கின் நீலங்களின் சமர்


# கிளிநொச்சி மத்தி வலுவான நிலை

யாழ்ப்பாணம், ஒக்.26

வடக்கின் நீலங்களின் சமர் என வர்ணிக்கப்படும் கிளிநொச்சி இந்துக் கல்லூரிக்கும், கிளிநொச்சி மகா வித்தியாலயத்துக்கும் இடையிலான 10 ஆவது கடினப்பந்து துடுப்பாட்டத் தொடர் ஆட்டம் நேற்று வெள்ளிக்கிழமை கிளி நொச்சி இந்துக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற கிளிநொச்சி இந்துக் கல்லூரி அணி முதலில் களத்தடுப்பைதீர்மானித்தது. அதற்கமைய முதலாவது இன்னிங்ஸுக்காக துடுப்பெடுத்தாடிய கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய அணி 9 இலக்குகளை இழந்து 226 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை இடை நிறுத்தியது. அணி சார்பில் யுவேந்திரன் 70 ஓட்டங்களையும், கிருசாந் 48 ஓட்டங்களையும், பிரதாப் 31 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்து வீச்சில் பேபிவிசன் 4 இலக்குகளையும், தமிழ் மாறன் 3 இலக்குகளையும் கைப்பற்றினர்.

தனது முதலாவது இன்னிங்ஸுக்காக களமிறங்கிய கிளிநொச்சி இந்துக் கல்லூரி அணி 5 இலக்குகளை இழந்து 39 ஓட்டங்களைப் பெற்றது. அணி சார்பில் கோமுகிலன் 7 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றார். பந்து வீச்சில் பிரதீசன் 2 இலக்குகளையும் கிரிசாந், தனுசன் ஆகியோர் தலா ஒவ்வொரு இலக்கையும் வீழ்த்தினர். (23)



# மே.இ.தீவுகளுக்கு எதிரான ஆப்கான் அணி அறிவிப்பு

லக்னோவில் மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கெதிரான ஒருநாள் மற்றும் ரி-20 தொடர்களில் விளையாடுவதற்கான ஆப்கானிஸ்தான் அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தான் அணி மேற்கிந்தியத்தீவுகள் அணியை எதிர்த்து மூன்று ரி-20 மற்றும் 3 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடர்களில் விளையாடவுள்ளது. இதற்கான ஆப்கானிஸ்தான் அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டு வகையான ஆப்கானிஸ்தான் அணிக்கும் ரஷித் கான் அணித் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். அஸ்கர் ஆப்கன், முகமது நபி ஆகியோர் அணியில் இடம் பிடித்துள்ளனர். புதுமுக வீரர் பரீத் அகமது மாலிக் ரி-20 அணியில் இணைக்கப்பட்டுள்ளார்.

ஒருநாள் போட்டிக்கான அணியில் இலக்குக் காப்பாளராக இக்ராம் அலி கில் இணைக்கப்பட்டுள்ளார். இரு அணிகளுக்குமான போட்டிகள் அடுத்த மாதம் முதல் பகுதியில் ஆரம்பமாகின்றது.

இரு அணிகளுக்கும் இடையிலான ஒரே யொரு போட்டி கொண்ட டெஸ்ட் தொடர் நவம்பர் 27ஆம் திகதி இடம்பெறவுள்ளது.




# இங். எதிரான நியூசி. அணியில் வில்லியம்சனுக்கு இடமில்லை

இங்கிலாந்துக்கு எதிரான 5 போட்டிகள் கொண்ட ரி-20 கிரிக்கெட் தொடருக்கான நியூசிலாந்து அணியில் கேன் வில்லியம்சன் இடம்பெறவில்லை.

இங்கிலாந்து அணி நியூசிலாந்து சுற்றுப் பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட ரி20 கிரிக்கெட் தொடரில் விளையாடவுள்ளது.

இதற்கான நியூசிலாந்து அணி அறிவிக்கப்பட்டது. இதில் இடுப்பு பகுதியில் ஏற்பட்ட காயத்தால் அணித் தலைவர் கேன் வில்லியம்சன் அணியில் இணைக்கப்படவில்லை. வேகப்பந்து வீச்சாளர் டிம் சவுத்தி அணித் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இது குறித்து நியூசிலாந்து பயிற்சியாளர் கே தெரிவிக்கையில்; ரிஸ்மெட் வில்லியம்சனின் காயத்தை கண்காணித்து வருகிறோம். பங்களாதேஷுக்கு எதிராக மார்ச் மாதம் நடைபெற்ற டெஸ்ட் போட்டியின் போது எந்த வகையான காயத்தால் அவதிப்பட்டாரோ, தற்போதும் அதே காயத்தால் அவதிப்படுகிறார் - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிரெஞ்ச் பகிரங்க பூப்பந்தாட்டம்;

# பி.வி. சிந்து, சாய்னா காலிறுதிக்குத் தகுதி

பாரீஸ் நகரில் நடைபெற்று வரும் பிரெஞ்ச் பகிரங்க பூப்பந்தாட்டப் போட்டியில் சிந்து, சாய்னா காலிறுதிக்கு முன்னேறினர்.

பிரெஞ்ச் பகிரங்க பூப்பந்தாட்டப் போட்டி பாரீஸ் நகரில் நடைபெற்று வருகின்றது. இதில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற 2ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் இந்திய வீராங்கனை பி.வி. சிந்து, ஜப்பான் வீராங்கனை யோ ஜியா மின்னை எதிர் கொண்டார். இதில் சிந்து 21:10, 21:13 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று காலிறுதிக்கு முன்னேறினார்.

மற்றொரு ஆட்டத்தில் இந்திய வீராங்கனை சாய்னா நேவால், டென்மார் வீராங்கனை லினே ஹோஜ் மார்க்கை எதிர் கொண்டார். இதில் சாய்னா 21:10, 21:11 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று காலிறுதிக்குள் நுழைந்தார்.

# என்னுடைய நம்பிக்கை எப்போதும் உயர்வானது

வோர்னர் கருத்து

ஆஷஸ் தொடரில் மோசமான ஆட்டத்தை வெளிப்படுத்திய போதிலும், பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் இடம் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் உள்ளார் டேவிட் வோர்னர்.



ஆஸ்திரேலிய அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான டேவிட் வோர்னர் சமீபத்தில் முடிவடைந்த ஆஷஸ் தொடரில் மோசமான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். 5 டெஸ்ட் போட்டியிலும் அவரது சராசரி 9.50 ஆகும். இதனால் நவம்பர் மாதம் ஆரம்பமாகும் பாகிஸ்தானுக்கு எதிரான தொடரில் வோர்னருக்கு இடம் கிடைக்குமா? என்ற கேள்வி எழுந்துள்ளது.

இதுகுறித்து வோர்னர் தெரிவிக்கையில்; பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் வாய்ப்பு வழங்கப்பட்டால் சிறப்பாக விளையாடுவேன் என்ற நம்பிக்கை உள்ளது. ஆஷஸ் தொடருக்குப்பின் உள்ளூர் போட்டியில் சதம் அடித்துள்ளேன். என்னைப் பொறுத்த வரைக்கும் களம் இறங்கி தொடர்ச்சியாக சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த வேண்டும் என்பது தான் நோக்கம்.

என்னுடைய நம்பிக்கை எப்போதுமே உயர்வானதாகவே இருக்கும். என்னுடைய கிரிக்கெட் வாழ்க்கையில் முதன் முறையாக நெருக்கடிக்கு ஆளாகி ஓட்டங்களை சேர்க்க முடியாமல் திணறியுள்ளேன். நாங்கள் சொந்த மண்ணுக்கு திரும்பிய பின்னர், சில போட்டிகளில் ஓட்டங்களை அடித்துள்ளேன் - என்றார்.

## பிற்போடப்பட்டுள்ளது

மூளாய் விக்ரோறி விளையாட்டுக்கழகத்தினரால் நாளை (27.10.2019) ஞாயிற்றுக்கிழமை தீபாவளித் தினத்தன்று மாலை நடைபெற இருந்த அதிஸ்டலாப சீட்டிழுப்பு ஆனது தவிர்க்க முடியாத காரணத்தால் எதிர்வரும் (15.01.2020) புதன்கிழமை தைப்பொங்கல் தினத்தன்று மாலை 4.30 மணியளவில் மூளாய் சித்திவிநாயகர் தேவஸ்தானம் முன்றலில் இடம்பெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

**செயலாளர்,**
**மூளாய் விக்ரோறி விளையாட்டுக்கழகம்,**

அரிய சந்தர்ப்பம்
சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் துறையில் இணைய ஆர்வமா?
100% வேலை வாய்ப்பு



பயிற்சிக்காலத்திலேயே ரூ.1 லட்சத்திற்கும் மேல் வருமானம்
O/L Pass or Fail
CTHI
076 057 9999
021 314 6171
No.1544, K.K.S Road, Jaffna

## வேலைவாய்ப்பு

பிரபல முன்னணி நிறுவனத்தின் யாழ்நகரில் அமைந்துள்ள காட்சியறையில் இணைந்து பணியாற்ற ஆர்வமுள்ள இருபாலாரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. Customer Care Officer
2. Accounts Clerk

**உடன் விண்ணப்பிக்க வேண்டிய முகவரி :**
**விளம்பர இல : JF/1015, C/O உதயன்**
**361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
(CS 28927)(14,17)

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் ▸ 1063
சீட்டிழுப்பு திகதி ▸ 2019.10.24 வியாழக்கிழமை
J 40 45 51 55
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 80,246,504/-
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 772
வர்ணம் : ஊதா
சீட்டிழுப்பு திகதி: 2019.10.25
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 57,900,255/-
வெற்றி இலக்கங்கள் 21 24 53 69 X
விசேட வெற்றி இல. 1121
அபிவிருத்தி லொத்தர் சபை

ராசி அதிர்ஷ்டம்
திகதி 25.10.2019 வெற்றி வாரம் 2658 வர்ணம் கரு நீலம்
கன்னி
வெற்றி இலக்கங்கள் 09 10 20 33
சனிக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 3, 298, 742/=
26.10.2019ம் திகதி சனிக் கிழமை இளம் நீலம் நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே. 011 4824824 Web: www.dlb.lk

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் ▸ 291
சீட்டிழுப்பு திகதி ▸ 25.10.2019 சிவப்பு
ஆங்கில எழுத்து D
வெற்றி இலக்கங்கள் 14 28 57
விதி எண் 02
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 45, 981, 728/=
30.10.2019ம் திகதி புதன் கிழமை நீலம் நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர்.டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 011 333 546-47 துரித அழைப்பு: 0114 824 824 www.dlb.lk

## சிறுநீரகம் தேவை

0+ இரத்தவகையைச் சேர்ந்த **சிறுநீரகம்** அவசரமாக தேவை.
076 343 4999

## வீடு விற்பனைக்கு

பண்டத்தரிப்பு சந்திக்கு அருகாமையில் சண்டிலிப்பாய் செல்லும் வீதியில் ஆறுபரப்பு காணியுடன் ஆறு அறைகளும், இரண்டு கோல்களும் மற்றும் வீட்டுடன் இணைந்த இரண்டு கடைகளும் விற்பனைக்கு உண்டு.
075 0404 452, 077 8249 281

## பண்ணையுடன் காணி விற்பனைக்குண்டு

இளவாலையில் 15 பரப்புக்காணி பண்ணையுடன் விற்பனைக்குண்டு.
077 361 1301

அமெரிக்க லொத்தர் இலவச விசா
0768226241
V2 Travels
யாழ்ப்பாணம் 0768226243 | கிளிநொச்சி 0768226240
நெல்லியடி 0776699892 | சாவகச்சேரி 0768226242
திருகோணமலை 0768226237 | மானிப்பாய் 0768226238
சுன்னாகம் 0764550670 | கொடிகாமம் 0764550675
புதுக்குடியிருப்பு 0764550673 | மருதங்கேணி 0764550671
பருத்தித்துறை 0768226230 | வல்வெட்டித்துறை 0776697960

FLC FRENCH LANGUAGE CENTRE
Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட
பிரெஞ்ச் Courses
V. Jegan(Trained in France)
40, பலாலி வீதி, ஆரியகுளம். 0779 789 456 / 021 221 7781 ஆரம்பம் : 02.11.19 சனி 8 மணி
181, பிரதான வீதி, நெல்லியடி 0779 789 456 ஆரம்பம் 04.11.19 3.30 மணி
திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1, Spoken English மற்றும் IELTS வகுப்புக்களும் நடைபெறுகின்றன.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 26.10.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org